திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

4 - DEC 1965

ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, ஆலங்குடி.

மாலை 8] விசுவாவசு கார்த்திகை—டிசம்பர் 1965 [மணி 3

சென்னை அரசாங்க அறநிலையப்

சென்னைத் திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலுக்குப் பாரதப் பிரதமர் அவர்கள் வருகை தருதல் (21-11-65)

பொருள் அடக்கம்

1. கம்பர் தரும் கவிதையின்பம்.
2. விடை தெரியுமா ?
3. விடை விளக்கம்.
4. சங்கற்ப நிராகரணம்.
5. தெய்வம் தெளிமின், தெளிந்தோர்ப் பேணுமின்.
6. சிவஞான போதம்.
7. வைஷ்ணவ குருபரம்பரை
8. உள்ளுறை பொருளாராய்ச்சி.
9. திருப்பாதிரிப் புலியூர்க் கல்வெட்டுக்கள்.
10. பரசிவமும் அருவுருவத் திருமேனிகளும்.

ஆண்டுச் சந்தா ரூ. 10/- **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "**திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34**" என்னும் முகவரிக்கு ரூபா **பத்து** அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த மாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப்பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது. —ஆசிரியர்.

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 8] விசுவாவசு கார்த்திகை-டிசம்பர் [மணி 3

DEC 1965

கம்பர் தரும் கவிதையின்பம்

முன்னுரை :

இவ்வுலகில் உள்ள எல்லா உயிர்களும் இன்ப நுகர்ச்சி ஒன்றனையே தத்தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றன. "எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது. தான் அமர்ந்து வரூஉம் மேவற் றாகும்" என்பது **தொல்காப்பியம்**. மனிதவுள்ளம் இவ்வின்ப நுகர்ச்சியினைப் பல்வேறு வழிகளால் எய்த முயலுகின்றது. இம்மை வாழ்க்கையில் ஒருவன் அடைய முயலும் இன்பப் பேறுகள் பலவற்றுள்ளும், தூயதாய் எளியதாய்ச் சிறந்ததாய்த் துலங்குவது, கவிதையின்பமே யாகும் எனலாம்.

உலகியற்கைப் பொருள்களிற் காணப்படும் பலதிற அமைதியின்ப அழகினை ஆழ்ந்து ஆராய்ந்துவரும் **சான்றோர்**களுக்கும், மனித வாழ்க்கையின் மூலை முடுக்கர்களில் ஒதுங்கி மறைந்து கிடக்கும் நுண்பொருள்களை நுனித்தறிய முயலும் **அறிஞர்**களுக்கும், சமயத் துறையிலும் தத்துவ நெறியிலும் உயர்ந்துயர்ந்து சென்று ஈடுபட்டுத் திளைக்கும் **மெய்யுணர்வாளர்**களுக்கும், ஒழுக்கத் தூய்மையிலும் இறையருளுணர்விலும் சிறந்து அவற்றின் அமைதியின்ப நலத்தினையே விழைந்து நிற்கும் **அருளாளர்**களுக்கும், நிலைத்த அழகுடையதாய்த் திறம்பட நெஞ்சங் கவர்வதாய்த் திண்ணிய பயனுடையதாய்த் திகழுவது, சிறந்ததொரு கவிதையினைப் படித்துச் சுவைத்து மகிழ்வதிலும் வேறு பிறிதொன்றில்லை *(1)*.

அரியநல் இயற்கை அழகினை ஆராய்ந்
   தகங்களித் தின்புறு வோர்க்கும்,

மருவுமிவ் வாழ்க்கை மறைபொருள் பலவும்
   மதித்துணர் அறிஞர்கள் தமக்கும்,

---

(1) "To a **mind** brooding on the silent beauty exhibited in the varied phenomena of nature, to an **intellect** diving deep into the mysteries that lie in the inmost corners of life, to a **soul** soaring high into ethereal regions of religion and philosophy, to a **spirit** seeking serene rest in moral sanctity and Divine grace, nothing appears so permanently beautiful, so certainly impressive and effective as the study of a fine piece of **poetry.**"

—Maraimalai Adikal.

விரிவுறு சமய மெய்யுணர் வொளியில்
விரும்பிமேன் மேற்படர் பவர்க்கும்,

திருவருள் ஒழுக்கம் செறிந்தது ாயவர்க்கும்
சிறந்தநற் கவிதையே இன்பாம்! (1)

இயற்கைஎழிற்கு இன்புறுதல், வாழ்வியலைத்
தேர்தல்

மயற்கையறும் மெய்யுணர்வு வானில்—
உயர்ச்சியுறல்

நல்லொழுக்கில் நின்றருளை நாடல்;
உடையவர்கட்கு

இல்லை கவிதையிற்போல் இன்பு! (2)

—கவிதை மொழி பெயர்ப்பு, ஆசிரியர்

கம்ப நாடன் கவிதை:

தமிழ்மொழிக்கு எத்தனையோ பல சிறப்புக்கள் உண்டு. ஏராளமான இனிய சிறந்த கவிதைகளைப் பெற்றிருத்தலும் அவைகளுள் ஒன்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட காலம் தொட்டே, தமிழிற் சிறந்துயர்ந்த கவிதை இலக்கியங்கள் தோன்றி வளர்ந்து வருகின்றன. தமிழைப்போலப் பழமையும் பெருமையும் வாய்ந்த சிறந்த கவிதை இலக்கியங்களைப் பெற்றுள்ள மொழிகள், உலகில் ஒரு சிலவே யாகும். பொதுவாக எல்லா வகையான மக்களும் எளிய இனிய முறையிற் கவிதையின்பம் துய்த்து மகிழ்தற்குத் துணைபுரிவது, **கம்ப ராமாயணம்** என்னும் கவின்மிகு நூலே எனலாம்.

அதன்கண் கதையின் சிறப்பும், கருத்தின் வளமும், கவிதையின் எழிலும் ஒருங்கே பொருந்தி ஒளிர்கின்றன. எல்லாச் செல்வங்களையும் பெற்று, இவ்வுலகம் முழுவதையுமே அரசாட்சி புரிந்தாலும்; அல்லது தேவருலகம் சென்று, அங்கே கற்பகமர நீழலில் அமர்ந்து, எத்துணைப் போகங்களைத்தான் நுகர்ந்தாலும்; கற்றவர்களின் உள்ளத்தினைக் களிப்படையச் செய்வது **கம்பநாடன் கவிதை** ஒன்றேயாகும். அதனைப் போலக் கற்றவர்களின் உள்ளத்தைக் களிதுளும்பச் செய்வது வேறு பிறிதொன்றில்லை,

"கம்ப நாடன் கவிதையிற்போற்
கற்றோர்க் கிதயம் களியாதே"

கம்பரின் சிறப்பு:

கம்ப நாடரின் கவிதைச் சிறப்பு, கட்டுரைத்தற்கு எளிய தொன்றன்று. பெண்களிலெல்லாம் **திருமகள்** போலவும், விண்மீன்களிலெல்லாம் **சூரியன்** போலவும், உலகிலுள்ள மலைகளிலெல்லாம் **இமயமலை** போலவும், ஈடும் எடுப்பும் இன்றிச் சிறந்துயர்ந்து திகழ்வது கம்பராமாயணம். அதனைப் போன்ற கவின்மிக்க நூல் வேறொன்றனை நாம் காண்பதரிது.

"கம்ப ராமா யணம்போற்
கவின்மிகு நூலும் காணேம்"

இவ்வாற்றால், கம்பராமாயணம் கவின் மிகச் சிறந்த ஒரு பெருங் கவிதை இலக்கியம் என்பது தெளிவாம். கம்பரின் கவித்திறனை யுணர்வதற்கு அவர்தம் நூல் முழுவதுமே சான்றாகும் எனினும் **'நெஞ்சின் மிக்கது வாய் சோரும்'** என்னும் உண்மைக்கு ஏற்ப, அவர் தம்நூலின் இடையிடையே தமக்கே இயல்பான கவிதையுள்ளமும் உணர்வும் வெளிப்படுமாறு, கவிதையோடு தொடர்புடைய செய்திகளை உவமைகளாக ஆங்காங்குக் கூறிச் செல்லுதல், அவருடைய தனிப் பெருஞ் சிறப்பினை யாவர்க்கும் அறைகூவி விளக்குகின்றது.

கவிஞன் செயல்:

உலகப் பெருங்கவிஞர்களுள் ஒருவராகிய **ஷேக்ஸ்பியர்,** தம்முடைய நூல்களில் அங்கங்கே கவிதை பற்றியும், நடிப்பினைப் பற்றியும் குறிப்பிட்டுச் சென்றிருத்தல், ஈண்டு நாம் எண்ணி உளங் கொள்ளுதற்கு உரியது.

"கவிஞனின் கண்ணானது, மிகச் சிறந்ததோர் உள்ளெழுச்சியினால் விண்ணில் இருந்து மண்ணையும், மண்ணிலிருந்து விண்ணையும் சுற்றிச் சுழன்று அளந்து பார்வையிடுகின்றது; பிறர் காணவும் கருதவும் இயலாத பொருள்களின் இயல்புகளைக் கற்பனை யுணர்வானது உருவாக்கித் தரத்தர, அவைகளைக் கவிஞனின் எழுதுகோல் எழில் கனிந்த வடிவங்களாக இனிது தீட்டுகின்றது; காற்றுப் போல நுண்ணியனவாய்க் காணப்படாமை

யின் இல்லனவாய் விளங்கும் அவற்றிற்கு ஓர் உறைவிடமும் பெயரும் அளிக்கின்றது" (2)

என்று **ஷேக்ஸ்பியர்** தம்முடைய 'ஒரு நடுவேனிலின் இரவுக் கனவு' என்னும் நூலிற் பாடியிருப்பது, ஒரு கவிஞர் என்ற நிலையில் அவர் எத்தகையவர் என்பதனை, நாம் உணர்வதற்குத் துணைபுரிகின்றது.

நடிப்புக்கலைக் குறிப்பு:

இங்ஙனமே மிகவும் புகழ்பெற்ற பிறிதொரு நூல் ஆகிய **ஹாம்லெட்** என்னும் நாடகத்தின் கண், மிகச் சிறந்த நடிகராகவும் விளங்கியிருந்த ஷேக்ஸ்பியர், தம்முடைய நடிப்புக் கலையுணர்வின் நலமனைத்தும் விளங்கும் வண்ணம் வழங்கியுள்ள ஒரு சில குறிப்புக்களும், இங்கே இயைபுபற்றி நாம் அறிந்து கொண்டு இன்புறுதற்குரியன.

"நீங்கள் உங்கள் பேச்சுக்களை நயமாகவும் பொருத்தமாகவும் பேசுங்கள். கூச்சலிட்டுக் கத்தாதீர்கள். காற்றை ஈர்வாள் (Saw) கொண்டுஅறுப்பதுபோன்று, கைகளை மேலும் கீழும் ஆட்டிக் குதிக்காதீர்கள். அமைதியாகப் பெருந்தன்மை தோன்ற நடியுங்கள். உணர்ச்சியினைப் புயலும் சூறுவளியும் போல ஆக்கிச் சிதைத்து விடாமல், அளவாகவும் செம்மையுடனும் வெளியிடுங்கள். உணர்ச்சியினை அளவுக்கு மீறி மிகைப்படுத்தி, இரைச்சலும் கூச்சலும் இட்டுப் பேசி, சுவைத்திறன் இல்லாத தரையாளர்களைக் (groundlings) களிப்பூட்ட முயலாதீர்கள். மிகைப்படுத்தி நடிப்பவர்களின் உரையாடலைக் கேட்பது, என் உள்ளத்தைப் பெரிதும் துளைத்து வருத்துகின்றது. அளவுக்கு மீறி நடிப்பவனைச் சவுக்கினால் அடித்து ஒறுத்தலை நான் விரும்புகின்றேன். அத்தகையவன் செயல், ஏரோதையே (Herod) விஞ்சும் ஏரோது போல இருக்கின்றது. மிகை நடிப்பை விலக்கி விடுமாறு உங்களை யான் பெரிதும் மன்றாடி வேண்டுகின்றேன்.

அதன் பொருட்டு மிகுந்த கோழை போலவும் ஆகிவிடாதீர்கள். உங்கள் அறிவின் திறனையே ஆசானாகக்கொண்டு, ஏற்றபடி இனிதாக நடியுங்கள். சொல்லுக்குச் செயலும், செயலுக்குச் சொல்லும் ஒத்திருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். இயற்கையினை உள்ளது உள்ளபடியே விளக்கிக் காட்டுவது தான், நடிப்பின் குறிக்கோள். அளவிற்கு மிகவோ குறையவோ நடித்தால், ஒருவேளை அறிவில்லாதவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரலாம்! ஆனால் அறிவுடையவர்களுக்கு அது வருத்தத்தையே விளைவிக்கும். மனித இயல்பைப் "போலச் செய்து" காட்ட (imitate) மாட்டாமல், காண்போர்க்கு அருவருப்பை உண்டாக்கி விடுபவர்களை, மனிதர்கள் என்றே நான் மதிக்கமாட்டேன்... நகை வேழம்பர்கள் (Clowns) என நடிப்பவர்கள், தங்களுக்கென்று எழுதப்பெற்ற வசனத்தை மட்டுமே பேசுக. அவர்கள் தம் மனம் போனபடி எதனையும் உளறுமல் இருப்பது இன்றியமையாதது......"(3)

---

(2) "The poets eye, in a fine frenzy rolling,
Doth glance from heaven to earth, from earth to heaven,
And as imagination bodies forth
The form of things unknown, the poet's pen
Turns them to shapes, and gives to airy nothing
A local habitation and a name."
—*Shakespeare*, A Midsummer Night's Dream.

(3) "Speak the speech, I pray you, as I pronounc'd it to you, trippingly on the tongue...... Nor do not saw the air too much with your hand, but use gently... for in the very whirlwind of your passion, you must acquire and beget a temperance that may give it smoothness.

O, it offends me to the soul to hear a robustious periwig-pated fellow tear a passion to tatters, to very rags, to split the ears of the groundlings....... I would have such a fellow whipp'd for o'er doing Termagant; it out-herods Herod. Pray you avoid it.

Be not too tame neither, but let your discretion be your tutor. Suit the action to the word, the word to the action; with this special observance, that you over-step not the modesty of nature... The purpose of playing is to hold, as it were, the mirror up to nature...

Let those that play your clowns speak no more than is set down for them......
—*Shakespeare, Hamlet*, 3; 2: 1-43

இக்குறிப்புக்களின் வாயிலாக, ஒரு நடிகர் என்ற நிலையில் ஷேக்ஸ்பியர் எத்தகைய அநுபவமும் உணர்வும் வாய்ந்து விளங்கியிருந்தார் என்பதனை, நாம் அறிந்து கொள்ளப் பெறுகின்றனம் அல்லமோ?

நெஞ்சின் மிக்கது வாய்சோரும் ;

இவ்வாறு ஷேக்ஸ்பியர் தம் இயல்பும் உணர்வும் புலனாகுமாறு இடையிடையே சில சில குறிப்புக்களை 'நெஞ்சின் மிக்கது வாய் சோரும்' என்னும் உண்மைக்குப் பொருந்த விடுத்துச் சென்றுள்ளமை போலவே, கம்பரும் தம் கவியுள்ளமும் கருத்தும் புலப்படுமாறு தமது நூலிற் சிற்சில குறிப்புக்களைப் பொறித்துப் போந்தருளியுள்ளார், கம்பராமாயணம் முழுவதையும் நன்கு நுனித்து ஆராய்ந்து கற்பவர்களுக்கு, இடையிடையே போதரும் அவர்தம் கவிதையியற் குறிப்புக்கள் ஆராப் பெரு விருந்தாக அமையும். இங்கு இயன்றவரையில் நாம் ஒரு சிறிது ஆராய்ந்து கண்டு மகிழ்வோம் !

கவிஞரும் சொல்லும் :

(1) அயோத்திமா நகரம் கவிஞர்கள் அனைவராலும் புகழப் பெற்றது. வடநூல் முனிவர்கள் பலரும் போற்றி வாழ்த்தியது. தேவர்களும் கூடத் தம்முடைய உலகத்தை விட்டு இறங்கிப் போந்து, தங்கி வாழ்வதற்கு விரும்புகின்ற அத்தனை மாட்சிமை வாய்ந்தது.

செவ்விய மதுரம் சேர்ந்தநற் பொருளிற்
சீரிய கூரிய தீஞ்சொல்

வவ்விய கவிஞர் அனைவரும், வடநூல்
முனிவரும் புகழ்ந்தது; வரம்பில்

எவ்வுலகத்தோர் யாவரும் தவம்செய்து
ஏறுவான் ஆதரிக் கின்ற

அவ்வுலகத்தோர் இழிவதற்கு அருத்தி
புரிகின்றது, அயோத்திமா நகரம்.

—நகரப்படலம் 1

இப்பாடலின்கண் அயோத்திமா நகரினைப் புகழ்தலே கம்பரின் கருத்தாயினும் கவிஞர்களைப் பற்றியும், அவர்கள் வழங்கும் சொற்களைப் பற்றியும் கூட, அவர் இடைப்பிறவரல் போலக் குறிப்பிட்டிருக்கும் திறம், நினைத்துணர்ந்து மகிழத்தக்கது. கவிஞர்கள் கையாளும் சொற்கள் செம்மையுடையவை; மதுரம் சேர்ந்தவை ; நற்பொருள் உணர்த்துபவை ; சீரியவை; கூரியவை; தீவியவை; (இனிமை மிக்கவை) என்கிறார். இத்தகைய சொற்களைக் கையாளும் திறமை பெற்றவர்கள் தான் **கவிஞர்கள்** ஆவர் எனவும் சுட்டுகின்றார்.

செவ்விய மதுரம் சேர்ந்தநற் பொருளிற்
சீரிய கூரிய தீஞ்சொல்

வவ்விய கவிஞர்……………

எனவரும் வரிகள், கம்பரின் கவிதையுணர்வையும், கவிதை குறித்து அவர் கொண்டிருந்த பல அநுபவம் மிக்க கருத்துக்களையும், புலப்படுத்துதல் காணலாம்.

புன் கவியின் தெளிவின்மை :

(2) அயோத்திமா நகரம் உயர்ந்த மதில்களையுடையது. அவற்றைச் சுற்றிக் கடல் போன்ற பெரிய அகழி அமைந்துள்ளது. அதன் ஆழம் பொன்வில்லை மகளிர் மனம்போன்று அளவிட்டு அறிய முடியாதது; புலமை நலம் நிரம்பப் பெறாத ஒருவனுடைய **புன்கவியைப்** போலத் தெளிவின்றிக் கலங்கிய நீரையுடையது; கன்னி மகளிர் தங்கி வாழும் அந்தப்புரம் போலப் பகைவரால் எளிதில் அணுகுதற்கு இயலாத அரிய பெரிய காவல்களையுடையது; நன்னெறியிற் புகமுடியாமல் புன்னெறியில் வீழ்த்தி நம்மை வருத்தும் ஐம்பொறிகளைப் போன்று, கொடிய வலிய முதலைகள் ஏராளமாக இருப்பது.

அன்னமா மதிலுக்கு ஆழிமால் வரையை
அலைகடல் சூழ்ந்தென அகழி,

பொன்விலை மகளிர் மனம் எனக் கீழ்போய்ப்,
புன்கவி எனத்தெளிவு இன்றிக்

கன்னியர் அல்கும் தடமீன யார்க்கும்
படிவரும் காப்பின தாகி,
நன்னெறி விலக்கும் பொறிஎன எறியும்
கராத்தது நவிலலுற் றதுநாம்.

—நகரப்படலம், 14

1. ஆழிமால் வரை — சக்கரவாள மலை
2. 'அல்கும் தடம்' — தங்கி வாழும் இடம், அந்தப்புரம்.
3. அல்குதல் — தங்குதல், வாழ்தல்
4. 'அல்குற்றடம்' என்பது பிழையான பாடம்.
5. கராம் — முதலை
6. கராத்தது — முதலைகளையுடையது

அகழியின் இயல்பினை விளக்குதற்கு அழகிய **நான்கு** உவமைகளை ஆராய்ந்து கூறியருளிய கம்பர், 'புலமை நிரம்பாத நிலையில் ஒருவன் பாடும் **புன் கவிகள்** பொருட்டெளிவு இல்லாமல், பயில்வோர்க்கு ஐயங்களை மிகுவித்து மயக்கமே விளைத்துக் கேடு சூழும்' என்னும் உண்மையினை, உணர்த்தி யிருத்தல் உளங் கொளத் தக்கது.

செஞ்சொற் கவியின்பம் :

(3) இராமபிரான் விசுவாமித்திர முனிவருடன் மிதிலைமா நகருக்குச் செல்கின்றார். மிதிலை நகரின் அழகிய பல் வேறு காட்சிகளைக் கண்டு மகிழ்ந்து கொண்டே, அதன் வீதிகளில் அவர் நடந்து போகின்றார். அதுபோது மிதிலை நகர அரண்மனையின்கண் உள்ள கன்னி மாடத்தின் மேலிடத்தில், அன்னங்கள் கூடி விளையாடி இன்புறும் இடத்திற்கு முன்புறத்தில், சீதைப் பிராட்டி நின்று கொண்டிருக்கின்றாள். அங்ஙனம் சீதை நின்று கொண்டிருத்தலை இராமபிரான் காண நேர்கின்றது. அந்தச் செய்தியைக் கம்பர் சொல்ல வருகின்றார்.

'சீதையின் அழகினை இராமபிரான் காண்கின்றார். சீதையோ பேரழகு வாய்ந்தவள். அவளது அழகின் அளப் பருஞ் சிறப்பினை யெல்லாம் விளக்க முயல்கின்றார் கம்பர்! அவருக்கு ஓர் உவமை போதவில்லை. பல உவமைகளைக் கூறுகின்றார். பொன்னின் சோதியும், பூவின் நறுமணமும், தேனின் தீஞ்சுவையும் போலச் சீதைப் பிராட்டி பொலிந்து தோன்றினாள் என்கின்றார். அப்போதும் அவருக்கு மன நிறைவு ஏற்படவில்லை. ஆதலின் சிறந்த கவிஞன் ஒருவன் செம்மையான சொற்களால் யாத்த ஒரு சிறந்த கவிதையினால் விளையும் இன்பம் எத்தகையதாக இருக்குமோ, அவ்வாறு சீதை பொலிந்து நின்றாள் எனப் பாடி இன்புறுகின்றார்.

பொன்னின் சோதி, போதினில் நாற்றம்
பொலிவே போல்,
தென்னுண் தேனில் தீஞ்சுவை,
செஞ்சொற் கவியின்பம்;
கன்னிம் மாடத் தும்பரின் மாடே
களி பேடோடு
அன்னம் ஆடும் முன்துறை கண்டு
ஆங்கு அயல் நின்றார்.

—மிதிலைக்காட்சிப் படலம், 23

ஒரு காலத்து ஒரு பொறிக்கு மட்டுமே இன்பம் தரவல்ல பொருள்கள், உலகிற் பல உண்டு. ஆனால் ஐம்பொறிகளுக்கும் ஒரு சேர இன்பம் தரவல்ல பெருமை, பெண்களுக்கே யுரிய தாம். இதனைக் "கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே யுள" எனத் தெய்வப் புலவர் **திருவள்ளுவர்** கூறுவர். இம்முறையிற் சீதைப் பிராட்டியின் பேரழகு, இராமபிரானின் ஐம்பொறிகளுக்கும் ஒரு சேரப் பேரின்பம் தரவல்ல நிலையிற் சிறந்து பிறங்கிற்றும். இதனை விளக்குவதற்குக் கம்பர் பொன்னின் சோதி, போதினில் நாற்றம், தேனில் தீஞ்சுவை என்பவற்றோடு, 'செஞ்சொற் கவியின்பம் எனவும் சீதைப் பிராட்டி பொலிந்து திகழ்ந்தாள்' எனக் குறிப்பிட்டருளி யுள்ளார். இதனால், கம்பர் கவிதை யின்பத்தினை எவ்வளவு மேலாக மதித்துப் போற்றினர் என்பது தெளிவாம். இல்லையேல், சீதை

யினையே அவர் ''செஞ்சொற் கவியின்பம்'' என்று சிறப்பித்து உருவகம் செய்து பாடியிருத்தல் இயலாது என்பது திண்ணம்.

சான்றோர் கவி :

(4) இராமபிரான் தம் தந்தையாகிய தசரதனின் கட்டளைப்படி, சீதையோடும் இலக்குவனோடும் காட்டிற்குச் செல்லு கின்றார். அங்கே அகத்திய முனிவர், 'நீவிர் உறைவதற்கு ஏற்ற இடம் கோதாவரிக் கரையில் உள்ள பஞ்சவடி என்னும் ஆச்சிரமமே யாகும்' என்று கூறுகின்றார். வழியில் அவர்கள் சடாயுவைச் சந்தித்து மகிழ்கின்றனர். சடாயு அவர்களுக்குப் பஞ்சவடிக்குச் செல்லும் வழியினைக் காட்டுகின்றார். மூவரும் கோதாவரி நதி தீரத்தை அடைகின்றனர். அக்கடவுள்மா நதியின் அழகும் சிறப்பும் கண்டு இன்புறுகின்றனர்.

புவியினுக் கணியாய், ஆன்ற
பொருள்தந்து, புலத்திற் றாகி,
அவியகத் துறைகள் தாங்கி,
ஐந்திணை நெறி அளாவிச்,
சவியுறத் தெளிந்து, தண்ணென்
றொழுக்கமும் சான்று, சான்றோர்
கவிஎனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்!

—சூர்ப்பநகைப்படலம், 1.

இங்ஙனம் கோதாவரியினை வீரர் கண்டார் என்பதொன்றே கம்பர் பாடவேண்டுவது ஆயினும், கோதாவரியின் வெள்ளம் போல, அவர்தம் கவிதையுள்ளத்திற் கற்பனை வெள்ளமும் பெருகிவிடுகின்றது ஆதலின், கோதாவரி நதியினைச் சான்றோர் கவிதையோடு ஒப்பிட்டுக் காட்டி, உள்ளம் களிதுளும்புகின்றார் கம்பர்!

கோதாவரி நதியானது தான் பாயும் நாட்டிற்கு அழகும் சிறப்பும் அளிக்கின்றது; செழிப்பை உண்டாக்கி விளைபொருள்களை மிகுவிக்கின்றது; வெள்ளப் பெருக்கின் மிகுதியினால் பற்பல கால்வாய்களின் வாயிலாக எங்கும் பரவி நிறைகின்றது; இறங்கு நீர்த் துறைகள் பலவற்றை அங்கங்கே கொண்டு ஒளிர்கின்றது; மலை காடு வயல் மணல்வெளி கடற்கரை என்னும் ஐவகை நிலப்பகுதிகளின் வழியாகவும் ஓடிப் பாய்ந்து பயன் தருகின்றது; பளிங்கு போல விளங்கி மிகவும் தெளிந்து காணப்படுகின்றது; வற்றாத பெருநதியாதலால் குளிர்ச்சி நிரம்பி இடையறாமல் ஓடிக் கொண்டே இருக்கின்றது.

சான்றோர் அருளிய **கவிதையோ,** நாட்டிற்குச் சிறப்பை யளித்து, உலகுக்கும் நலம் பயக்கின்றது. அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பெரும் பொருள்களையும் நல்குகின்றது; கற்பவர்களின் அறிவுக்கு விருந்தாக அமைகின்றது. அகத்திணை புறத்திணை என்னும் பொருட்டுறைகளை யுடையதாய்ப் பயில்பவர்க்குக் கவலைகளை நீக்கி ஆறுதல் அளிக்கின்றது. குறிஞ்சி முல்லை பாலை நெய்தல் மருதம் என்னும் ஐந்திணை வளங்களையும், அவற்றிற்குரிய புணர்தல் இருத்தல் பிரிதல் இரங்கல் ஊடல் என்னும் ஐவகை ஒழுகலாறுகளையும் பற்றிச் செவ்விதின் விளக்குகின்றது. நமக்கு எழும் ஐயங்களை நீக்கித் தெளிவு பெறச் செய்கின்றது. மெல்லென்ற ஓசையுடன் தடையறச் செல்லும் நடையழகு பெற்று விளங்குகின்றது. இங்ஙனம்,

1. புவியினுக்கு அணியாதல்
2. ஆன்ற பொருள் தருதல்
3. புலத்திற்றாதல்
4. அவியகத்துறைகள் தாங்கல்
5. ஐந்திணை நெறி அளாவல்
6. சவியுறத் தெளிதல்
7. தண்ணென்று ஒழுக்கம் தழுவல்

என்னும் பலவகை ஒப்புமைகளும், கோதாவரி நதிக்கும் சான்றோர் கவிதைக்கும் இடையே விளங்குதலைச் சுவை பெருகவும், **சிலேடை** என்னும் அணிநலம் அமையவும் பாடியிருக்கும் கம்பரின் கவிதைத் திறம், சாலவும் பாராட்டிக் களிப்பதற்குரியது.

கவிஞர் சொற்பொருள்:

(5) இராமபிரான் **சபரிக்கு** வீடுபேறு அளித்த பின்னர்ப் பம்பை என்னும் பெரிய பொய்கையினை அடைகின்றார். ஆதலின் கம்பர் அதன் சிறப்பினைப் புனைந்து பாட முற்படுகின்றார். **பம்பைப்** பொய்கை மிகவும் அழகானது. கீழே பாதாளம் வரையில் ஆழ்ந்து சென்று, நாகர்கள் வாழும் இடம் இதுதான் என்று காட்டக்கூடிய தன்மை அதற்கு உண்டு. அத்தகைய அதன் ஆழம், சிறந்த கவிஞர்கள் பயன்படுத்தும் சொற்களின் பொருள்கள் எங்ஙனம் மிகவும் ஆழ்ந்து ஆழ்ந்து நுணுகிச் செல்லுமோ, அங்ஙனம் பெரிதும் நெடிது ஆழ்ந்து சென்றுள்ளது என்கின்றார்.

> எற்பொரு நாகர்தம் இருக்கை ஈதெனக்
> கிற்பதோர் காட்சிய தென்னினும் கீழுறக்
> கற்பகம் அனையஅக் கவிஞர் நாட்டிய
> சொற்பொருள் ஆம்எனத் தோன்றல் சான்றது
>
> —பம்பைப்படலம், 5

கற்பக மரம் நினைத்த பொருளையெல்லாம் விரைந்து கொடுக்க வல்லதாதல் போல, உள்ளத்திற்கு இனிய பொருள்களைப் பற்றியெல்லாம் உடனே தங்கு தடையின்றி விரைந்து பாட வல்லவர்களே **கவிஞர்கள்!** அத்தகைய சிறந்த கவிஞர்கள் வழங்கும் சொற்கள் மாட்சிமை மிக்கனவாக விளங்கும்; அவற்றின் ஆழ்ந்த அழகிய நுண்பொருள்கள் ஆராயுந்தோறும் மேன்மேல் விரிந்து வளர்ந்து செல்லும் இயல்பினவாகத் திகழும். இவ்வுண்மையினைக் கம்பர் இப்பாடலிற் செம்மையுற விளக்கியிருக்கும் தன்மை, கற்போர்க்குக் களிபேருவகை பயப்பதாகும்.

நாவரும் கிளவிச் செவ்வி நடை:

(6) இராமபிரான் திருவுள்ளப்படியே **சுக்கிரீவன்**, வானர வீரர்களை நான்கு திசைகளுக்கும் சென்று சீதையைத் தேடி வருமாறு அனுப்புகின்றான். அதுபோது சுக்கிரீவன் கட்டளைக்கேற்பத் தென்றிசை நோக்கிச் செல்ல இருக்கின்ற **அநுமான்**பால், இராமபிரான் சீதைப்பிராட்டியின் அடையாளங்களை யெல்லாம் எடுத்துக் கூறியருள்கின்றார். சீதையின் நடையழகு தேவர்களும் கண்டு வியந்து வணங்கத் தக்கது. அன்னத்தின் நடையோ, பிடியின் நடையோ, அதற்கு ஒரு சிறிதும் ஈடாகமாட்டா. சிறந்த புலவர் பெருமக்களின் நாவிலே இருந்து பெருகும் அழகிய கவிதையின் நடை (Style and Diction) எத்தனை அழகும் சிறப்பும் உடையனவாக மிளிருமோ, அத்தகைய நடையழகினை யுடையவள் **சீதை** என்று இராமபிரான் இயம்பியதாகக் கம்பர் கவினுறப் பாடியருள்கின்றார்.

> பூவரும் மழலை அன்னம்
> புனைமடப் பிடியென் றின்ன
> தேவரும் மருளத் தக்க
> செலவின எனினும் தேறேன்;
> பாவரும் கிழமைத் தொன்மைப்
> பருணிதர் தொடுத்த பத்தி
> நாவரும் கிளவிச் செவ்வி
> நடைவரும் நடையள் நல்லோய்
>
> —நாடவிட்ட படலம், 64

இதன்கண் 'குலவித்தை கல்லாமற் பாகம்படும்' என்றபடி, தொன்று தொட்டுப் பாரம்பரியமாக வரப்பெறும் புலமை சிறப்புடையதாகலின் அத்தகைய புலவர் பெருமக்களைத் **தொன்மைப் பருணிதர்** என்று சிறப்பித்தார். அத்தகைய சிறந்த புலவர்களுள்ளும் ஒரு சிலர்க்கே முயலவேண்டாமல் எளிதாகக் கவிபாடும் ஆற்றலும் பேறும் வாய்க்குமாகலின் **பாவரும் கிழமை** என்று பாராட்டினார். அனைய கவித்திறம் அமையப் பெற்றவர்களின் நாவினின்று மலரும் சொற்களும் சொற்றொடர்களும் தாமே ஒழுங்குபட்டு வரிசையின் அமைந்து, செம்மை மிக்குச் சிறந்த நடையழகு வாய்ந்து திகழுமாகலின் '**தொடுத்த பத்தி** நாவரும் கிளவிச் **செவ்வி நடை**' எனப் போற்றிப் புகழ்ந்தார். இவ்வாற்றால் நமக்குக் கம்பரின் கவிதை யுள்ளம் புலனாதல் காணலாம்.

நல்லியல் நவையறு கவிஞர் சொல்:

(7) போர்க்களத்தில் வச்சிர முட்டி, பிரகத்தன், துன்முகன் முதலிய வீரர்கள் இறந்துபட்ட செய்தி, இராவணன் செவிகளை எட்டுகின்றது. அது கேட்டு வருத்தமும் சீற்றமும் அடைந்த இராவணன், தானே போர்க்களத்திற்குப் புறப்பட்டுப் போகின்றான். போர் முனைக்கு இராவணனே போந்துள்ளான் என்னும் செய்தியினை, இராமபிரான் அறிகின்றார். அவரும் போர்ப் பறந்தலை செல்ல விரும்பினார். அதன் பொருட்டுத் தம் வற்கலை யாடையின்மேல், வயிர வாளை எடுத்து அணிந்தார். சேவடியில் வீரக்கழல் சேர்த்தினார். மார்பிற் கவசம் தரித்தார். பின்னர்த் தம்முடைய தோளில் அம்புப்புட்டில் ஆகிய **தூணி** யைத் தாங்கினார். அத்தூணி எத்தகையது தெரியுமா? சிறந்த நல்ல குற்றமற்ற கவிஞர்களின் **நாக்குப்** போன்றது அது! அதிலே இடையறாது குறைவின்றிப் பெருகிக் கொண்டே இருக்கும் அம்புகளோ, இணையற்றுச் சிறந்த நல்லியல் நவையறு கவிஞர் தம் நாவினின்று இடையறாமல், தங்கு தடையின்றிப் பெருகி வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும் ஆற்றல் மிக்க அழகிய **சொற்கள்** போன்றவை என்கின்றார் கம்பர்!

> பல்லியல் உலகுறு பாடை பாடமைந்து
> எல்லையில் நூற்கடல் ஏற நோக்கிய
> நல்லியல் நவையறு கவிஞர் நாவரும்
> சொல்எனத் தொலைவிலாத் தூணி தூக்கினான்
>
> – முதற்போர் புரி படலம் 114.

கவிஞர்கள் என்போர் எந்த ஒரு நூலையும் முறையாகக் கற்க முயலாமலே வாயில் வந்தவாறு வெறும் சொற்சதிர்களால் வரம்பின்றிப்பாடி விடுபவர் அல்லர். "கல்லாதான் ஒட்பம் கழிய நன்று ஆயினும் கொள்ளார் அறிவுடையார்" எனத் **திருவள்ளுவர்** கூறுதற்கேற்ப, அத்தகையவர்களின் கவிகள் 'நன்கவி' எனப் போற்றப் பெறாமல் 'புன்கவி' எனவே இகழ்ந்து புறக்கணிக்கப்படும். ஆதலின் கவிஞர்கள் என்போர் நல்ல மொழியறிவு பெற்றிருத்தல் வேண்டும். எனவே, '**பல்லியல் உலகுறு பாடை பாடு அமைந்து**' என்றார். பல மொழிகள் பயிலுதல் இயலாவிடினும், தாம் அறிந்த ஒரு மொழியிலாதல் ஆழ்ந்த புலமை கைவரப் பெற்று, அதன் எல்லையற்ற நூற்கடலை எல்லைகண்டு கற்று வல்லவர்களாக விளங்குதல் வேண்டும். ஆதலின் '**எல்லையில் நூற் கடல்** ஏற நோக்கிய' என்றார். மேலும் கவிஞர்கள் என்போருக்கு நற்பண்பு—நல்லொழுக்கம்—நற் குறிக்கோள் என்பன மிகவும் இன்றியமையாதனவாகலின், அவையனைத்தும் அமையப் பெற்றவர்களே சிறந்த குற்றமற்ற மற்ற கவிஞர்கள் எனத் தக்கவர் ஆவர் என்பது கம்பரின் கருத்து. எனவே, '**நல்லியல் நவையறு கவிஞர்**' என்றார். இத்தகைய கவிஞர்களுக்கே,

> எனைவைத்தி எனைவைத்தி எனச்சொற்கள்
> இடையிடைசின் றிரந்து வேண்ட,
> இன்வைப்பாம் இனிவைப்பாம் .....

என்று கூறக்கூடிய முறையில், அவர்தம் தூய நாவினின்று சீரிய சொற்கள் தாமே இடையறாமல் தொடர்ந்து வெளிப்படும். இவ்வுண்மையினை வலியுறுத்தவே 'நவையறு கவிஞர் **நாவரும் சொல்**' என்றார்.

இராமபிரான் போருக்குப் புறப்பட்டு அம்புப் புட்டிலை எடுத்துத் தம் தோளில் அணிந்து கொண்டார் என்று சொல்ல வரும் இடத்தில், இங்ஙனம் கவிஞர் பெருமான் ஆகிய கம்பர் தம் இயல்பு புலப்படும் வண்ணம், கவிஞர்களின் இயல்பினையும், அவர்களுக்குரிய அளவிலாச் சொல்வளத்தின் நிறைவையும் உவமையாக எடுத்துக் காட்டிப் பாடியிருக்கும் கவித்திறம், கழிபேருவகை விளைவிப்பதாகும்.

ஆற்றற் கவிஞரின் அங்கதம்:

(8) இராமபிரான் அநுமான் மீது இவர்ந்து போர்க்களம் சென்றார். அரக்கர் எறிந்த படைக்கலங்களை யெல்லாம் வானர வீரர்கள் மேற்படாதபடி தடுத்து விலக்கினர். முதல் நாட் போரி

லேயே இராவணன் ஒருவன் மட்டுமே எஞ்சி நிற்க, எதிர்த்து வந்த அரக்கரை யெல்லாம் அழித் தொழித்தார். இராவணனின் வில்லை ஒடித்தார். அவனது தேர் குடை கொடி ஆகிய அனைத்தையும் பொடிப்பொடி ஆக்கினார். தம் அம்பொன்றினால், அவனுடைய மணிமுடியையும் இடறிக் கீழே விழுமாறு செய்தார். அதனால் இதுகாறும் போருக்குச் சென்றால் 'வெல்லும் அவ்வளவு அல்லது தோற்றிலா விறலோன்' ஆகிய இராவணன், செய்வது அறியாமல் திகைத்து வெள்கி நின்றான்.

அப்போது இராவணன் எவ்வாறு இருந்தான் தெரியுமா? ஒருவன் எவ்வளவு தான் சிறப்பும் செல்வாக்கும் மிக்கவனாக இருந்தாலும், ஆற்றல் நிறைந்த ஒரு நல்ல பெரிய கவிஞனின் பகைமையை வருவித்துக் கொண்டு அவனால் **அங்கதம்** (Satire) என்னும் வசைகவி (Lampoon) யினைப் பாடப் பெறுவான் எனின், அதன் விளைவாகத் தன் சிறப்பும் செல்வாக்குமெல்லாம் அழிந்தொழிந்து போக எவ்வாறு இழிவடைந்து தாழ்ந்து வருந்தி நிற்பானோ, அவ்வாறே இராவணனும் இராமபிரானால் மணி முடி யிழந்து இழிதகவுற்று வருந்தி நின்றனனாம்.

மாற்ற ருந்தட மணிமுடி
இழந்தவாள் அரக்கன்,
ஏற்றம் எவ்வுல கத்திலும்
உயர்ந்துளன் எனினும்,
ஆற்றல் நல்நெடுங் கவிஞன்
அங்கதம் உரைப்பப்
போற்ற ரும்புகழ் இழந்தபேர்
ஒருவனும் போன்றான்.

—முதற்போர் புரி படலம், 249

இப்பாடலில் கவிஞர்களின் இணையிலா ஆற்றலையும், அவர்களின் அன்பைப் பெறுமற் பகைமையை அடைந்து அங்கதம் பாடப் பெறுபவர்கள் கேடுற்று வருந்துதலையும், கவிஞர்பிரான் ஆகிய கம்பர் குறிப்பிட்டருளியிருத்தல், கருதியுணரற்பாலது. 'வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க; **சொல்லேர் உழவர்** பகை' எனத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் தாமும் கூறியிருத்தல் காணலாம்.

பல் அலங்காரப் பண்பு

(9). இராமபிரானால் மணிமுடி இழந்த இராவணன் போர்க் களத்தினின்று, பூதலம் என்னும் நங்கை தன்னை நோக்கி, வெறுங்கையோடு இலங்கைபுக்கான். சானகி நகுவள் என்றே அவன் மனம் நாணத்தாற் சாம்பியது. அந்நிலையில் பாட்டனாகிய மாலியவான் இராவணன் பால் வந்து, அவனுக்கு ஆறுதல் கூறி, உற்றது வினவினான். அதுபோது இராவணன் இராமபிரானின் பல்வகை ஆற்றல்களையும் எடுத்துக் கூறி வியந்து பின்வருமாறு புகழ்கின்றான்.

இராமனின் வில்லாற்றலுக்கு இணையே இல்லை. வேதங்கள் உண்மை தவறினாலும், அவருடைய அம்புகள் தம் குறி தவற மாட்டா. அவைகள் பல திறப்பட்டன. அவைகள் மேன்மேற் கிளைத்து ஒன்று பத்து நூறு ஆயிரம் எனப் பெருகிக் கொண்டே செல்லும் இயல்பின. சிறந்த கவிஞர்களின் நாவினின்று தடைப்படாமல் நிரலே இயைந்து வெளிப்படும் பொருள் பொதிந்த சொற்கள் போலவும், அச்சொற்களால் முறையே அமையும் எதுகை மோனை முதலிய தொடை வகைகள் (Rhymes and alliterations) போலவும், அவற்றில் இயைந்து அழகுற அமையும் இசைத்திறங்கள் (Rhythms) போலவும், அவ்விசைத்திறன் அமைந்த செய்யுட்களை இனிமை யூட்டும் பலவகை அணிகள் (Figures of speech) போலவும், இராமபிரானின் வில்லினின்று புறப்படும் அம்புகள் எல்லாம் வியத்தகு செயல்கள் புரிகின்றன. 'ஒப்புவேறு உரைக்கலாவதில்லை. வேதம் தப்பினபோதும், அன்னான் தனு உமிழ் சரங்கள் தப்பா' என்கின்றான் இராவணன்.

நல்லியற் கவிஞர் நாவிற்
பொருள்குறித் தமர்ந்த நாமச்
சொல்லெனச், செய்யுள் கொண்ட
தொடைஎனத், தொடையை நோக்கி

எல்லையில் செல்வம் தீரா
இசைஎனப், பழுது இலாத
பல்லலங் காரப் பண்பே
காகுத்தன் பகழி மாதோ.
—கும்பகருணன் வதைப்படலம், 22

இவ்வினிய பாடலின்கண் கவிஞர்களின் சிறப்பினை '**நல்லியற் கவிஞர்**' என்றும்; அவர்தம் நாவினின்று வெளிப்படும் சொல்லின் இயல்பினைப் '**பொருள் குறித்து** அமர்ந்த நாமச் சொல்' என்றும்; அச்சொற்களினால் செய்யுளும், செய்யுட் டொடைகளும், செய்யுட்கு அழகுதரும் சிறந்த அணிவகைகளும் அமையும் அருமைப் பாட்டினைப் **பல்லலங் காரப் பண்பே** என்றும்; கம்பர் குறிப்பிட் டருளியிருத்தல் நினைத்தொறும் மகிழ்ச்சி விளைவிப்பதாகும்.

புலவர் சொற்றுறை :

(10) இலக்குவனுக்கும் கும்பகருண னுக்கும் இடையே போர் நிகழ்கின்றது. கும்பகருணன் தன் தோள்கொட்டி ஆர்ப்பரித்தான். அவ் வார்ப்பரிப்பு கூற்றுவனையும் துணுக்குறச் செய்தது. அவனால் வானரப் படையில் ஓர் பாதி யின் மேலும் அன்று தேய்ந்தது. அது கேட்டுச் சினந்து, சுமித்திரை பயந்த சிங்கம் ஆகிய இலக்குவன், அரக்கர் களைச் சென்று தாக்கினான். ஒரு சிலர் கைகள் வெட்டுண்டனர்; ஒரு சிலர் செவி அறுபட்டனர்; வேறு சிலரின் மூக்குகள் துணிந்து விழுந்தன. மற்றும் சிலர் கால்கள் முறிந்தனர். பிறர் சிலருடைய கண்கள் பழுதுற்றன. இங்ஙனம் இலக் குவனின் அம்புகள் பகைவரின் ஒவ்வோர் உறுப்பினையே அறுத் தொழித்தமை, **புலவர்** பெருமக்கள் சிலர் தமக்குக் கொடுக்கப் பெறும் பொருளின் அள விற்கு ஏற்பக் கொடுப்போரைப் புகழ்ந்து செய்யுட்கள் இயற்றி முடித்தலைப் போன்று விளங்கியது, என்கிறார் கம்பர்.

சிலவ ரைக்கரம்; சிலவ ரைச்செவி;
சிலர் நாசி;
சிலவ ரைக்கழல்; சிலவ ரைக்கண்;
கொளும் செயலால்
நிலவ ரைத்தரு பொருள்வ ழித்தண்
டமிழ் நிரப்பும்
புலவர் சொற்றுறை புரிந்த வும்போன்
றன சரங்கள்.
—கும்பகருணன் வதைப்படலம், 226.

தமிழ் நெறி வழக்கம் :

(11) இராவணனின் மூலபல சேனை கள் யாவும் போரில் மடிந்தொழிந்து போகின்றன. அதனை அவன் கேள்வி யுறுகின்றான். அச்செய்தி உண்மைதானா என்று அறியத் தானே நேரிற் போர்க் களம் காணப் போதருகின்றான், அங்கே அவன் பல துயரம் மிக்க காட்சிகளைக் காண்கின்றான். அவனது கண்களில் இருந்து வருத்தத்தினால் நீர் கொழிக் கின்றது; சீற்றத்தினால் குருதி கொப்ப ளிக்கின்றது. இராமன் தன் வில்லினின்று பொழிந்த அம்புகளினால் அரக்கர் பல் லாயிரவர் இறந்து கிடத்தலையும் இரத்த வெள்ளம் ஆறுபோலப் பெருக்கெடுத்துக் கடலிற் சென்று கலத்தலையும், கடல் அதனை யுண்டு உமிழ்ந்து அலைமோது தலையும் கண்டான்.

குமிழிநீ ரோடும் சோரிக்
கனலொடும் கொழிக்கும் கண்ணன்,
தமிழ் நெறி வழக்கம் அன்ன
தனிச்சிலை வழங்கச் சாய்ந்தார்
அமிழ்பெருங் குருதி வெள்ளம்
ஆற்றுவாய் முகத்தில் தேக்கி
உமிழ்வதே ஒக்கும் வேலை
ஓதம்வந்து, உடற்றக் கண்டான்.
—இராவணன் களங்காண் படலம், 25.

இப்பாடலிற் கம்பர் இராமனின் ஒப் புயர்வற்ற வில்லைத் **தனிச்சிலை** என்று பாராட்டுகின்றார். அவ்வில்லின் ஒப்புயர் வற்ற தன்மையினை விளக்க, வேறு பிற மொழிகளுக்கு இல்லாத இலக்கண நெறி முறைகளும் (grammatical regulations) மரபு வழக்குகளும் (idiomatic usages) ஆகியவற்றை ஒப்பற்ற நிலையில் பெற்று விளங்கும் ஒப்புயர்வற்ற தமிழ் மொழி யின் சிறப்பே, அவ்வில்லுக்கு ஏற்ற உவமையாகும் எனக் கருதி '**தமிழ் நெறி வழக்கம்** அன்ன தனிச்சிலை' எனப் புகழ்ந்து போற்றுகின்றார். கம்பர் தமிழ்ப் பெருங் கவிஞர். தமிழால்

உயர்ந்தவர், தமிழை உயர்த்தியவர். தமிழ்மொழி நூற்கடலின் ஆழமெலாம் கண்டு அளந்தறிந்த தமிழ்ப் பெரும் புலவர். தமிழின் அருமை பெருமைகள் அனைத்தையும் தகவுற உணர்ந்தவர். அதனால்தான் அவர்தம் தமிழியற் கவிதை நெஞ்சம், இராமனின் இணையற்ற வில் லுக்கு உவமை கூற வருங்கால், தமிழ் நெறி வழக்கின் தன்னிகரற்ற தன்மை யினை எடுத்துக் காட்டி யருள்கின்றது. இதனாற் கம்பரின் கவிதையுள்ளமும், தமிழுள்ளமும் நமக்கு நன்கினிது விளங்குதல் காணலாம்.

முடிவுரை :

இதுகாறும் கூறி வந்தவாற்றால், கம்பர் பெருமையும், அவர்தம் கவிதை யின் அருமையும் அனைவர்க்கும் புலனாகும். இதுபற்றியே தேசிய கவிஞர் சுப்பிர மணிய பாரதியார்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை ;
உண்மை; வெறும் புகழ்ச்சி யில்லை......

எனப் பெரு முழக்கம் புரிந்தருளினர். இத்தகைய பெருங் கவிஞர் பிரான் ஆகிய கம்பர் அருளிய காவியத்தினை முறைப் படி கற்றின்புறுதல் நம் கடமையாகும்.

அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும்
ஆழ்ந்தினி திருக்கும் கவியுளம் காண்கிலார்

எனப் பாரதியார் பாடியிருப்பது போன்று, கதைச் சுவை ஒன்று மட்டுமே கருதியன்றி, ஆழ்ந்து இனிதமைந் திருக்கும் கம்பர்தம் கவியுளமும் கண்டு மகிழும் முறையில், நாம் அவர்தம் நூலைக் கற்றல் இன்றியமையாதது, "நாங்கள் **இந்தியாவை** இழந்தாலும் இழப்போம்; ஆனால் எங்கள் ஷேக்ஸ்பியரை இழக்க ஒருக்காலும் ஒருப்பட மாட்டோம்" **(3)** எனக் கூறிப் பிறநாட்டார் தம்முடைய நாட்டுக் கவிஞர்களையும் அவர்கள் இயற் றிய நூல்களையும் பெரிதும் மதித்துப் போற்றி வருதலைப் பின்பற்றி, நாமும் நம் கம்பர் போன்ற பெருங்கவிஞர்கள் பலரும் அருளிய நூல்களை ஆராய்ந்து கற்றுப் பயன் அடைந்து, நலம்பெற முற்படுவோமாக!

—ஆசிரியர்

(3) Consider now, if they asked us, Will you give-up your Indian Empire or your Shakespeare, you English! ...... Really it were a grave question...... Indian Empire or no Indian Empire ;. We cannot do with out Shakespeare! Indian Empire will go, at any rate, some day; but this Shakespeare does not go, he lasts forever with us; we cannot give-up Shakespeare.

—*Thomas Carlyle*, The Hero As Poet.



ஸ்ரீ வைகுண்டநாதர் ஆலயம், காஞ்சி.

விடை தெரியுமா?

[அன்பியற் பெருந்தகை ஆகிய நமது அறநிலைய ஆணையாளர் அவர்கள் விரும்பித் தெரிவித்தபடி, இப்புதிய பகுதி தொடங்கப் பெற்றுள்ளது. இப்பகுதியில் வரும் வினாக்கள் கற்றுணர்ந்து வல்ல அறிஞர்களுக்கு மிகவும் எளியனவும், முன்பே நன்கினிது தெரிந்தனவுமேயாகப் பெரும்பாலும் அமைந்திருத்தல் இயல்பேயாகும். எனினும் சாதாரணப் பொதுமக்கள் பலரும் தெரிந்துகொண்டு மகிழ்வதும் பயன் பெறுதலும் ஆகிய நோக்கம் கொண்டே இவைகள் இங்குத் தரப் பெறுகின்றன. இவற்றைத் தொடர்ந்து படித்து வருவதனால் "சிறு துளி பெருவெள்ளம்" என்னும் நிலையிலும், "எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்" என்ற முறையிலும், சமயத் துறையிற் பொதுவாகப் பலதுறைச் செய்திகளைப் பற்றிப் படிமுறையே தெரிந்து கொண்டு, மக்கள் அனைவரும் பயன் பெற்று மகிழ்தல் திண்ணம்! வாசகர்கள் பலருக்கும் இப்பகுதி நன்கினிது பயன் படுமாறு அமைவதற்கு, இறையருள் துணை புரிவதாக! —ஆசிரியர்]

1. சிவபெருமான் செய்தருளியவாகக் கூறப்படும் எட்டு வீரச் செயல்கள் யாவை? அவைகள் எங்கெங்கு நிகழ்ந்தன?

2. நம்பியாண்டார் நம்பிகள், நம்பாண்டார் நம்பிகள்—இப்பெயர்கள் ஒருவரையே குறிப்பனவா? அல்லது வேறு வேறான இருவரைக் குறிப்பனவா?

3. 'சிவஞான போதம்' என்னும் சொற்றொடருக்குப் பொருள் என்ன? அதனை இயற்றியருளிய ஆசிரியர் யார்? அவருடைய காலம் யாது?

4. இறைவனின் அடியார்களுக்குப் 'பத்தர்' என்று பெயர் வழங்கக் காரணம் என்ன?

5. 'அட்டமா சித்தி அணைதரு காளத்தி' என்பது சம்பந்தர் தேவாரம். அதன்கண் குறிக்கப்பெற்ற அட்டமா சித்திகள் என்பன யாவை?

6. ஜைன சமயத் திருவுருவங்கள் பெரும்பாலும் பெரிய அளவிலேயே அமைந்திருக்கும். எடுத்துக் காட்டாக, சிரவண பெலகோலா என்னும் இடத்தில் உள்ள கோமதீசுவரர் திருவுருவம் ஏறத்தாழ 60 அடி உயரம் உள்ளது. இங்ஙனம் பெரியதாக அமைத்ததன் கருத்து யாது?

7. இறைவன் எத்தனை வகை நிலைகளில் எழுந்தருளி விளங்கியிருந்து அருள் புரிவதாக ஸ்ரீவைஷ்ணவம் கூறுகின்றது?

8. 'ஈடு' என்று எதற்குப் பெயர்? அதற்கு அப்பெயர் அமையக் காரணம் என்ன?

9. ஆழ்வார்களின் அவதாரத் தலங்களையும், திரு நட்சத்திரங்களையும் குறிப்பிடுக.

10. 'விஷ்வக் சேனர்' என்பவர் யார்? அவருடைய சிறப்புக்கள் என்ன?

—விடை அடுத்த பக்கம் பார்க்க.

விடை விளக்கம்

1. சிவபெருமான் செய்தருளியதாகக் கூறப்பெறும் வீரச் செயல்கள் **எட்டும்**. அவைகள் முறையே நிகழப் பெற்ற தலங்களும் பின்வருமாறு :—

வீரச் செயல்கள்.		**தலங்கள்.**
1. பிரமன் தலை அரிந்தது	—	திருக்கண்டியூர்
2. அந்தகாசுரனை அழித்தது	—	திருக்கோவலூர்
3. திரிபுரம் எரித்தது	—	திருவதிகை
4. தக்கனைத் தடிந்தது	—	திருப்பறியலூர்
5. சலந்தராசுரனைக் கொன்றது	—	திருவிற்குடி
6. யானையைத் தோல் உரித்தது	—	திருவழுவூர்
7. காமனைக் காய்ந்தது	—	திருக்குறுக்கை
8. இயமனை எற்றியது	—	திருக்கடவூர்

பூமன் சிரம் கண்டி ; அந்தகன் கோவல் ; புரம் அதிகை ;
மாமன் பறியல் ; சலந்தரன் விற்குடி ; மா வழுவூர் ;
காமன் குறுக்கை ; இயமன் கடவூர் ; இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையும் திங்களும் சூடிதன் சேவகமே.

1. பூமன்	—	பிரமன்
2. மாமன்	—	தக்கன்
3. மா	—	யானை, கஜாசுரன்
4. கொன்றையும் திங்களும் சூடி	—	சிவபெருமான்
5. சேவகம்	—	வீரச்செயல்

இறைவன் வீரச்செயல் நிகழ்த்திய தலத்தினை **வீரட்டானம்** (வீரம் + ஸ்தானம்) என்பர். அவை எட்டுத் தலங்களில் நிகழ்ந்தமையினால், அவ்வெட்டுத் தலங்களையும் **அட்டானம்** (அஷ்டம் + ஸ்தானம்) எனக் கூறுவர். வீரச் செயல்கள் நிகழ்ந்த எட்டுத் தலங்களையும் **அட்ட வீரட்டானம்** (அஷ்டம் + வீரம் + ஸ்தானம்), **வீரட்டம்** (வீரம் + அஷ்டம்) என்றும் நூல்கள் குறிப்பது உண்டு. "அட்டானம் (அஷ்டம் + ஸ்தானம்) என்று ஓதிய நால் இரண்டு." என்பது தேவாரம்.

(2) இப்பெயர்கள் ஒருவரைக் குறிப்பன அல்ல. வேறு வேறான இருவரைக் குறிப்பவை. **நம்பி யாண்டார் நம்பிகள்** சைவத் திருமுறைகளைத் தொகுத்தவர். திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் அருள் பெற்றவர். பதினோராம் திருமுறையில் பல பிரபந்தங்களை அருளிச் செய்தவர். இவர் அருளிச் செய்த திருத்தொண்டர் திருவந்தாதியினை அடிப்படையாகக் கொண்டே சேக்கிழார் பெரிய புராணம் பாடியருளினர். இவர் முதலாம் ஆதித்த கரிகால சோழன் (கி. பி. 10ஆம் நூற்றாண்டு) காலத்தில் விளங்கியவர். **நம்பாண்டார் நம்பிகள்** திரு நல்லூர்ப் பெருமணம் (ஆச்சாபுரம்) என்னும் தலத்தில் வாழ்ந்தவர். திருஞானசம்பந்தர் இவருடைய திருமகளாரையே திருமணம் செய்து கொண்டார். இவர் வாழ்ந்த காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டு ஆகும்.

"செல்வமிகு திருநாரை யூரில் மேவும்
சிவன்அளித்த மதகரிக்குச் சிந்தை கூர்ந்து

நல்லபுகழ் உடையநம்பி யாண்டார் நம்பி
நண்பினொடு நிவேதிப்பான்………"

—திரு முறைகண்ட புராணம்.

ஏதமில்சீர் மறையவரில் ஏற்றகுலத் தோடிசைவால்
நாதர்திருப் பெருமணத்து நம்பாண்டார் நம்பிபெறும்
காதலியைக் காழிநாடு உடைபிரான் கைப்பிடிக்கப்
போதுமவர் பெருந்தன்மை எனப்பொருந்த எண்ணினர்.

மிக்கதிருத் தொண்டர்களும் வேதியரும் உடன்ஏகத்
திக்குநிகழ் திருநல்லூர்ப் பெருமணத்தைச் சென்றெய்தத்
தக்கபுகழ் நம்பாண்டார் நம்பிதாம் அதுகேட்டுச்
செக்கர்முடிச் சடையார்தம் திருப்பாதம் தொழுதெழுவார்.

—பெரிய புராணம்.

(3) 'சிவஞானபோதம்' என்னும் சொற்றொடர், சிவம்+ஞானம்+போதம் என்னும் மூன்று சொற்களைத் தன்னகத்தே கொண்டது. சிவம் — முழு முதற்பெரும் பொருள். ஞானம் — மெய்யுணர்வு. போதம் — தெளிவித்தல். 'முழு முதற் பெரும்பொருளைப் பற்றிய மெய்புணர்வினைத் தெளிவிப்பது சிவஞான போதம்' எனப்படும் நூல் ஆகும்.

"நின்ற சிவம் ஒன்று; அதனைத்
தேர்தல் ஞானம்; நிகழ்போதம்

தேர்ந்து அதனைத் தெளிவித்தல் ஆகும்"

எனத் திருவாதவூரடிகள் புராணம் பாடிய **கடவுள் மாமுனிவர்** இத் தொடருக்குப் பொருள் விளக்கியுள்ளார்.

ஆசிரியர் சிவஞான சுவாமிகள் தமது சிவஞான போத மாபாடியம் என்னும் பேருரையின்கண், **சிவஞானம்**–சிவாகமம்; **போதித்தல்**–நிச்சயப் பொருள் உணர்த்துதல்; 'சிவாகமங்களின் பொருள் நிச்சயம் உணர்த்துவது சிவஞான போதம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

சிவஞான போதம் என்னும் சைவசித்தாந்தத் தலைமணி நூலை இயற்றி யருளியவர், ஆசிரியர் **மெய்கண்டார்** ஆவர். திருவண்ணாமலை அருணசலேசுவரர் கோயில் முதல் திருச்சுற்றின் வடபுறச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள,

"சுவஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் இராஜ ராஜ தேவர்க்கு யாண்டு பதினாறுவது, இடபஞாயிற்று இருபத்தெட்டாம் திகதியும் சனிக்கிழமையும் பெற்ற மிருகசீரிஷத்து நாள், உடையார் திருவண்ணாமலை யுடைய நாயனர் கோயில் சீமாகேசுவரக் கண்காணி செய்வார்களும், தேவர்கன்மி கோயிற் கணக்கனும், திருவெண்ணெய் நல்லூர் உடையான் மெய்கண்ட தேவன் ஊருடைப் பெருமாள் ஆன எடுத்தது வலிய வேளார்க்குக் கல்வெட்டிக் கொடுத்த பரிசாவது………

இந்நாயனர் தேவதானம் செங்குன்ற நாட்டு மாத்தூர் ஆன இராஜ ராஜ நல்லூரில் இவர் வெட்டுவித்த மெய்கண்ட தேவப் புத்தேரிக்குக் கடமை இறுக்கும் இடத்துத் திருத்தின ஆண்டு கால்வரிசையும் பாடிகாவலும் இறுக்கக் கடவதாகவும் …"

எனவரும் கல்வெட்டு ஒன்று, நாம் மெய்கண்ட தேவரின் காலத்தை அறியத் துணைபுரிகின்றது. மூன்றும் இராச ராச சோழன் கி. பி. 1216-ஆம் ஆண்டில் அரியணை ஏறினன். அவனது பதினறும் ஆட்சி யாண்டில் இக் கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. எனவே இக்கல்வெட்டு அமைந்த காலம் கி. பி. 1232 ஆகும். அதற்குச் சிறிது முன்னரும் பின்னரும் ஆகவே ஆசிரியர் மெய்கண்ட தேவர் வாழ்ந்தனராதல் வேண்டும். எனவே அவர்தம் காலம் பதின்மூன்றும் நூற்றுண்டின் முதற்பாதி எனக் கொள்ளுதல் பொருத்தம்.

(4) இறைவனின் அடியவர்கள் பத்து வகையான செயல்கள் அல்லது இயல்புகளைப் பெரும்பாலும் பெற்றிருப்பார்கள்.

1. உலகத்தையும் உலகியற்கைப் பொருள்களையும் அருள் வடிவமாகக் காணும் இயல்பு.
2. கருவி கரணங்களை முறையே களைந்தொழிக்க முயலும் சிந்தனை.
3. முற்பிறவிகளிற் பட்ட துன்பங்களை நினைத்து நினைத்து நெட்டுயிர்ப் பெறிதல்.
4. திருவருள் மேலீட்டால் உடம்பில் இளஞ் சூடு எப்பொழுதும் நிலவுதல்.
5. ஊண் உறக்கம் உலகநுகர்ச்சி என்பனவற்றிற் கருத்தின்றி, அவற்றைத் துறக்க முயலுதல்.
6. பிறரோடு உரையாடுதற்கும் பழகுதற்கும் தாமாக முயலாமல் அவற்றைத் தவிர்த்தொழுகுதல்.
7. எப்பொழுதும் மௌனம் கடைப்பிடித்து ஒழுகுதலையே விரும்பி மேற்கோடல்.
8. பித்தேறினுற்போல உலகியற் பொருள்களிற் பாகுபாட்டுணர்வு தோன்றுமல் நிற்றல்.
9. பிராணவாயு அடங்கி நிற்க மூர்ச்சை எய்தியிருத்தல்.
10. தற்போதம் என்பது சிறிதும் இன்றிச் செயலற்று விளங்குதல். இப்பத்து வகையான செயல்களையும் இயல்பாகவே பெற்றிருத்தல் பற்றியே இறைவன் அடியார்களுக்குப் 'பத்தர்கள்' என்பது பெயர் ஆயிற்று. "பத்துக்கொலாம் அடியார் செய்கை தானே" என்பது திருநாவுக்கரசர் தேவாரம். "பத்துடை அடியவர்க்கு எளியவன் பிறர்களுக்கு அரிய வித்தகன்" என்பது நம்மாழ்வார் திருவாய்மொழி.

1. தத்துவரூபம்.
2. தத்துவ தரிசனம்
3. தத்துவ சுத்தி
4. ஆன்ம ரூபம்
5. ஆன்ம தரிசனம்
6. ஆன்ம சுத்தி
7. சிவரூபம்
8. சிவ தரிசனம்
9. சிவயோகம்
10. சிவபோகம்

என்னும் தசகாரியம் ஆகிய பத்தையும் கூட, இறைவனின் - அடியார்களுக்குரிய பத்துச் செய்கைகளாகக் கூறுவர். மேற்தறித்த பத்துச் செயல்கள் "ஒழிவில் ஒடுக்கம்" என்னும் நூலில், அதற்கு உரை வகுத்த திருப்போரூர்ச் **சிதம்பர சுவாமிகள்** அவர்களாற் குறிப்பிடப் பெற்றிருப்பனவாகும்.

(5) 'அட்டமா சித்தி அணைதரு காளத்தி' என்பன போன்ற பற்பல தேவாரத் திருமொழிகளிற் குறிப்பிடப் பெற்றுள்ள அட்டமா சித்திகள் என்பவை பின் வருமாறு:—

1. **அணிமா:** அணுவினும் சிறிய அணுவாக நுணுகி விளங்கக் கூடிய தன்மை.

2. **மகிமா:** மிகவும் உயர்ந்த பெரிய மேரு மலையைப்போல உயர்ந்த பெரிய நிலையிற் பிறங்கும் பெற்றிமை.

3. **இலகிமா:** மிகப் பெரிய மேரு மலையைப் போன்று விளங்கினாலும் எடுத்தற்கு எளிதாக இருக்கும் இயல்பு.

4. **கரிமா:** அணுவைப் போல நுணுகிச் சிறிய நிலையில் இருந்தாலும் மேருவைப் போல எடுத்தற்கரிய நிலையில் கனத்திருக்கும் பண்பு.

5. **பிராப்தி:** நினைத்த அளவில் எவ்வுலகங்களிலும் எல்லா இடத்தும் சென்று உலவி வரக்கூடிய ஆற்றல்.

6. **பிராகாமியம்:** கூடு விட்டுக் கூடுபாய்தல், விரும்பிய போகங்களை நுகர்தல், முக்காலத்து நிகழ்ச்சிகளையும் உணரப் பெறுதல் போன்ற திறம் பெற்றுத் திகழ்தல்.

7. **ஈசத்துவம்:** இறைவனைப் போலத் தாம் விரும்பிய வழி ஆக்கல் அளித்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் செய்ய வல்லராதல்.

8. **வசித்துவம்:** தேவர் மூவர் யாவரையும், எல்லா உலகத்துயிர்களையும் தம் ஏவலுக்கு அடங்கி ஒழுகுமாறு தம்மிடம் வசப்படுத்திக் கொள்ளக் கூடிய திறலைப் பெற்று விளங்கல்.

(6) ஜைன் சமயத் திருவுருவங்கள் பெரும்பாலும் பெரிய அளவிலேயே அமைக்கப்பட்டு விளங்கும். 'பெரிய உயிர்கள் பெரிய உடம்பினையே பெற்றிருக்கும். சிறிய உயிர்கள் சிறிய உடம்பினையே பெற்றிருக்கும். காணப்படாது உள்ளிருக்கும் உயிரின் இயல்புக்கேற்பவே, காணப்படும் நிலையில் வெளிப்படத் திகழும் உடம்பு

சிறிதாகவோ பெரிதாகவோ அமையும். உயிரானது உடம்பளவின் முழுவதும் நிறைந்து வியாபித்து நின்று உணரும்' என்பது ஜைன சமயத்தின் கொள்கை. இதனைப் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றாக, முன்றுறை யரையனார் என்னும் புலவர் இயற்றிய பழமொழி நானூறு என்னும் நூலில்,

"அரிதவித் தாசின் றுணர்ந்தவன் பாதம்
விரிகடல் சூழ்ந்த வியன்கண்மா ஞாலத்து
உரியதனிற் கண்டுணர்ந்தார் ஒக்கமே போலப்
பெரியதன் ஆவி பெரிது"

என்று அருகக் கடவுள் வாழ்த்தாக வரும் பாடலினால் உணரலாம். ஜைன சமயத்தினரின் இக்கொள்கையினைப் பின்வரும் சிவஞான சித்தியார் செய்யுளும் ஒரு வகையிற் சுட்டியிருத்தல் காணலாம்.

உருவினில் நிறைந்து நின்றங்கு உணர்ந்திடும் உயிரது என்னின்,
மருவிடாது உறக்கம்; வாயில் அறிவுஒக்க வழங்க வேண்டும்;
பெருகிடும் சுருங்கும் போதம் பேருடற் சிற்று டற்கண்;
வரும்உடற் குறைக்க, ஒக்கக் குறைந்துபின் மாயும் அன்றே.

—சித்தியார் சுபக்கம் 4, 17

(7) இறைவனின் நிலை பரத்துவம், வியூகம், விபவம், அந்தரியாமித்துவம், அர்ச்சாவதாரம் என்று ஐந்து வகைகளாக விளங்கும்.

1. **பரத்துவம்** என்பது 'நலம் அந்தம் இல்லதோர் நாடு' எனப்படும் வைகுந்தம் ஆகிய நித்திய விபூதியிலே, உலகியல் வாழ்வினின்று விடுபட்டுப் பகவத் அநுபவமே போது போக்காக இருக்கும் முக்தர்களுக்கும், வினை காரணமாக ஒருநாளும் உலகில் வந்து பிறவாத பெருநிலையிலுள்ள அனந்தன் கருடன் முதலிய நித்தியர்களுக்கும் போக்கியனாக இறைவன் எழுந்தருளியிருக்கும் நிலை.

2. **வியூகம்** என்பது படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்களைப் புரிவதற்காகவும், உலக மக்களுக்கு நன்மையை உண்டாக்கித் தீமைகளைப் போக்கிப் பாதுகாத்தருளவும், வீடுபேறு பெற விரும்பி முயலும் முமுட்சுக்கள் உலகியல் வாழ்வை விடுவித்துக் கொண்டு தன்னை வந்து அடைவதற்கு ஏதுவான அருளைப் புரியவும், சங்கர்ஷணன் பிரத்தியும்நன் அநிருத்தன் வாசுதேவன் என்பவர்களாகத் திருப்பாற்கடலில் விளங்கும் நிலை.

"செங்கட் காரி! கருங்கண் வெள்ளை!
பொன்கட் பச்சை! பைங்கண் மாஅல்!"

எனவரும் பரிபாடல் வரிகளும், அவற்றிற்கு ஆசிரியர் பரிமேலழகரால்

"செங்கட்காரி — வாசுதேவன்! கருங்கண் வெள்ளை — சங்கருடணன்!
பொன்கட் பச்சை — சிவந்த உடம்பையுடைய பிரத்தியும்நன்!
பச்சை என்பது பிரத்தியும்நன் என்னும் வடமொழித் திரிபு.
செங்கண்மால் — பசிய உடம்பினையுடைய அநிருத்தன். நால்வகை
வியூகமும் கூறியவாறு"

என வகுக்கப்பட்டுள்ள உரையும், ஈண்டு அறியத் தக்கன.

3. **விபவம்** ஆவது எல்லாப் பொருள்களாகவும் வந்து தோன்றுதல். மச்சம் கூர்மம் வராகம் நரசிங்கம் வாமனன் இராமன் கிருஷ்ணன் முதலிய அவதாரங்களே விபவம் என வழங்கப் பெறும். "எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர்கள் தலைவா" "பிறப்பில் பல்பிறவிப் பெருமான்" "மீனோடாமை கேழல் அரி குறளாய் முன்னும் இராமனாய்த் தானாய்ப் பின்னும் இராமனாய்த் தாமோதரனாய்க் கற்கியும் ஆனான்" என்றெல்லாம் இதனை ஆழ்வார்கள் போற்றியுள்ளமை காணலாம்.

4. **அந்தரியாமித்துவம்** ஆவது எல்லாப் பொருள்களிலும் எல்லா உயிர்களிலும் உட்கலந்து நின்று இயக்கி நிற்பவனாகத் திகழும் நிலை. "உடல்மிசை உயிர் எனக் கரந்தெங்கும் பரந்துளன்" "கரந்தசில் இடந்தொறும் இடந்திகழ் பொருள்தொறும் கரந்து எங்கும் பரந்துளன் இவையுண்ட சுரனே" முதலிய திருப்பாசுரங்கள் இந்நிலையைக் குறிப்பனவாகும்.

5. **அர்ச்சாவதாரம்** என்பது கோயில்களிலும் இல்லங்களிலும் ஒரு வடிவத்தின்கண் எழுந்தருளி, அன்பர்கள் உவக்கும் உபாதானப் பொருள்களே தனக்குத் திருமேனியாகவும், அவர்கள் விரும்பும் திருநாமங்களே தனக்குத் திருநாமமாகவும், அவர்கள் புரியும் பாவனையே தனது வண்ணமாகவும் நிற்கும் நிலை, "பின்னானார் வணங்கும் சோதி" என்று சிறப்பிக்கப் பெற்றதும், இறைவன் தன்குணநிறைவுடன் திகழ்வதும், ஆழ்வார்கள் பல இடங்களிலும் பிரபத்தி பண்ணியதும், அர்ச்சாவதாரமேயாகும். பரத்துவ நிலையில் இறைவனின் ஒளி பகல் விளக்குப் போல மழுங்கி யிருக்கும்; அர்ச்சாவதாரத்திலோ இருட்டறையில் விளக்குப் போல மிகவும் பிரகாசம் பெற்றுத் திகழும். மேலும் தனது குண நிறைவையும் உரிமையியல்மையும் குலைத்துக் கொண்டு, தன்னை விரும்பாதவர்களைத் தான் விரும்பிப் பேணிக் காத்து நிற்கும் நிலை அர்ச்சாவதாரம் ஆகும்.

"தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே
தமருகந்தது எப்பேர் மற்று அப்பேர்—தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித்து இமையா திருப்பரே
அவ்வண்ணம் ஆழியான் ஆம்" —பொய்கையார்.

பரவாசுதேவனாய் இருக்கும் நிலை நித்யர் முக்தர்களின் அநுபவத்திற்காக; வியூகநிலை பிரமன் இந்திரன் முதலானோருடைய கூக்குரல் கேட்கைக்காக; இராமன் கிருஷ்ணன் முதலான விபவாவதாரங்கள் அவ்வக்காலத்தில் வாழ்ந்திருந்தவர்களுக்காக; அந்தரியாமியாய் இருப்பது பிரகலாதாழ்வான் போல்வார்க்கும் கர்மடர்களுக்கும் ஆகும். "அடியோமுக்கே எம்பெருமான் அல்லீரோ நீர்" எனத் திருமங்கையாழ்வார் பணித்தருளியபடி அர்ச்சாவதார நிலை ஒன்றே, நம்போன்ற அடியார்களை உய்விக்க அமைந்தது எனலாம்.

1. அந்தர்யாமித்துவம்: தரையிற் பதிந்து மறைந்து கிடக்கும் நீர் (பூகத ஜலம்) போன்றது
2. பரத்துவம்: அண்டத்துக்கு வெளியே பெருகிக் கிடக்கின்ற நீர் (ஆவரண ஜலம்) போன்றது.
3. வியூகம்: எளிதிற் கிட்ட இயலாத திருப்பாற்கடல் போன்றது.

4. விபவம் : முன்பே பாய்ந்து வடிந்தொழிந்த பெருக்காறு போன்றது.

5. அர்ச்சாவதாரம் : நீர்விடாய் கொண்டவன் எளிதிற் சென்று இறங்கி வேண்டும் அளவும் பருகலாம் படி தேங்கியுள்ள மடுக்கள் போன்றது.

—ஸ்ரீவசந பூஷணம்

(8) வடக்குத் திரு வீதிப் பிள்ளை என்பவர் எழுதியருளிய திருவாய்மொழி முப்பத்தாறுயிரப்படி வியாக்கியானத்துக்கு **ஈடு** என்று பெயர்.

> தெள்ளியதா நம்பிள்ளை செப்பும் நெறிதன்னை
> வள்ளல் வடக்குத் திருவீதிப்—பிள்ளை
> நாடறிய மாறன் மறைப்பொருளை நன்குரைத்தது
> ஈடு, முப்பத் தாறு யிரம்.

இங்ஙனம் 'ஈடு' என்னும் பெயர் அமைந்ததற்குப் பின்வருமாறு பல விளக்கங்கள் அறிஞர்களாற் கூறப்படுகின்றன. (1) ஈடு–இடுதல், அணியப் பெறுதல்; அஃதாவது உடலின்மேல் அணிந்து கொள்ளப்படுவது என்னும் பொருளில் **கவசம்** என்பதனைக் குறிக்கும். கவசமானது உடலைக் காப்பது போன்று இம் முப்பத்தாறுயிரப்படி வியாக்கியானமும், கற்போராலும் எழுதுவோராலும் வேற்று மக்களாலும் தன்னிலையில் திரிந்து மாறுபட்டு விடாதபடி, திருவாய் மொழியின் பொருளைப் பாதுகாத்துக் கொண்டு விளங்குதலின், ஈடு என்ற சிறப்புப் பெயரினைப் பெறுவதாயிற்று.

(2) ஈடு–இடுதல், **எழுதுதல்.** நம்பிள்ளை என்னும் வைணவசமயப் பெருந்தகையார், நாடோறும் தம் காலக்ஷேபத்தில் அருளிச் செய்து கொண்டு வந்தனவற்றை, அங்ஙனமே வடக்குத் திருவீதிப் பிள்ளை ஏட்டில் எழுதிவைத்துப் போற்றிக் காத்தனராதலின், இதனை ஈடு என வழங்கினர் எனலும் பொருந்தும்.

(3) ஈடு–**ஒப்பு.** பிரம சூத்திரத்திற்கு இராமாநுசர் செய்தருளிய ஸ்ரீபாஷ்யம் விளக்கும் ஆழ்பொருள்கள் அனைத்தும் விளங்கும் பொருட்டுச் சுதரிசன பட்டர் என்பவர் இயற்றிய 36000 கிரந்தங்களையுடைய சுருதப்பிரகாசிகை என்னும் நூலுக்கு ஒப்பு ஆகும்படி இயற்றப் பெற்றதனால், இஃது ஈடு எனப் பெயர் பெறுவதாயிற்று எனவும் கொள்ளலாம்.

(4) திருவாய்மொழியின் சிறந்த பொருள் நலங்களில் மக்கள் அனைவரும் மகிழ்ந்து ஈடுபடும்படி செய்து வருவதாகலின், ஈடு எனப் பெயர் ஏற்பட்டது எனினும் அமையும்.

> "மாறன் மறைப் பொருளை
> ஈடுபடும்படியிறே அருளிச் செய்தது"

என்பது **பிள்ளை லோகஞ்சீயர்** வியாக்கியான சூக்தி (உபதேச ரத்தினமாலை–44)

	ஆழ்வார்கள்	அவதாரத்தலங்கள்	திருநட்சத்திரங்கள்
1.	பொய்கை யாழ்வார்	காஞ்சிபுரம்	ஐப்பசி ஓணம்.
2.	பூதத்தாழ்வார்	திருக்கடல்மல்லை	ஐப்பசி அவிட்டம்
3.	பேயாழ்வார்	திருமயிலை	ஐப்பசிச் சதயம்
4.	திருமழிசையாழ்வார்	திருமழிசை	தைத்திங்கள் மகம்
5.	நம்மாழ்வார்	திருக்குருகூர்	வைகாசி விசாகம்
6.	குலசேகராழ்வார்	கொல்லி நகர்	மாசிப்புனர்பூசம்
7.	பெரியாழ்வார்	ஸ்ரீவில்லிபுத்தூர்	ஆனித்திங்கள் சோதி
8.	தொண்டரடிப்பொடியாழ்வார்	திருமண்டங்குடி	மார்கழிக் கேட்டை
9.	திருப்பாணாழ்வார்	உறையூர்	கார்த்திகை ரோகிணி
10.	திருமங்கையாழ்வார்	திருவாலித்திருநகர்	கார்த்திகையிற் கார்த்திகை
11.	மதுரகவியாழ்வார்	திருக்கோளூர்	சித்திரைச் சித்திரை
12.	ஸ்ரீ ஆண்டாள்	ஸ்ரீவில்லிபுத்தூர்	ஆடிப் பூரம்

(10) விஷ்வக் சேனருக்குச் **சேனைமுதலியார்** (படைத்தலைவர்) என்றும் ஒரு பெயர் உண்டு. சேனைநாதன் என்றும் கூறுவர். சைவ சமயத்தில் சிவபிரானுக்குச் **சண்டேசுவரர்** எங்ஙனமோ, அங்ஙனமே வைணவ சமயத்தில் திருமாலுக்கு விஷ்வக்சேனர் விளங்குகின்றார் எனலாம். சண்டேசுவரர் போலவே இவர் பெருமாள் கோயிற் பணிகள் பலவற்றையும் மேற்பார்வையிட்டு ஆட்சி செய்வதுடன், பெருமாள் திருவுலாப்புறம் போதருங்கால் உடன் வருபவராவர். விஷ்வக்சேனர் என்னும் சொல்லுக்கு உலகமெங்கும் சேனைகளை யுடையவர் என்பது பொருள். இவர் அனந்தன் கருடன் என்பவர்களைப் போல, நித்திய சூரிகளுள் ஒருவர் ஆவர். இவரே நம்மாழ்வாருக்குக் குரு என்றும், நம்மாழ்வார் ஆக அவதரித்தவர் என்றும் கூறுவர்.

இவர்தம் நிறம் கறுப்பு. தலையில் திருமுடி உண்டு. நான்கு கைகளுடன் இருப்பார். இரண்டு கைகளில் சங்கும் சக்கரமும் விளங்கும். ஏனை இரண்டு கைகளில் கதாயுதமும் பிரம்பும் ஏந்திபிருப்பது உண்டு. சில திருவுருவங்களில் ஒரு கையில் வாளும், மற்றொரு கையில் பிரம்பும் காணலாம். சிலவற்றில் இடக்கை இடுப்பில் இருக்க, வலக்கை அச்சுறுத்தும் அதிகார தோரணையில் காணப்படும்.

வைஷ்ணவ சமயக் கொள்கையின்படி ஸ்ரீ நாரயணரும் மகாலட்சுமியும் முறையே முதல், இரண்டாம் ஆசார்யர்களாக விளங்க, இவரே மூன்றும் ஆசார்யராகத் திகழ்கின்றார். பெருமாள் கோயில்களில் இவருக்கு வடகிழக்கு மூலையிற் சந்நிதி அமைந்திருக்கும். இவர்தம் திருநட்சத்திரம் ஐப்பசிப் பூராடம். மனைவியின் பெயர் சுத்ராவதி. சைவத்தில் **விநாயகர்** போல, வைஷ்ணவத்தில் இவரை எல்லாச் செயல்களுக்கும் தொடக்கத்தில் வணங்கி வழிபடுவர். திருவரங்கம், பெருமாள் கோயில், திருமலை முதலிய தலங்களில் உள்ள கோயில்களில் பிரமோற்சவம் தொடங்குவதற்கு ஒருநாள் முன்னர், இவரைத் திருவீதி எழுந்தருளச் செய்து வலம் வருவிப்பது வழக்கம். பிரமோற்சவப் பெருவிழாவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் (security arrangements) செம்மையாகச் செய்யப்பட்டுள்ளனவா? என்று இவர் மேற்பார்வை யிடுவதாக ஐதிகம்.

★

சங்கற்ப நிராகரணம்

முன்னுரை :

'சங்கற்ப நிராகரணம்' என்பது சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் ஒன்று. சிவப்பிரகாசம், திருவருட் பயன், வினா வெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் என்னும் எட்டு நூல்களும் 'சித்தாந்த அஷ்டகம்' எனப்படும். இவ்வெட்டு நூல்களையும் அருளிச் செய்தவர் சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்களுள், ஒருவராகிய உமாபதி சிவாசாரியார் ஆவர்.

நூலின் தோற்றம் :

சாலிவாகன சகாப்தம் 1235 (கி. பி. 1313) ஆம் ஆண்டில் ஆனிமாதத்தில், தில்லை அம்பலவாணரது ஆரும் திருவிழாவில், தேர்மண்டபத்தில் "ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள் பலர் பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து" ஏறி இருந்தனர். அப்பொழுது அவர்களை நோக்கி "வஞ்சப் பிறவிக்கு அஞ்சிவந் தொருவன் ஏது இறை அருள்" என வினவினன். அவனுக்கு விடையாக அங்கிருந்த பலருள்ளும், மாயாவாதியானவன் எழுந்து தன் சமயக் கொள்கையை எடுத்துக் கூறினான். அதனைக் கண்ட ஐக்கியவாதி அடுத்து எழுந்திருந்து, மாயாவாதியின் கொள்கையை மறுத்துரைத்துத் தன் கொள்கையை எடுத்துக் கூறினான். உடனே பக்கலில் இருந்தவன் அதனையும் மறுத்துத் தன் கொள்கையை வற்புத்தினான்.

இங்ஙனமே பலரும் தத்தம் கொள்கையை ஒருவரை அடுத்து ஒருவராக எடுத்துக் கூறிப் பிறரது கொள்கைகளை மறுத்துரைத்து வழக்குரை நிகழ்த்தினர். அது கண்டு அங்கிருந்த சான்றோர்கள் 'நுங்கள் செயல் அழகிது' என ஓராற்றால் பாராட்ட, அவ்வழக்கிட்டினையே பொருளாகக் கொண்டு, "வாதம் செற்பை விதண்டை ஏது என்பனவும், வினை பயன் மெய் உரு என்ற நால்வகை உவமையும் திகழ்தர" இந்நூலைத் தாம் இயற்றியதாக, இதன் பாயிரத்துள் உமாபதிசிவனார் இயம்புகின்றார்.

நூற் பெயர்க் காரணம் :

'சங்கற்ப நிராகரணம்' என்னும் இந்நூல் சிறந்துயர்ந்த செவ்விய நடையில் அகவற்பாவான் இயன்றுளது. மாயாவாதம், ஐக்கியவாதம், பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சங்கிராந்தவாதம், ஈசுர அவிகாரவாதம், நிமித்த காரண பரிணாம வாதம், சைவவாதம் முதலிய பல கொள்கைகளை எடுத்துரைத்து (சங்கற்பம் செய்து), அவற்றின் கணுள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி, அழகுற மறுத்துரைப்பதனால் (நிராகரணம் செய்வதனால்), இந்நூல் சங்கற்ப நிராகரணம் என்னும் பெயர்த்தாயிற்று.

இந்நூலைப் பயில்வதனால் மேற்குறித்த சமய வாதிகளின் கொள்கைகள் யாவை என்பதும், அவற்றின் குறைபாடுகள் யாவை என்பதும், இவற்றினை யெல்லாம் விடச் சைவசித்தாந்தம் எத்துணையளவுக்கு உயர்ந்த விழுமிய பெருங்கொள்கையாக விளங்குகின்றது என்பதும், நாம் எளிதில் தெளிவுற அறிந்து கொண்டு, உள்ளம் களி துளும்புகின்றோம்.

நூலின் சிறப்பு :

உமாபதி சிவம் இயற்றியருளிய சங்கற்ப நிராகரணம் என்னும் இந்நூலானது சங்கராசாரியர் இயற்றியதாகக் கூறப்படும் சர்வசித்தாந்த சங்கிரகம், ஹரிபத்திரர் இயற்றிய ஷட்தர்சன சமுச்சயம், ஜினதத்தர் எழுதிய விவேக விலாசம், மாதவாசாரியர் வரைந்த சர்வதர்சன சங்கிரகம் என்னும் நூல்

களைப் போன்று, தமிழிற் பலவேறு சமயக் கொள்கைகளையும் விவரித்து விளக்கும் சிறப்புடைய நூலாகும்.

உமாபதிசிவம் ஒருவரே பல்வேறு சமய வாதிகளின் கொள்கைகளையும் சிறந்த முறையிற் சுருங்கிய நிலையில் எடுத்துரைப்பவராகவும், பின்னர் அவற்றைத் திறம்பட மறுத்துரைப்பவராகவும் இருவகை நிலையில் இருந்து, இந்நூலைச் செவ்விதின் இயற்றி யிருக்கும் சிறப்பு, மிகவும் வியக்கற்பாலதாகும். தருக்கநெறி சிறிதும் பிறழாது வழக்குரை நிகழ்த்திச் செல்லும் இவ் வரும்பெறல் நூல் நம்மனோர் அறிவிற்குப் பெருவிருந்தாய் அமைந்து திகழ்வதோடு, அதனை நுட்ப திட்பமுறச் செய்யவல்ல சிறந்த பயிற்சியினையும் நமக்கு அளிக்கின்றது.

இந்நூலை நன்கு பயின்று கொள்பவர்கள் "சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை வெல்லும் சொல் இன்மை யறிந்து" எனப்புகலும் திருவள்ளுவர் பெருமான் அறிவுரைக்கேற்ப, தம் சொல்லைப் பிறிதோர் சொல் வெல்லும் சொல்லின்மை அறிந்து கூறவல்ல ஆற்றல் பெறுவர் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய அருமை பெருமை மிக்க சங்கற்ப நிராகரணம் போன்ற சமய—தத்துவ நூல்களின் சிறப்பினை யுணர்ந்து அவற்றை முறையே ஆராய்ந்து கற்கமுற்படின், நாம் பலவகைகளிற் பயனுற்றுப் பெருமிதங் கொள்ளலாம். மேலை நாட்டு அறிஞர்களும் வியந்து பாராட்டித் தலைவணங்கிப் போற்றும் முறையில் நம் இந்திய நாட்டில் சமய – தத்துவ நூல்கள் தலை சிறந்து திகழ்கின்றன என்பது உண்மை; வெறும் புகழ்ச்சியன்று;

> "ஐரோப்பாவிற் பரவத் தொடங்கியுள்ள கீழை நாடுகளின் – எல்லாவற்றிலும் மேலாக இந்தியாவின்–கவிதை தத்துவம் ஆகியவற்றின் வளர்ச்சிகளை நாம் ஊன்றிக் கருதிப் பயிலும் போது, நாம் பல உண்மைகளை–பொருள் பொதிந்த சிறந்த உண்மைகளை—புதிது கண்டு உணரப் பெறுகின்றோம். மேலே செல்ல முடியாமற் சில சமயங்களில் நின்றுபோன, ஐரோப்பிய அறிவுத் திறனின் அற்பமான விளைவுகளை ஒப்பிட்டு நோக்கின், அவைகள் மிகப் பெரியனவாக வேறுபட்டுச் சிறந்து விளங்குகின்றன.
>
> மனித குலத்தின் தொட்டிலாக விளங்கி, மிகமிக உயர்ந்த தத்துவக் கொள்கைகளின் பிறப்பிடமாகவும் திகழும் கீழை நாடுகளின் அறிவுத் திறனுக்கு, நாம் மண்டியிட்டுப் பணிந்து தீர வேண்டிய நிலையிலேயே இருக்கின்றோம்." (1)

என்று **விக்டர் கஸின்** என்னும் மேலை நாட்டுப் பேரறிஞர் ஒருவர், தாம் எழுதிய 'இந்திய மறு மலர்ச்சி' என்னும் நூலிற் குறிப்பிடுவது ஈண்டு நாம் அறிந்து இன்புறுதற்கு உரியது.

இணைய பல நலங்கள் நிறைந்த நம் நாட்டுச் சமய தத்துவ நூல்களுள், தலை சிறந்த ஒன்றாக விளங்கும் சங்கற்ப நிராகரணம் என்னும் சைவசித்தாந்த சாத்திர நூலின் பொருள் குறித்து, இங்கு இயன்றவரை ஒரு சிறிது சுருங்கக் காண்போம்.

மாயாவாதி சங்கற்பம்:

ஒருகாலும் அழிவில்லாதவனாய், முற்றுணர்வினனாய், குற்றமற்றவனாய், தத்துவங்களைக் கடந்தவனாய், மறைப் பில்லாதவனாய், சொல்லும் பொருள்களுமாகிய

---

(1) "When we read with attention the poetical and philosophical movements of the East, above all those of **India**, which are beginning to spread in Europe, we discover there so many truths, and truths so profound, and which make such a contrast with the **meanness** of the results at which the European genius has sometimes stopped, that **we are constrained to bend the knee** before that of the East, and to see in this cradle of the human race the native land of **the highest philosophy**."

—**Victor Cousin**, quoted by Dr. S. Radhakrishnan.

நூல்களுள் எதனாலும் அணுகவொண்ணாதவனாய், தூய அறிவின் வடிவனாய், எல்லா இன்பங்களும் தானேயாய், துன்பங்கள் தன்னைத் தொடராதவாறு மிக்க தொல்பெருஞ் சுடராய், வரம்பில் வேதச் சிரந்தரு பொருளாக உள்ள பிரமம் இருக்கும். கரும்பு தன்பால் தோன்றிய சுவையைத் தான் அறியாமை போல, பிரமமும் தன்பால் நிகழும் இன்பத்தைத் தான் அறியாததாய் விளங்கும்.

பிரமம் உலகத்தைப் படைக்குங்கால், பொன் தானே பல அணிகளாய் இருக்கும் தன்மைபோல, நிலம் தீ நீர் வளி விசும்புகளாகவும், பிறவாகவும் இருக்கும். இங்ஙனம் தோன்றிய உலகம் நித்தியமோ? அநித்தியமோ? அநித்தியமென்னில் இது நித்தியமாய்த் தோன்றுவது என்னையெனின், —இப்பியானது வெள்ளியை ஒத்துத் தோன்றுதல் போல நம்மனோர் மதிமயக்கத்தால் அநித்தியமாயுள்ள பிரபஞ்சமும் நித்தியமாகத் தோன்றும்.

பிரமமும் உலகமும் தம்மில் வேறோ எனில்,—பிரமமே இவ்வுலகமா யிருக்கும். பிரமத்தைப் போலன்றி உலகம் வேற்றுமையாய் இருப்பதென் எனில்—, சிலந்தியின்பால் தோன்றிய நூலினைப்போல உலகமும் பிரமத்துக்கு வேற்றுமையாய் இருக்கும். 'சிலந்தியின் நூலைப்போல்' என்று சொல்லின் அஃது ஒரு தன்மையாக இருப்ப, உலகம் பலவிதமாய் உள்ளதே எனில்—, மரமானது இலையும் பழமும் பூவுங்காயும் தோலும் நாரும் வைரமும் எனப் பலவாக இருப்பது போலவும், நீரானது திரையும் நுரையும் திவலையும் குமிழியும் எனப் பலவகையாக இருப்பது போலவும், உலகமும் பலவகையாகக் காணப்படும்.

அறிவில்லாத அசித்தை அறிவாகிய சித்துப் பொருள் தன்னிடமிருந்து தோற்றுவியாது எனில், நெல்லானது பதரையும் வைக்கோலையும் தரும் தன்மை போல, சித்தாகிய பிரமமும் சடமாகிய பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும். பிரமம் இங்ஙனம் செய்யவேண்டுவதென்னை யெனில்,— பிரமத்திற்கு **இயல்பு** என்றும், **விளையாட்டு** என்றும் இருவகை நிலைகள் உண்டென மறைகள் மொழியும்.

உபாதிகள் (தாக்குதல்கள்) பலவாதல் போலப் பிரமமும் பலவாக இருக்குமோ எனில்,— **மணிகள்** பல நிறமாயினும் அவற்றை இணைக்கும் நூல் ஒரு தன்மையாய் இருந்தாற் போலவும், **பசுக்கள்** பல நிறமாய் இருப்பினும் அவற்றின் பால் ஒரு நிறமாய் இருந்தாற்போலவும், நீர் நிறைந்த **குடங்கள்** பலவாய் இருந்தனவேனும் அவற்றிற் றோன்றும் ஞாயிறு ஒன்றாதல் போலவும், கிணறு கடல் குளம் குழி வாய்க்கால் வாவி இவைகளெல்லாம் பலவகையாய் இருந்தாலும் அவற்றின் தண்ணீர் ஒன்றாய் இருந்தாற்போலவும், யோனி (பிறப்பு)கள் பலவாயினும் அறிவாகிய பிரமம் ஒன்றாய் அவ்வப் பிறவிகள் தோறும் கூடியிருக்கும்.

பிறவிகள் தோறும் அறிவாகிய பிரமம் கூடியிருப்பின் அது கட்டுநிலை பெறுமோ எனில்—கண்ணாடியில் நிழலானது தோன்றி நின்றாலும் அதன்கண் அது கட்டற்றுத் தோய்வற நின்றாற்போல, உடலின்கண் பிரமம் தோன்றி நின்றாலும் அது கட்டற்றே தோய்வற நிற்கும். பிரமமாகிய அறிவு தோய்வற நின்றால் உடல் இயங்குவது எவ்வாறு எனில்— காந்தமானது தோய்வற நிற்க அதன் முன்னிலையில் இரும்பு தொழிற்படுதல் போல, பிரமத்தின் சந்நிதியில் உலகம் தொழிற்படும்.

பிரமமும் உடலில் நின்று இன்ப துன்பங்களை நுகருவதென்னை யெனில்—கனவிற் கண்ட புலியும், இரவிற் பழுதையைப் பாம்பென மயங்கிய மயக்கமும், பேய்த்தேரும் போலப், பிரமமும் உடலோடு கூடி இன்ப துன்பங்களை நுகர்தல் வெறும் தோற்றமாத்திரையேயன்றி உண்மையாவதன்று.

கண்கூடாக ஐம்புலன்களோடு கூடிக் கன்மங்களை நுகர்தல் காணப்படுகின்றதே எனில்—பளிங்கானது பலநிறங்களோடு கூடியிருப்பினும் அந்நிறங்களின் வேறாதல் போல, புலன்களோடு கூடியிருக்கும் பிரமமும் அவற்றின் வேறெனத் தொடர்

பற்று நிற்கும். சாக்கிரம் சொப்பனம் முதலிய அவத்தைகளை அறிவானது நாடோறும் அனுபவியா நின்றாலும், நல்வினை தீவினைத் தொடர்புகள் பிரமத்தைச் சாரமாட்டா.

அஃது எதுபோல எனில்—கண்ணாடியிலே ஒருவன் முகம்தோன்றிய பொழுது, அங்ஙனம் தோன்றிய நிழலாகிய முகத்திலுள்ள கண்களிற் பாறை கொண்டு தாக்கியவழி, அக்கண்ணாடி உடைவதல்லது உண்மையில் கண்களுக்கு ஊறு நேராமைபோல என்பது.

இங்ஙனம் மாயாவுபாதிகளால் உண்டாகிய பிறவித் தொடர்பு நீங்குவது எங்ஙனம் எனில்—வானத்தில் தோன்றிய மேகத்தை வாயுவானது நீக்குவதுபோல, பிரமத்திற்கு உண்டாகிய மறைப்புக்களை யெல்லாம் விவேக ஞானமானது நீக்கும். விவேகஞானமும் பிரமமும் வேறோ எனில்—வேறன்று. யாங்ஙனமெனில், வானத்திற் சூழ்ந்த மேகங்களை நீக்குவது அவ்வானத்திற் பிறந்த வாயுவே யாதல் போல, பிரமத்திற்கு உண்டாகிய மறைப்புக்களை நீக்குவதும் அப்பிரமத்தினின்று தோன்றும் விவேகஞானமே யாதலின், வேறன்று என்பதாம்.

அற்றேல், பிரமத்தின் மறைப்புக்களை விவேகஞானம் நீக்குவது எவ்வாறு எனில்—ஒரொரு வைக்கோலாகவும் ஓலையாகவும் கழியாகவும் பறித்துப் போட்டவழி **வீடு** என்னும் உருவம் இல்லையாகப் போயின தன்மைபோலவும், ஒரொரு இழையாகப் பிரித்துவிட்ட பின்பு **ஆடை** என்பதன் உருவம் அழிந்தொழிந்த தன்மை போலவும், பிரபஞ்சமாகிய பொய்யையும் மண் முதலிய தத்துவங்களாகக் கண்டு, இது நான் அல்ல இது நான் அல்ல என மறுத்துக் கழித்துக் கொண்டே சென்ற வழி, பிரமத்தின் மறைப்புக்களெல்லாம் விவேக ஞானத்தால் நீங்கும்.

மறைப்புக்களை யெல்லாம் நீக்கிய விவேகஞானம் பின்னர் யாது செய்யும் எனில்—மறைப்பு நீங்கிய பிரமப் பொருள் தன்னின் வேறன்றித் தானேயாய்த், தன்னிடத்தில் தன்னியல்பைத் தானே கண்டுணர்ந்து, தன் இன்பத்தைத் தானே நுகர்ந்து, **'தத்துவமசி'** என்னும் மகா வாக்கியத்தின் தெளிவுகொண்டு, 'அந்தப் பிரமம் நான் ஆனேன்' என்னும் பிரமஞானத்தைத் தெளிய உணர்ந்து பின்னர்ச் சலனமின்றி இருக்கும். 'சுவை யொளி யூறோசை நாற்றம்' முதலிய நுகர்பொருள்களைத் துய்க்கும்போதும், அவற்றிற்குச் சலனம் (அசைவு) இல்லை என்றது எவ்வாறெனில்—நீரானது அசைந்தவழி அதன்கண் தோன்றும் சந்திரன் அசைந்ததாயினும், அதனால் வானத்திலுள்ள சந்திரன் அசைவுறாதது போலாம் என்பது.

உடற்பற்று விட்ட நிலையில் அறிவும் பிரமமும் தம்மில் ஒன்று சேர்ந்தமை யாங்ஙனம் எனில்—குடத்துக்குள் அடைபட்டு நின்ற காற்று, குடம் உடைந்த வழி வான்வெளியிற் சென்று கலந்து ஒன்றுபட்டாற்போல என்பது.

'அது நான் ஆனேன்' என்னும் பிரம ஞானத்தை யறிந்து தாம் முன்பு செய்து வந்த கன்மங்களை யெல்லாம் விடமாட்டாத அறிவிலிகள், அந்தப் பிரமஞானம் உண்டாதற் பொருட்டுச் **சாதன சதுட்டயம்** ஆகிய கன்மங்களைக் கடைப்பிடித்து ஒழுகிவர, விவேகஞானம் உண்டாகும். அவ்விவேகஞானம், அரணி (Attrition) என்னும் தீக்கடை கோலினின்று பிறந்த தீ அதனையும் சேர எரித்தல் போல, கன்மங்கள் எல்லாவற்றையும் அழித்தொழிக்கும். அவ்விவேக ஞானநிலையின் வேறாக முத்திப்பேறு ஒன்றில்லை. அதுவே முத்தியாகும் என்று மாயாவாதி எடுத்துரைத்தான்.

—ஆசிரியர்.

ஆணையர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

15—11—65	சென்னை மாநில இறைபணியாளர் மாநாடு.
21—11—65	சென்னைத் திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலில், தமிழகக் கோயில்களின் சார்பில் இந்தியப் பிரதமர் அவர்களிடம் தங்க நன்கொடை அளிப்பு விழா.
24—11—65	திரு. ஜே. எம். நல்லசுவாமி பிள்ளை அவர்கள் நூறுவது பிறந்த நாள் விழா.

"தெய்வம் தெளிமின் ;
தெளிந்தோர்ப் பேணுமின்"

(முன் இதழ்த் தொடர்ச்சி)

நம்பிக்கை :

வாழ்க்கையில் நிலையாமையினை உணர உணர, நம்மிலும் மேற்பட்ட பரம்பொருள் ஒன்று உண்டு என்பது நமக்குத் தெளிவாம். அத்தகைய பரம்பொருள் ஒன்றுண்டு என்று நம்புவது, நமக்குப் பலவகைகளில் நலமே பயக்கும். நம்பிக்கை (Faith) யினுல் உண்டாகும் நலங்கள் பற்பல. வாழ்க்கையின் அடிப்படையே நம்பிக்கையில்தான் இருக்கின்றது. யாரையும் எதனையும் நம்பாத ஒருவனின் வாழ்க்கை துயரம் நிறைந்ததாகவே இருக்கும். அதனுல்தான் திருஞான சம்பந்தர் "மனம் பற்றி வாழ்மின்; மா துக்கம் நீங்கல் உறுவீர்" என அருளிச் செய்துள்ளார். நமக்குத் தீங்கு ஏதும் விளைக்காமல் நன்மை தரும் என்ற நம்பிக்கையில்தான், மருத்துவர் தரும் மருந்தினை நாம் உட்கொள்ளுகின்றோம். நம்மை எவ்வகை விபத்துக்களிலும் வீழ்த்திவிடாமல் பாதுகாப்பாகக் கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள் என்ற நம்பிக்கையுடன்தான், பேருந்துகளிலும் (Buses), தொடர் வண்டிகளிலும் (Trains), வானவூர்திகளிலும் செல்ல முற்படுகின்றோம். இங்ஙனம் எவ்வெவற்றையோ யார் யாரையோ நம்புகின்ற நாம், இறைவனையும்—அவன் அருள் பெற்ற அடியார்களையும்—அவர்கள் அருளிச் செய்த சிறந்த நூல்களையும் நம்புவதில் குற்றம் ஒன்றும் இல்லை. (1)

(1) Tho' world on world in myriad, myriad roll
Round us, each with different powers
And often forms of life than ours,
What know we greater than the Soul?
On God and God-like men
we build our trust.
—*Lord Tennyson.*

அமெரிக்கா முதலிய மேலை நாடுகளில் எவ்வளவோ செல்வச் செழிப்பும், வாழ்க்கை வசதிகளும் நிறைந்திருந்தும், அங்கெல்லாம் உள்ள மக்களில் நூற்றுக்குப் பன்னிருவர், பதின்மூவர் விழுக்காடு மனநோயாளர்களாக மாறிப் பெரிதும் வருந்தி வருகின்றனர் எனப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. எவ்வளவோ சுகபோகங்களை அநுபவிக்கக் கூடிய வாய்ப்பும் வசதிகளும் பெற்றிருந்தும், மக்கள் பலர் தற்கொலை முதலியன புரிந்து கொள்ளுகின்றனராம். மற்றும் பலர் தம்முடைய மனக்கவலைகளையும் மன அலைவுகளையும் தணித்துக் கொண்டு தப்புவித்துக்கொள்ளும் பொருட்டு, மயக்க மருந்துகள், மற்றும் உறக்க மருந்துகள் போன்ற பலவற்றைப் பயன்படுத்துகின்றனர் என அறிகின்றோம். சமய நம்பிக்கையும் கடவுளுணர்வும் அவர்களிடையே நன்முறையில் வளர்ந்து நிலவி வந்திருக்குமாயின், இத்தகைய அவல நிலைகள் அங்கு ஏற்பட்டிருக்கமாட்டா.

நம் நாட்டில் எவ்வளவோ வறுமையிலும் பிணிகளிலும் பிறநிலைகளிலும் மக்கள் வருந்திக் கொண்டிருக்கின்றனராயினும், நம்மிடம் வழிவழியாக வளர்ந்து வந்துள்ள பண்பட்ட நல்ல சமய நம்பிக்கைகளும், கடவுளுணர்வும், இவற்றையெல்லாம் எதிர்த்து நிற்கவும் ஏற்றுக்கொண்டு ஈடுகொடுக்கவும் போதுமான மனவலிமையையும் உறுதிப்பாட்டினையும் கொடுத்து, நமக்கு உதவி புரிந்து வருகின்றன. "நம்பினோர் கெடுவதில்லை. இது நான்கு மறைத் தீர்ப்பு" என்பர் பாரதியார்.

நம்பிக்கை என்பது ஒரு தனி மனிதனுக்கு மட்டுமே யன்றி, ஒரு பெரும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் கூட, நலம் பயப்பதாகும். நம்பிக்கை மிகுந்து நிலவி வரும் காலங்களில், ஒரு நாடோ

சமுதாயமோ மிகவும் செழித்துச் சிறந்தோங்கித் திகழ்கின்றது. நம்பிக்கை குறைந்து இறையுணர்வு மழுங்கியிருக்கும் காலங்களில், ஒரு நாடும் சமுதாயமும் எவ்வளவுதான் சீரும் சிறப்பும் மிக்குத் திகழ்வது போலக் காணப்பட்டாலும், அவைகள் நாளடைவில் நலிவுற்றுத் தேய்ந்து சிதைந்து போகின்றன. இவ்வுண்மையினை உலகவரலாறும், மனிதகுல வரலாறும் நமக்கு நன்கினிது உணர்த்துகின்றன. (2)

அறிவும் அன்பும் :

தம்மை அறிவுநெறிக் கொள்கையினர் (Rationalists) எனக் கூறிக் கொள்ளும் ஒரு சிலர், இறைவன் ஒருவன் உண்டு என்பதனைத் தம் அறிவினாலேயே ஆராய்ந்து கண்டுணர முயலுகின்றனர். தம்முடைய குறுகிய சிறிய அறிவிற்கு அச்செயல் இயலாமற் போதலால், அவர்கள் உடனே கடவுளில்லை என்ற முடிவுக்கு வந்து விடுகின்றனர். நம்முடைய அறிவோ மிகவும் சிறியது; மிகவும் குறுகியது; வெறும் பருப்பொருள்களைப் பற்றி மட்டுமே உணரக் கூடியது; அதுதானும் முற்றாக இல்லாமல் ஒவ்வொரு பகுதியை மட்டுமே உணர வல்லது. இத்தகைய நம்முடைய சிற்றறிவும் சுட்டறிவும் கொண்டு, பேரறிவும் பேராற்றலும் உடைய இறைவனை நாம் அறிய முயலுதல், ஒரு சிற்றெறும்பு கடலைப் பருகுவதற்கு முயலுதலையே போலும்!

மேலும் 'அறிவினால் அறிந்த யாவும் அசத்து ஆதல் அறிதி' என்றபடி, இவ்வுலகில் நாம் நம் அறிவு கொண்டு அறியும் எந்தப் பொருளும் அழிந்துபடும் அசத்துப் பொருள்களாகவே முடிதலைக் காண்கின்றோம். ஆதலின், கடவுளை நாம் நம் அறிவினால் அறிய முடியும் என்றால், அவரும் ஏனைய பொருள்களைப் போல அழிந்து படுகின்ற அசத்துப் பொருளாகவே முடிவார். அவர் அசத்துப்பொருள் அல்லாமையினால்தான், நம்முடைய அறிவு ஆராய்ச்சிகளுக்கு எட்டாத நிலையில் அவர் அப்பாற்பட்டு நிற்கின்றார். அதுபற்றியே 'அப்பாலைக்கு அப்பாலைக்கு அப்பாலான்காண்'' ''அப்பாலைக்கு அப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய்'' என்றெல்லாம் சமய ஆசிரியர்கள் அருளிச் செய்துள்ளனர்.

ஒவ்வொரு பொருளையும் அளந்து அறிவதற்கு ஏற்ற உரிய கருவிகள் உண்டு. எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் என அளவைகள் பலதிறப் படுதலை நாம் அறிவோம். ஒன்றினால் அளப்பதற்குரிய பொருளை மற்றொன்றினால் அளத்தல் இயலாது. எளிய சிறிய பொருள்களுக்கே நிலை இதுவாயின், மிகவும் அரிய பெரிய பொருளாகிய கடவுளை அளந்து அறிதற்கும் உரிய கருவி ஒன்று வேண்டும் அன்றோ? அக்கருவி நம்முடைய அறிவு அன்று. கடவுளை நம் அறிவு கொண்டு ஒருபோதும் அறிதல் இயலாது. ''நூலுணர்வு உணரா நுண்ணியோன்'' அவன்! கடவுளை அன்பினால்தான் உணர முடியும். அன்பு ஒன்றுக்குத்தான் கடவுள் கட்டுப்படுகின்றார். 'அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை' அவர்! 'அன்பெனும் குடில் புகும் அரசர்' அவர்! உள்ளம் உருகி அன்பு செலுத்தினால்தான், நமக்கு அவர் உறுதுணையாய் உடனாய் நிற்பார்; மற்று நம் அறிவினால் ஆராய்ந்து பார்த்துத் தெளியலாம் என்று கருதி முயன்றால், 'சோதனையில் அகப்படாச் சோதி'யாகிய கடவுள், நமக்கு அரியராகி விடுகின்றார்!

---

(2) "The one and only real and profound theme of the world and of human history—a theme to which all others are subordinate—remains the conflict between belief and unbelief.

All epochs dominated by belief, in whatever shape, have radiance and bliss of their own, and bear fruit for their people as well as for posterity.

All epochs over which unbelief in whatever form maintains its miserable victory, even if they last and shine for a while with false splendour, are ignored by posterity because nobody likes to drudge his life out over sterile things" —**Goethe**, quoted by Dr. S. Radhakrishnan.

உள்ளம் உருகில் உடனுவர் அல்லது
தெள்ள அரியர்என் றுந்தீபற
சிற்பரச் செல்வர் என் றுந்தீபற
—திருவுந்தியார்

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போலும் மேனி பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்தவொண் ணாதே
—திருமந்திரம்

எனவரும் திருமொழிகள், இறைவன் அன்பினுல் மட்டுமே உணர்ந்து அநுபவிக்கப்படுவர் என்பதனைத் தெளிவுறுத்துதல் காணலாம். மேலும், யானையின் உதவி கொண்டே நாம் யானையின் மீது ஏற வேண்டியிருத்தல் போல, இறைவனை அறிதற்கும் கூட நமக்கு இறைவனின் அருளுதவி இன்றியமையாததாகின்றது. இவ்வுண்மையினையே **"அவனருளாலே அவன் தாள் வணங்கி"** என வரும் திருவாசகம் அறிவுறுத்துகின்றது. ஆதலின் நாம் இறைவன் பால் அன்பும் நம்பிக்கையும் கொள்ளுதல் மிகவும் இன்றியமையாததாகும்,

நன்றியுணர்வு :

மக்களாகப் பிறந்தவர்கள் அனைவருக்கும் நன்றியுணர்வு என்பது மிகவும் முதன்மையானது என்பதனை, எவரும் மறுக்க முற்படார். "எந் நன்றி கொன்றுர்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்ந் நன்றி கொன்ற மகற்கு" என்பது திருக்குறளின் தெளிவுரை. இதனையே வழிமொழிந்து,

"ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயும் உள; ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இன்றென
அறம் பாடிற்றே ஆயிழை கணவ......"

என்பது புறநானூற்றுப் பொன் மொழி. மனிதன் செய்யும் எல்லாக் குற்றங்களையும் அறியாமற் செய்பவை (அபுத்தி பூர்வம்), அறிந்து செய்பவை (புத்தி பூர்வம்) என இரண்டாகப் பிரிக்கலாம். அவற்றுள் அறியாமற் செய்வனவற்றிற்கு மன்னிப்பும் கழுவாயும் உண்டு. ஆனுல் அறிந்து செய்த குற்றத்திற்கு மன்னிப்பும் கழுவாயும் இல்லை. இஃது அறிவு நெறிக்கு ஒத்த முடிபே. இம்முறையில் ஆராய்ந்து கருதின், செய்ந்நன்றி மறத்தல் ஆகிய தீங்கு அறியாமற் செய்யப் பெறுவதன்று; அறிந்தே செய்யப் பெறுவது. ஆதல் பற்றியே, அதனைக் கழுவாய் இல்லாத கடுங்குற்றமாகத் திருவள்ளுவர் போன்ற சான்றோர்கள் பலரும் கட்டுரைத்தனர்.

இறைவன் நமக்கு எவ்வளவோ பலப்பல நலங்களைச் செய்திருக்கின்றுன். பண்டும் இன்றும் என்றும் அவனுடைய அருளுதவி, தமக்கு இடையருமல் நிகழ்ந்து வருகின்றது. நமக்குக் கையும் காலும், கண்ணும் காதும், வாயும் மூக்கும் ஆகிய பல்வேறு உறுப்புக்களையும், இறைவன் படைத்துக் கொடுத்திருக்கின்றுன். நாம் குருடாகவோ, செவிடாகவோ, ஊமையாகவோ, முடமாகவோ பிறக்க நேர்ந்திருந்தால், எவ்வளவு துன்பப்பட வேண்டி யிருந்திருக்கும். அங்ஙனம் இன்றி நாம் கேளாமலே, தன் பெருங் கருணையினுல் நமக்குக் கண்ணும் காதும் கையும் காலும் போல்வனவற்றை யெல்லாம் செவ்விதிற் படைத்துக் கொடுத்துள்ள கடவுளுக்கு, நாம் எத்துணை நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்!

பாம்பன் அடிகள் :

அண்மைக் காலத்தில் வாழ்ந்து, இறைவனின் அருள் பெற்ற சான்றோர் ஆக விளங்கியிருந்த அருட்டிரு **பாம்பன் அடிகளார்**, சென்னையில் ஒரு சமயம் தங்க சாலைத் தெருவின் வழியே சென்று கொண்டிருந்தபோது, தமது தள்ளாத வயதில் முதுமைப் பருவத்தில் ஒரு விபத்திற் சிக்கிக் கால் முறியப் பெற்றுர். அது போது, "இனி இவருக்கு எலும்புகள் கூடுவது அரிது; காலை எடுத்து விடவே வேண்டி யிருக்கும்; காலை எடுத்து விட்டு நலிவு தீர்த்து உடலைத் தேற்றுதற்கு ஒரு பெருந் தொகை செலவாகக் கூடும்" எனப் புகழ்பெற்ற பெரிய மருத்துவர்கள்

கருத்துத் தெரிவிக்கக் கேட்டு, "காலை எடுப்பதற்கே இவ்வளவு பெருந் தொகை ஆகக் கூடும் எனின், அழகிய நல்ல காலைப் படைத்துக் கொடுத்தருளிய கடவுளுக்கு நாம் எங்ஙனம் நன்றி செலுத்த வல்லோம்?'' எனக் கூறி, 'சண்முக கவசம்' என்னும் நூலைப் பாடி இறைவனை வாழ்த்தி, என்பு கூடி நல முற்றுத் தேறினராம்.

இத்தகைய உண்மை வரலாறுகள் இறைவனின் அளப்பரிய அருளுதவிகளை உணர்த்துவதுடன், நன்றியுணர்வின் பொருட்டாதல் நாம் இறை வழிபாட்டில் அன்பும் நம்பிக்கையும் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றோம் என்பதனை அறிவுறித்தும்.

தன்னை அறிவித்துத் தான்தானச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது;
—முன்னவனே

தானேதா னச் செய்தும் தைவம்என்றும் தைவமே
மானே தொழுகை வலி.
—சிவஞான போதம்.

மாணிக்கவாசகர் :

மாணிக்க வாசகர் இறைவன் தமக்குச் செய்த அருளுதவிகளை யெல்லாம் எடுத்துக் குறிப்பிட்டு, இறைவனுக்கு நன்றி கூறிப் போற்றி வணங்குகின்றார். மாணிக்கவாசகர் குறிப்பிடும் அருளுதவிகள், இறைவன் நம் அனைவருக்கும் கூடச் செய்தருளியிருப்பனவே யாகும்! வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளையும் இடையூறுகளையும் எல்லாம் விலக்கி, இறைவன் நம்மைப் பாதுகாக்கும் திறத்தினை யெல்லாம் மாணிக்கவாசகர் குறிப்பிடுகின்றார். தாயின் கருப்பப் பையில், நாம் ஒவ்வொருவரும் பத்துத் திங்கள் தங்கியிருக்கின்றோம் அப்போது ஒவ்வொரு திங்களிலும் எத்தனையோ மிகப் பல ஆபத்துக்கள் நமக்கு நேர இருக்கின்றன. அங்ஙனம் நேரும் ஆபத்துக்களிலெல்லா மிருந்து, நம்மைப் பத்து மாதங்களும் நலமுறக் காத்து இறைவன் அருள் புரிகின்றான். இவ்வுண்மையினை, மணிவாசகர் பின்வருமாறு கூறுகின்றார்.

யானை முதலா எறும்பு ஈறாய
ஊனமில் யோனியின் உள்வினை பிழைத்தும்;
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்;
ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களின் ஊறலர் பிழைத்தும்
ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்
ஆண்டுகள் தோறும் அடைந்தஅக் காலை .....
—போற்றித் திருவகவல்

சிவஞான சுவாமிகள் :

தெய்வம் ஒன்று உண்டு எனத் தெளிவதற்கு, வேறு பிறிது சான்றுகள் எதுவும் நாடுதல் வேண்டா. நம் உடம்பின் அமைப்பையும் இயக்கத்தையும் ஒருசிறிது ஊன்றி உணர்ந்த அளவிலேயே, கடவுளுண்மை தெளியலாம். இதனை "அருந்துயர்க் குரம்பையின் **ஆன்மா நாடல்**'' எனவரும் சிவஞான போதப் பாயிரத் தொடருக்குப் பொருள் விளக்கும் இடத்தில், சிவஞான சுவாமிகள் பின்வருமாறு விவரிக்கின்றார்.

"உடம்பு முதலியவற்றான் ஆன்மாவை நாடுதலாவது; இவ்வுடல் சடம், இதன்கண் இன்பத் துன்பங்களை அறிந்து நுகர்தற்கு இதனின் வேறாய் ஆன்மா என்று ஒரு பொருள் உண்டு. ஓர் உடம்பின் நிகழும் இன்பத் துன்பங்கள் மற்றோர் உடம்பின் அறியப்படாமையினால், உடம்பு தோறும் ஆன்மாக்கள் வெவ்வேறு உண்டு.

அவை இவ்வுடம்பிற் கட்டுற்று நிற்றற்கு மூலமாய் ஒரு பந்தம் அநாதியே யுடையவாதல் வேண்டும். வேண்டவே, கேவலம்-சகலம்-சுத்தம் என்னும் மூன்று அவத்தைகள் உளவாம். நாடோறும் நனவும் கனவும் உறக்கமும் பேருறக்கமும் உயிர்ப்படங்குதலும் காணப்படுதலான், உடம்பிலும் ஆன்மா ஐந்தவத்தைப்படும்.

5 - APR
MADRAS

‘ஸ்ரீ ஆண்டாள்’ ஸ்ரீ வில்லிபுத்தூர்.

திரிவிக்கிரம அவதாரம், நாமக்கல்.

CONNEMARA PUBLIC LIBRARY
5 - APR
MADRAS

திருவேகம்பநாதர் கோயிற் சிற்பம், காஞ்சிபுரம்

புலன்களை யுணரும் நனவிடத்து நினைப்பும் மறப்பும் முறையானே மாறி மாறி நிகழ்தலின், நனவு நிலையிலும் ஆன்மா ஐந்தவத்தையுறும்.

இவ்வான்மாக்கள் உடம்பிற் கட்டுண்டு தம் வயத்தன அன்றி நிற்றலின், அவற்றிற்கு உடம்பு முதலியவற்றைப் படைத்து நடாத்தி ஒடுக்கு தற்குப் பரமான்மா ஒருவன் உண்டு. அவன் இம் மூன்றனுள் ஓரோவொரு தொழில் செய்யும் கடவுளர்க்கு மேலாய் இவர்களையும் தொழிற் படுத்தி நிற்பன். அவன் உலகத்தைப் படைக் குங்கால் விகாரமின்றி யுடனாய் நின்று, தனது சமவேத சத்தியான் இருவினைகட் கேற்ப மாயை என்றொரு சடசத்தியினின்றும் தோற்றுவித்து ஒடுக்குவன்.

அவன் அமலனாய் நின்றே இவ்வான்மாக்களுக்கு இன்பத் துன்பங்களைக் கருவிகளின் வழி நுகர் விப்பன். அப்பரமான்மா அழி பொருள் போலச் சுட்டி அறியப்படுவானும் அல்லன்; பொய்ப் பொருள் போல அறியப்படாதவனும் அல்லன்; வேறாய் அறியப்படுவன். அங்ஙனம் அறிகின்ற வன் ஆன்மா; அறியப்படுகின்றவன் பரமான்மா."

இதுபோன்ற சிறந்த விளக்கங்கள் சிலவும், நாம் தெய்வம் ஒன்று உண்டு எனத் தெளிவதற்குத் துணைபுரிவன ஆகும்.

முடிவுரை :

தெய்வம் உண்டு எனத் தெளிந்து ஒழுகுதல், நம் மனித வாழ்க்கை சிறப் புறுதற்குப் பல்லாற்றானும் துணை புரியும் சமய வுணர்வும் தெய்வ நம்பிக்கையும், சிறந்துயர்ந்த பண்பு நலங்கள் பலப் பல வெளிப்பட்டு மேலோங்கித் திகழ்தற்குக் காரணமாக அமைகின்றன **(3)**. சமய வுணர்வில்லாத ஒருவன் வேறு பிற துறை களில் எவ்வளவுதான் சீரும் சிறப்புமுற்று விளங்கினாலும், சமயவுணர்வும் தெய்வ நம்பிக்கையும உடைய ஒருவன் முன்னிலை யில் சிறிது தாழ்ந்தே நிற்பான், முன்னையவனிடம் இல்லாத ஏதோ ஒரு சிறந்த தனிப் பெருஞ் சிறப்பு, பின்னைய வனிடம் அமைந்திருக்கக் காணலாம் (4). எனவே, நாம் அனைவரும் இத்தகைய தெய்வ வுணர்வு மிக்கவர்களாய் விளங்கி, வையத்து வாழ்வாங்கு நலமுற வாழ முற்படுவோமாக!

(3) "The highest flights of **charity, devotion, trust, patience, bravery etc.,** to which the wings of human nature have spread have been for **religious ideals**".

—Prof. William James

(4) "When one compares the deeply religious and spiritual person with the best and bravest of those who are not religious, one sees, it must be **confessed**, that the former possesses something which **others lack**"

—Prof. J, B. Prat

கோயில் நிகழ்ச்சிகள்

6-11-1965 முதல் 13-11-1965 வரை	ஸ்ரீ வேணுகோபால சுவாமி தேவஸ்தானம், நெரிஞ்சிப்பேட்டை	நாட்டுநலன் கருதி இலட்சார்ச்சனை.
7-12-1965	ஸ்ரீ காமாட்சி ஏகாம்பரேசுவரர் கோயில், மதுரை.	திருக்கார்த்திகை உற்சவம்
27-10-1965	மதுக்கரை செல்லாண்டியம்மன் கோயில், திருக்காம்புலியூர்.	மண்டலாபிஷேக நிறைவு விழா.
7-12-1965	ஸ்ரீ அருணாசலேசுவரர் கோயில் திருவண்ணாமலை	கார்த்திகைத் தீபம்.
,,	ஸ்ரீ திருமங்கையாழ்வார், திருவாலித்திருநகரி.	கார்த்திகை உற்சவம்.

திருமயிலைக் கபாலீச்சுரம் கார்த்திகைச் சோமவாரம், சங்காபிஷேக விழா.

சேலம் சுகவனேசுவரர் கோயில், சமரச சுத்த சன்மார்க்க சங்க ஆரம்ப விழா.

திருமயிலைக் கபாலீச்சுரம், பாரதப் பிரதமர் திருமிகு. லால்பகதூர் சாஸ்திரி அவர்களின் வருகை (21-11-65)

சிவஞான போதம்

(திரு. க. வச்சிரவேல் முதலியார், பீ.ஏ., எல்.டி., காஞ்சிபுரம்.)

பன்னிரண்டாஞ் சூத்திரம்

செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன்எனத் தொழுமே

சூத்திரக் கருத்து

இதற்கு முன் உள்ள சூத்திரத்தில், நிட்டையியல்பு கூறும் வாயிலாகப் பரமுத்தி நிலையை ஆசிரியர் விளக்கி அருளினார். அந்நிலையை எய்தினோர் வியாபக உணர்வு விளங்கப் பெற்றுச் சீவத் தன்மையினின்றும் விடுபடுவர். சிவமே எனற்கு உரிய உயர்வுடைய ராவர். அதனால் அவர்களைச் சீவன் முத்தர், அணைந்தோர், மெய்த்தொண்டர் முதலிய பெயர்களால் நூல்கள் வழங்கும், ''**நீத்தார் பெருமை**'' என்றதில் திருவள் ளுவர் நீத்தார் என்றது இவர்களையே, பசுத்துவத்தை நீத்தவர்கள் என்றபடி. இவர்களுக்கும் உடம்பு உள்ளவரை பிராரத்தம் (நுகர்வினை) உண்டு. அதனால் சில சமயங்களில் இவர்கள் உடம்பைச் சார்ந்து உலகமுகப்பட நேரும். அங்ஙனம் நேரும்போது தற்போதத்தால் உலகப் பொருள்களைப் பற்றிப் பிறப்பு நெறியில் வீழாமல் தம்மை இவர்கள் பாதுகாத்துக் கொள்வர். இதனை இவர்கள் எவ்வாறு செய்வர் என இச்சூத்திரம் உணர்த்து கின்றது.

இச்சூத்திரத்தின் கருத்தை மெய்கண்ட தேவர் பின்வருமாறு கூறுகிறார் :

'' அசிந்திதனாய் நின்ற பதியைச் சிந்தி
தனாகக் கண்டு வழிபடுமாறு உணர்த்துதல்
நுதலிற்று''.

நினைக்க வாராத முதல்வனை நினைக்க வரும் பொருளாகத் தெளியவுணர்ந்து சீவன் முத்தர் வழிபடுவர்: அவர் அவ் வாறு வழிபடும் முறையை இச் சூத்திரம் உணர்த்தப்புகுகின்றது என்பது பொருள்.

முதல்வன் எல்லாமாய் அல்லனுமாய் நிற்பவன் என்பது மெய்ந்நூல்களாற் கூறப்படும் உண்மை. எல்லாமாய் நிற்ற லாவது உலகுயிர்களோடு கலந்து நின்று அவற்றைத் தொழிற்படுத்தி நிற்றல்; உயிர், உடம்பைச் சார்ந்து அதனைத் தொழிற்படுத்துதலினால், உடம்பேயாய்க் காணப்படுமாறுபோல, அல்லனாய் நிற்றல் தன் உண்மை நிலையில் யார் உணர்வுக்கும் அப்பாற்பட்டு ஞான இன்ப இயல்பின னாய் நிற்றல், முதல்வனுக்கு உள்ள இவ் விரண்டு இயல்புகளையும் உள்ளவாறு உணர்ந்து அனுபவிப்பவர்கள் சீவன் முத்தர்களே. ஏனையோர் அங்ஙனம் உணரவல்லர் அல்லர்.

சீவன் முத்தர், தம் உடம்பைப் பற்றாது திருவருளைப் பற்றிநின்று, அதனால் விளங் கும் வியாபக உணர்வால் மெய்ப்பொரு ளின் உண்மை நிலையைத் தலைப்பட்டு, அன்பே இன்பாய் அனுபவித்து அமரும் நிலையே முதல்வனை அல்லனாய் நிற்கும் நிலைபற்றி உணர்ந்து வழிபடுதலாம். இத னையே திருவள்ளுவர் ''சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகல்'' எனக் குறிப்பித் துள்ளார். இங்கு முதல்வனின் அசிந்தித னாய் உள்ள இயல்பு சீவன் முத்தர்களு டைய மெய்யுணர்வுக்கு நேரே விளங்கு கிறது. இங்கு விளையும் பேரின்ப நுகர்ச்சி சிவபோகம் எனப்படும். இந்நிலையே நிட்டை நிலை. இனி, சீவன்முத்தர் நிட் டையின் நீங்கி நிற்கும்போது உடம்போடு கூடி ஐம்பொறிகளையும் அகக்கரணங்களை யும் கொண்டு உணர்ந்து நிற்பர். இங் ஙனம், பிண்டத்தைப் பற்றி உணர்வு நிகழும் போது, சீவன் முத்தர் பார்க்கப் படும் உலகை, முக்குணமாய்க் கண்டு அதில் அழுந்தாமல், முதல்வனது தடத்த

உருவாய்க்கண்டு, அக்காட்சியான் வரும் பேரின்பத்தையே நுகர்ந்து கொண்டிருப்பர். "பதார்த்தங்கள் பாரார், பரமே பார்த்திருப்பர்" என எழுந்த அருண் மொழிக்கு இதுவே கருத்து. "பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் அங்கே—மற்ற வரும்பரிசு உந்திபற முளையாது மாயை என்று உந்திபற" என்பதும் இக் கருத்துப் பற்றியதே. உலக முகப்படும் போதும், இங்ஙனம் உலகின்கண் முதல்வனது இருப்பைத் தெளிய உணர்ந்து ஒழுகுவதே முதல்வனைச் சிந்திதனுய்க் கண்டு வழிபடுதலாம், இஃது அவன் எல்லாமாய் நிற்கும் நிலைபற்றி உலகப் பொருள்களில் வைத்து அவனை உணர்ந்து நிற்றல் ஆம். உலகுயிர் அனைத்தும் முதல்வனின் தடத்தவடிவே ஆயினும் அவனது இருப்பைத் தெளியக்காண்டற்கு உரிய சிறப்புச் சிவன் முத்தரிடத்தும், அவர் மேற்கொள்ளும் திருவேடத்தினும், சிவ லிங்கம் முதலிய திருமேனிகளிலுமே உள்ளது என்பது சூத்திரத்தாற் பெறப் படும். இவ்விடங்களில் முதல்வனைத் தெளியக்காணும் சிவன்முத்தர்க்கு முதல்வன் அக்காட்சி விசேடம் பற்றி நிட்டை நிலையில் தரும் பேரின்ப விளைவையே ஐம்பொறி அளவிலும் அனுபவிக்கத் தருகின்றான். இவ்வரிய உண்மையைச் சேக்கிழார் பெருமாள் திருஞான சம்பந்தர் அனுபவத்தைக் கொண்டு விளக்குவது இங்கு எண்ணி உணர்தற்கு உரியது. திருஞானசம்பந்தர் திருச்சிற்றம்பலத்தின் முன்னின்று முதல்வன் திருக்கூத்தைக் கண்ணாரக்கண்டு இன்புற்றார். பின் போற்றுகின்றார்:—

உணர்வின் நேர்பெற வருஞ் சிவ
போகத்தை, ஒழிவின்றி உருவின்கண்
அணையும் ஐம்பொறி அளவினும்
எளிவர, அருளினை எனப்போற்றி
இணையில் வண்பெருங் கருணையே
ஏத்திமுன், எடுத்தசொற் பதிகத்தில்
புணரும் இன்னிசை பாடினர்
ஆடினர், பொழிந்தனர் விழிமாரி.

சிவபோகம் என்னும் பேரின்ப விளைவு, மாற்றம் மனங்கடந்து திருவருளே சார்பாக அடங்கி நின்று உணரும் வியாபக உணர்வில், நேரே பெற வருவது; அதனை உடம்பில் உள்ள ஐம்பொறி வாயிலாகவும் எளிமையாகப் பெற்று நுகரும்படி கூத்தப்பிரான் அருளினன்—என அவனது ஒப்பற்ற பெருங்கொடைக் கருணையினையே திருஞான சம்பந்தர் ஏத்தினர். இங்ஙனம் சிவன்முத்தர் உலகமுகப்படும் போதும் முதல்வனையே அறிந்தும், விரும்பியும், கூடியும் நிற்றலினால் அவர் பவ நெறிக்கு விலக்காகும் மெய்த்தவநெறியே பற்றி ஒழுகுவர் என்பது இப்பன்னிரண்டாஞ் சூத்திரத்துக் கூறப்படுகின்றது என மெய்கண்டதேவர் குறித்தருளினர்.

சூத்திரத்தின் பொழிப்பு

சிவன் முத்தன் முதல்வன் திருவடியை அணைதற்குப் பகையாக இருந்து அதனை மறப்பிக்கும் ஆணவமலவாதனையினையும் ஏனைக் கன்ம மாயாமலவாதனைகளையும் ஞான நீராற் கழுவுவன்; தன்னைப் போன்ற மெய்யன்பரை மருவி வாழ்வான்; மலமயக்கம் நீங்குதலினால் இடையறாப் பேரன்பு செய்து நிற்கும் அவர்தம் திருவேடத்தையும், சிவாலயத்தில் உள்ள திருமேனிகளையும், சிவன் எனவே தெளிய உணர்ந்து தொழுது நிற்பான். நோன்தாள்—பிறவியின் அழுந்தாதபடி எடுத்துச் சுமக்கும் திருவடி.

இச்சூத்திரத்தில் கூறப்படும் இயல்பு சமயாசிரியர்களிடத்து முற்றிலும் இருந்தமை குறிக்கொண்டு அறியற்பாலது. சிவன் முத்தன் தன்னையே பிரமமாகச் சிந்திப்பான் என்பாரும் உளர். இச்சூத்திரத்தின் பொருள் நான்கு கூறாக வைத்து ஆராயப்படும். அதனால் இது நான்கு அதிகரணமாக வைத்து உரைக்கப்படும்.

முதல் அதிகரணம்

சூத்திரக் கூறு: "செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா அம்மலங் கழீஇ"

வார்த்திகம்; 'ஈண்டு ஆணவம்மாயை கான்மியம் என்னும் மலங்களைக் களைக என்றது, அவைதாம் ஞானத்தை உணர்த்

தாது அஞ்ஞானத்தை உணர்த்துமாக லான்' (உணர்த்துதல் — உணர்வுக்கு ஏதுவாதல்).

தன்னுற் கூறப்படும் பொருள்: சிவன் முத்தன் மும் மலங்களையும் களையும் வகையில் தன் அறிவை நெறிப்படுத்துவான். அஃது அவன் இன்றியமையாது செய்யத் தக்கது.

பிறர் கூறும் பக்கம்: பத்தாம் சூத்திரத்தில் "ஏகன் ஆகி இறைபணி நிற்க மலமாயை தன்னொடு வல்வினை இன்றே" எனக்கூறியிருத்தலின், சிவப்பேற்றிற்கு முன்னரே, பாசவீடு நிகழ்தலின், அங்ஙனம் சிவப்பேறு உடையவர்கள் மும் மலங்களைக் களைய வேண்டுவது இல்லை.

சித்தாந்தத் துணிபு: சிவப்பேறு பெற்ற சீவன் முத்தர்க்கு எல்லாமலங்களும் முன்னரே கழிந்து ஒழியினும், உடம்பு உள்ளவரை அது கொண்டு வந்த பிராரத்தம் உண்டு. அவ்வினை, இன்பத் துன்பங்களாயும், அவற்றைப்பற்றும் விருப்பு வெறுப்புக்களாயும் உணர்வின் கண் நிகழும்; நிகழின், மாயையின் காரியமாகவுள்ள நிலம் முதல் மாயைவரை உள்ள தத்துவ உணர்வு தலைப்பட்டு உலகம் காட்சிப்படும்; படின், ஆணவம் யான் எனது என்னும் செருக்கைத் தோற்றுவித்து, முதல்வனின் திருவருளை மறப்பிக்கும், பெருங்காயம் வைத்திருந்த கலத்தில் அதை முழுதும் எடுத்துவிட்ட பின்னும் வாசனை மட்டும் இருக்கும். அது கறிக்கு உதவாது. அதுபோலச் சீவன் முத்தரிடத்து மும்மலங்கள் அழிந்து விடினும், அவை பின்னும் முன்னைப் பயிற்சி காரணமாக அவர்தம் உணர்வில் மேற்கூறிய முறையில் முளைத்து எழும். அங்ஙனம் எழும்போது, அத்தோற்றம் தற்போதத்தான் நிகழ்வது என உணர்ந்து, ஓங்கு உணர்வாகிய சிவஞானத்தில் அடங்கி, நீர்வழிப்படும் புணைபோலத் திருவருள் வழி நிற்பின் அவற்றின் வாசனையும் அறும். இங்ஙனம் தம் உணர்வில் மலவாதனை சோர்வு பற்றி நுழைந்து விடாதபடி முதல்வன் திருந்தடியை மறக்குமாறு இலாதிருத்தலே மலங்களை ஞான நீராற் கழுவுவதாம். இது மெய்ஞ்ஞானிகளுக்கு இன்றியமையாது செய்யத்தக்கது என்பது இங்குக் கூறியதிலிருந்து விளங்கும்.

வார்த்திகத்தில் உள்ள "அவைதாம் ஞானத்தை உணர்த்தாது, அஞ்ஞானத்தை உணர்த்தும்" என்ற பகுதியை மேற்கூறியபடி தெரித்துணர்த்தும் உதாரண வெண்பா பின்வருவது:

புண்ணிய பாவம் பொருந்தும்இக் கான்மியமும்
மண்முதல் மாயைகாண் மாயையும்—கண்ணிய
அஞ்ஞானங் காட்டுமிவ் ஆணவமும் இம்மூன்றும்
மெய்ஞ்ஞானிக் காகா விடு.

புண்ணிய பாவமாக வந்து பொருந்தும் கான்மியம் என்றது, அவற்றின் பயனாகிய இன்பத்துன்பமாகவும், அவற்றின் காரணமாகிய விருப்பு வெறுப்புக்களாகவும், உணர்வில் விளையும் கன்ம மலம் எனப் பொருள்படும். கன்மம் மூலகன்மத்தின் காரியம் என்பது தோன்றக் கான்மியம் எனப்பட்டது.

மூன்று மலமும் மேற்கூறிய முறையில் தம் காரியத்தைச் செய்து, சிவபோகப் பெருவாழ்வை இழப்பிக்கும் ஆதலின், அவை தோன்றும் போதே களைக என்பார், "இம் மூன்றும் மெய்ஞ்ஞானிக்கு ஆகா; விடு" என்றார்.

இவ்வதிகரணத்தால் சீவன் முத்தர் உலகமுகப்படும்போது தம் அறிவை அவாவறுத்தலின்கண் உய்த்துத் திருவருளைச் சார்ந்து நிற்பர் என்பது விளக்கப்பட்டது.

"தூஉய்மை என்ப தவாவின்மை; மற்றது
வாஅய்மை வேண்ட வரும்"

"இன்பம் இடையறாது ஈண்டும் அவா
வென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்"

எனக் கூறிய திருவள்ளுவனார்க்கும் இதுவே கருத்தாதல் அதிகார வைப்பு முறை பற்றி நுண் உணர்வாற் கண்டு கொள்க.

முதலதிகரணம் முற்றிற்று.

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

இங்ஙனம் வைஷ்ணவஸ்ரீயைப் பரப்பிவரும்நாள் ஒருநாள் உடையவர் திருவுளத்தே முன் ஆளவந்தார் சரம விக்கிரகத்துக்கு முன் செய்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லையே என்ற குறை தட்டியது. அதுகாறும் அவற்றில் அசட்டையாய் இருந்த தம்மைத் தாமே கடிந்து கொண்டவராய் உடையவர் முதலில் வேதவியாச பகவானது ப்ரஹ்மசூத்ரங்களுக்கு முன் அபார்த்தமாகக் கூறப்பெற்ற உரைகளைக் கடிந்து, வியாசர் திருவுளத்துக்குகந்ததும், சகலவேதவாக்கியங்களோடும், ஸ்ம்ருதி, இதிஹாஸ புராணங்களோடு ஒப்பமுடிந்ததும், ஸத்யமானதும், மஹான்களான டங்கர் த்ரமிளர் முதலிவர்களால் உபதேசிக்கப் பெற்றதும், போதாயன விருத்தி கிரந்தத்தின் சாயையிலே அமைந்ததுமான ஒருபாஷ்யம் செய்தருள உறுதிபூண்டார்.

போதாயன கிரந்தத்தை திக்விஜயத்தின் போது காச்மீர மன்னன் அனுமதியின் பேரில் தாமும் கூரத்தாழ்வானும் பார்வையிட்டதையும், அரசன் உவந்து தமக்களித்த அக்கிரந்தத்தை அத்வைதிகள் வழிமறித்துப் பலவந்தமாகக் கைப்பற்றி இக்கிரந்தம் இனியும் இருந்தால் தம்முடைய அகங்காரவாதம் பலியாதென்றுகொண்டு அதனைத் தீக்கிரையாக்கியதையும், தாம் கிலேசப்படுவதைக் கண்ட ஆழ்வான் 'ஸ்வாமீ போதாயன விருத்தி முழுவதையும் இங்கேயே விண்ணப்பிக்கவா? அல்லது கோயில் சென்றபின் விண்ணப்பிக்கவா? என்று தாமும் வியக்கக் கூறியமையும் எல்லாம் அவர் மனத்திரையின்கண்ணே ஓடின. தாம் தம் பாஷ்யத்தை முன்னைய பெரியோர்கள் மொழிந்தவற்றை அடியொற்றியே செய்யவேண்டுமென்ற அவாவுடையரான எம்பெருமானார் அக்கிரந்த முழுமையும் தம் ஞாபகத்தே தேக்கிக்கொண்ட ஏகசந்தக்ராகி (ஒருதரம் பார்த்தவுடன் நினைவில் கொள்பவன்) ஆகிய கூரத்தாழ்வானை அழைத்தார். ஆழ்வான் வந்து தெண்டனிட்டு நிற்றலும் உடையவர் அவரைக் கருணையோடு கடாக்ஷித்து "ஆழ்வான்! நம் பரமாசாரியர் ஸன்னதியில் எடுத்துக்கொண்ட முதல் ஸங்கல்பமாகிய ஸூத்ர பாஷ்யத்தைச் செய்து முடிக்க உறுதி செய்துவிட்டேன். மஹான் போதாயனர் க்ரந்தச் சாயையிலே அமையவேணுமென்பது நம் அவா. அதை நாம் பார்த்திருந்தபோதிலும் நீரல்லவா அனைத்தையும் உள்ளே கொண்டிருக்கிறீர். ஆகவே நாம் ப்ரஹ்மசூத்ரங்களுக்கு பாஷ்யம் ஸாதிப்போம். நீர் அதனை ஏட்டில் ஏற்றி உதவ வேண்டும். நாம் பாஷ்யம் கூறும்போது எங்கேனும் போதாயனர் அபிப்பிராயத்துக்கு மாறாக ஏதேனும் சொன்னால் நீர் எழுதுவதை நிறுத்தி நம்மை உணர்த்தவேணும்" என்று அருளினார். ஆழ்வான் "ஸ்வாமீ, தேவரீர் அக்கிரந்தத்தைக் கடாக்ஷித்தபின் அதற்குமாறாக எப்படி வேறுபடியாக ஸாதிக்க முடியும்" என்ற விநயத்தோடு விண்ணப்பிக்க உடையவர் 'ஆழ்வான்! உம்முடைய பவ்யதையையும், உம் ஆசார்யனிடத்தில் உமக்குள்ள ஆதராதிசயத்தையும் உவக்கிறோம் எனினும், நம்முடைய பூர்வாச்ரமத்திலே எத்தனையோ பேரிடம் எவ்வளவோ அபார்த்தங்களைக் கேட்டிருக்கிறோம். அவை எல்லாம் நம்மை விட்டு ஓடிவிட்டன என்று எப்படி நிச்சயமாகச் சொல்வது. எங்கேனும் ஒன்று தலைநீட்டினால்? தவிர க்ரந்த முழுவதையும் முதற்பார்வையிலேயே உள்ளே தேக்கிக்கொள்ளும் ஒப்பற்ற சக்தியை நம்பெருமாள் உமக்குத்தானே அருளியிருக்கிறார். ஆகவே மேல் யோசனையை விடும். நாம் கூறுவதில் ஏதேனும் போதாயனர் அபிப்பிராயத்துக்கு மாறுபடுமானால் நீர் எழுதக் கூடாது. ஆசார்யனாயிற்றே என்னசெய்வது என்று எண்ணக் கூடாது. நமக்கு போதாயனர் திருவடியில் அபசாரம் ஏற்படக்

கூடாது என்பதே உமது நோக்காக இருக்க வேண்டுமேயொழிய நாம் சொல்லி நீர் எழுதாவிடில் உமக்கு நம்மிடத்தில் அபசாரம் ஏற்பட்டு விடுமே என்ற எண்ணத்துக்கே இதில் இடமில்லை. இதை நன்குணர்ந்து நாம் கூறுவதை எழுதும், போய் உரிய உபகரணங்களோடு வாரும்! என்றருளிச் செய்தார்.

அவ்வாணையைச் சிரமேலேந்திய கூரத்தாழ்வான் சென்று விரைவிலே ஏடுகளையும் எழுத்தாணியையும் கொணர்ந்தார். ஸ்ரீவைஷ்ணவர் திரளிலே வீற்றிருந்த உடையவரை அடிவணங்கி 'ஸ்வாமீ! அடியேன் ஆயத்தனாயிருக்கிறேன்'' என்று விண்ணப்பித்தார். உடையவரும் அவரைத் தம்மெதிரே வலப்புறமாக அமரச் செய்து ஆழ்வான் வலச்செவியில் விழுமாறு வியாசர் அருளிய ப்ரஹ்மஸூத்ரத்துக்கு பாஷ்யமிடத் தொடங்கினார். முதலிலே தாம் எம்முறையில் அவ்வுரையை அருளப்போகிறார் என்பதைச் சுருக்கமாகக் கூறிக்கொண்டார். முதன் முதலாக

"உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே''

என்று மகாகவி கம்பர் தம் இதிகாசத்தைத் தொடங்குவது போன்று, உடையவரும் முதல் முதலாக "அகிலபுவனஜன்ம'' என்ற ச்லோகத்தாலே ஜகத்காரணனுக்குத் தம் வணக்கத்தைச் செலுத்து முகத்தாலே தம் ஸித்தாந்தப் பொருளையும் குறித்துக் காப்பியற்றிப் பின் நம்பெருமாள் திருவடிகளை மனதிலே தேக்கிக்கொண்டு ஸ்ரீபாஷ்யம் அருளிச்செய்யத் தொடங்கினார். அவரது அழகிய உரையை அங்கே ஓலக்கமாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் அமுதெனச் செவிமடுக்க அவ்வுரை யனைத்தையும் ஒன்றொழியாது ஏட்டிலே அழகுற வடித்து வந்தார் ஆழ்வான்.

நாள்கள் பல சென்றன. பாஷ்யம் இனிதே ஓடிக்கொண்டிருந்தது. ஒரு நாள் உரை கூறுகையில் உடையவர் ஆன்மாவுக்கு, சேஷத்வ விதுரமான ஞாத்ருத்வம் (இறைவனிட்ட வழக்குக்கு மாறாக உள்ள ஞான முன்மை) உளது போன்று படும்படி உரைகூற, அதனைச் செவிமடுத்த கூரத்தாழ்வான் உள்ளத்திலே அத்தகைய உரை போதாயன விருத்தியோடும், உடையவர் அது வரை கூறி வந்த முறையோடும் விரோதிக்குமென்று பட்டமையின் எழுத்தாணியை ஏட்டினின்றும் வாங்கி நின்றார். உடையவரோ தம் உள்ளந்தே ஒரே வேகமாக எழும் உரைக்கோவையை நிறுத்த இயலாமல் கூறிச் சென்றவர் ஆழ்வான் எழுதாமை கண்டு உரை கூறுவதைச் சற்று நிறுத்தினர். எதோ வேறு காரணத்தால் ஆழ்வான் நிறுத்தினரோ என்று சற்று பொறுத்துப்பார்த்தார். ஆழ்வான் தமக்குள் மீண்டும் யோசித்தார். உடையவர் வேகத்தில் கூறிய உரையில் கண்ட பகவத் சேஷத்வ விதுரமான ஞாத்ருத்வத்துக்கும் தேகாத் மாபிமானத்துக்கும் எவ்வித பேதமும் இல்லை என்று பட்டது அவருக்கு. ஆனல் ஆசார்யன் சொன்னது பொருந்தாது என்று கோஷ்டியில் எவ்விதம் விண்ணப்பிப்பது? எனவே வாளா விருந்தார். உடையவரோ தம் உள்ளத்து ஓட்டம் தடைபடுகின்றதே என்ற ஆத்திரத்தில் அவரை, நோக்கி "ம்! எழுதுமே!'' என்று விரைவுபடுத்தினர். ஆழ்வான் அசையவில்லை. ஆரம்பத்தில் உடையவர் ஆழ்வான் நோக்கு உடையவர் போதாயனர் திருவடிகளிலே அபசாரப் பட்டுவிடக் கூடாது என்பதிலேயே இருக்க வேண்டும் என்ற கட்டளையைத் தமக்கு ஆதாரமாகக் கொண்டார், எழுத முயலவில்லை. இங்கே உடையவரின் உணர்ச்சி ஓட்டத்தில் ஆழ்வான் எழுதாது நின்றதன் உண்மை நோக்கை ஊகிக்க முடியவில்லை. உடையவருக்கு. உரை வேகம் தடைப்பட்டதே என்று தம்மையும் மீறிவந்த ஆத்திரத்திலே "ஆகில் நீரேபாஷ்யம் செய்யும்' என்று ஆழ்வானைத் திருவடியாலே விலக்கி எழுந்து போய் விட்டார். அருகிலிருந்தோருக்கு ஒன்றும் புரியவில்லை. யாவரும் ஆழ்வானை அண்மி "என்ன சுவாமி! இப்படி எம்பெருமானர் சீறும்படி என் நினைத்திருந்தீர்'' என்று பலபடியாக வினவினர். ஆழ்வானே அமைதியாக "இவ்வான்ம வஸ்து அவருக்கு சேஷமாகில் அவர் அதை இஷ்டம் போல் விநியோகித்துக் கொள்ள உரியரன்றோ? உடைமை உடையவனிட்ட வழக்காயிருக்குமாகையாலே அடியேனுக்கு

இதில் அன்வயம் ஏதும் இல்லை" என்று மலர்ந்த முகத்தோடு பதிலிறுத்தார்.

உள்ளம் நொந்தவராய் உள்ளே சென்ற உடையவருக்கு ஒன்றுமே ஓடவில்லை. "ஆழ்வான் ஏன் இப்படி நடந்து கொண்டார்?" என்று பன்முறை எண்ணிப் பார்த்தார். உள்ளத்துடிப்பின் காரணமாக முதலில் ஒன்றும் விளங்கவில்லை. நேரம் செல்லச் செல்லப் படபடப்பு ஒடுங்கியது. உடையவர் உள்ளம் அலை ஓய்ந்தது. நடந்தவற்றை யெல்லாம் ஆர அமர மீண்டும் நினைவு படுத்திப் பார்த்தார். தாம் எந்தவுரை கூறியதும் ஆழ்வான் நிறுத்தினர் என்பதை முதலில் தெரிந்தார். தாம் ஆழ்வானுக்கு முதன் முதல் இட்ட கட்டளையையும் நினைவு படுத்திக் கொண்டார். பளிச்சென்று பட்டது அவருக்கு, "தாம் கூறிய உரை முன்னையர் கோட்பாடுகளோடு மாறுபட்டிருக்க வேண்டும். இன்றேல் ஆழ்வான் எழுதாமல் நிறுத்தியிருக்க மாட்டார்" என்று, உடனே ஆழ்வானை அழைத்தார். அவரும் எப்போதும் போல் வந்து உடையவரைத் தெண்டனிட்டு நின்றார். ஆழ்வான் தன்மையைக் கண்ட உடையவர் "இப்படிப்பட்ட சீடனையல்லவா நாம் கோபித்துரைத்தோம்' என்று உளம் நொந்தார். ஆழ்வானை நோக்கி "ஆழ்வானே! நம்மை என் நினைத்துப்போனீர்?' என்று மெல்ல வினவினர். ஆழ்வான் ஒரு சலனமுமின்றி "அடியேனுக்கு என்று ஒரு நினைவேது ஸ்வாமி! எல்லாம் தேவரீர் நினைவேதான். உடையவன் முன் உடைமைக்கு ஏது நினைவு?" என்று வினயமாய் விண்ணப்பித்தார். ஆழ்வான் பதில் உடையவரை உலுக்கி விட்டது. அவரை அருகே அழைத்து அமர்த்தி அவர் உச்சியைத்தம் கையால் தடவி "உம்மைப் பெற்ற நமக்குக் குறை ஒன்றும் இல்லை. நடந்ததை மறந்து விடும்." என்ன, ஆழ்வானும் ஏதும் நடந்ததாக அடியேன் எண்ணினலல்லவா மறப்பதற்கு ஸ்வாமீ என்று தாழ்மையுடன் கூறி நின்றார்.

பின்னர் உடையவர் தாம் உரைத்த உரையில் ஏதேனும் விரோதம் தோற்றிற்றோ என்று வினவ ஆழ்வானும் தம் ஐயத்தை விளக்கி விண்ணப்பித்தார். உடையவரும் ஆழ்வானை நோக்கி 'நீர் ஏன் அப்போதே கூறக்கூடாதோ' என்று வினவ ஆழ்வானும் "அத்தனை கோஷ்டியிலே அவ்வளவு துணிவுடைய சீடனல்ல அடியேன்" என்று பதிலிறுத்தார். அவர் பான்மையை உடையவர் கொண்டாடி மகிழ்ந்தார். மறுநாள் முதல் பாஷ்யம் முறையே நடைபெற்றது.

ஒருக்கால் ஆத்மாவின் ப்ராதன நிரூபகம் எது? "முக்கிய தன்மை எது" என்று ஒரு வினா எழுந்தது. ஆத்மாஸ்வதந்த்ரனா? பரதந்த்ரனா? (தன்னியலோடு விளங்குவதா, மற்றொன்றைச் சார்ந்து நிறம் பெறுவதா) என்பதே உடையவர் உள்ளத்தே எழுந்த ஐயம். அவர் எவ்வளவோ முயன்றும் அதற்குரிய விடை அவருக்குக் கிட்டவில்லை. மறைகளில் பலவேறு படியாகக் காணப் பட்டமையினால் அதன் உண்மைத்தன்மையை உணர எளிதாகவில்லை. உடனே உடையவர் ஆழ்வானை அழைத்தார். "நீர் திருக்கோஷ்டியூர் போய் நம்பியைச் சேவித்து ஆன்மாவின் உண்மைத் தன்மையை உணர்ந்து வாரும்' என்று அனுப்பினர்.

திருக்கோட்டியூர் சென்றார் ஆழ்வான். நம்பியைச் சேவித்தார். நம்பி வந்த விஷயம் என்ன என்று வினவிலர் அவர் கேளாதபோது நாமாகக் கூறுவது முறையன்று என்று ஆழ்வானும் கூறவில்லை. நாள்கள் கழிந்தன. மாதம் ஆறு சென்று விட்டது. கடைசியில் ஆழ்வான் விரக்தராய் நம்பியைத் தெண்டனிட்டு 'அடியேன் கோயிலுக்கு விடைகொள்ளலாம் என்று நினைக்கிறேன்' என்று விண்ணப்பித்தார் நம்பியும் ஸர்வக்ருராகையால் ஆழ்வான் வந்த காரணத்தைத் தெரிந்தும் அவர் விடாமுயற்சியை வியந்தும் 'போம்! "ஆழ்வார் அடியேனுள்ளான் என்னும்படி கண்டீரே" என்றருளிச் செய்தார். கூரறிவுவுடைய கூரத்தாழ்வானுக்கு தம் ஐயத்துக்கு விடை கிடைத்துவிட்டதென்பது தெரிந்தது. 'தன்யோஸ்மி' (பேறுபெற்றேன்) என்று விண்ணப்பித்தார். விடை கொண்டார். கோயிலுக்கு ஓடோடி வந்தார். உடையவர் திருவடிகளிலே உவகை பொங்கத் தெண்டனிட்டார். 'நடந்தவற்றையெல்லாம் உள்ளபடி கூறி நின்றார். கேட்

உள்ளுறை பொருளாராய்ச்சி

மகாவித்வான் ஸ்ரீமத் P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்:

1. மணிவண்ணன் விசேஷார்த்தம்.

மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா
வென்றழைத்துப்
பல்லாண்டு பாடியநம் பட்டர்கோன்—
சொல்லால்
மணிவண்ண னென்றறியும் மாலிடத்தே
தோன்றும்
மணிவண்ணஞ் · சொல்லுகேன் வாய்ந்து.

மணியை வானவர்கண்ணனை என்று நம்மாழ்வாரும் *மல்லாண்டதிண்டோள், மணிவண்ணா* என்று பெரியாழ்வாரும் *மாலே மணிவண்ணா* என்று ஆண்டாளும் இங்ஙனே மற்றும் பலரும் எம்பெருமானை மணிவண்ணனாகக் கூறியுள்ளார்கள். இந்திர நீலக்கல்லின் நிறம் போன்றழகிய நிறமுடையன் என்று ஒரு பொருள். [மணி—ரத்னம்.] ரத்தினத்தின் தன்மை போன்ற தன்மையுடையவன் என்பது மற்றொரு பொருள். ரத்தினத்திற்கும் எம்பெருமானுக்கும் ஒப்புமை பலபடிகளாலே சொல்லத் தகுதியுண்டு. எங்ஙனேயென்னில் ;—

1. ரத்னமானது தன்னைப் பெற்றவர்களையும் பெற விருப்பமுடையாரையும் இரவும் பகலும் கண்ணுறங்க வொட்டாது. ரத்னமென்பது மிகச் சீரிய பொருளாதலால் அதனை ஆர்ஜிக்க வேண்டிய காலத்தில் அதுவே சிந்தையாகக் கண்ணுறங்காமையும், ஆர்ஜித்த பின் அதனைக் காப்பதற்காகக் கண்ணுறங்காமையும், உலகில் பிரஸித்தம். எம்பெருமான்திறத்திலு மிதுகாணலாம். எம்பெருமானைப் பெற நினைக்கும் முமுக்ஷுக்கள் *கண்ணாரக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கு முண்டோ கண்கள் துஞ்சுதலே* என்று நம்மாழ்வாரருளிச் செய்தபடியே கண்ணுறங்கார்கள். அப்பெருமானைப்பெற்ற முக்தர்களும் நித்யர்களும் —ஸதா பச்யந்தி ஸூரய: * என்ற சுருதியின் படியும் *உறகலுறகலுறகல் ஒண்சுடராழியே சங்கே * என்கிற பெரியாழ்வார் திருமொழியின் படியும் இமையாத கண்ணினராய்க் கண்துஞ்சாமே காப்பிடுவர்கள்.

டார் உடையவர். அவர் திருக்கண்கள் விரிந்தகன்றன. கண்கூரை அகன்றன. அவர் உள்ளம் அகன்றது. முடியாத ஐயத்துக்கு விடை கிட்டியது மாறன் பாவின் அடியொன்றின் ஒற்றைச்சீரிலே, "அடியேனுள்ளான்" "அடியயேனுள்ளான்" என்று பன்முறை உச்சரித்து உவந்தார் உடையவர். பின் ஆழ்வானை நோக்கி 'ஆழ்வான்! ஆழ்வார் பாசுரத்தை உரக்க நிறுத்தி ஸேவியும்'' என்றார் ஆழ்வானும்.

"அடியேன் உள்ளான் உடல் உள்ளான்
அண்டத்தகத்தான் புறத்துள்ளான்

படியே இது என்று உரைக்கலாம்
படியன் அல்லன் பரம் பரன்!

கடிசேர் நாற்றத்துள் ஆலை
இன்பத் துன்பக் கழிநேர்மை

ஒடியா இன்பப் பெருமையோன்
உணர்வில் உம்பர் ஒருவனே!"

என்று ஆர அமர ஸேவித்து நின்றார். கோஷ்டியிலுள்ளார்க்கு முற்றும் விளங்கவில்லை. உடையவர் 'ஆழ்வான்! ஆஹா 'அடியேனுள்ளான்' 'அடியேனுள்ளான்'. ஆழ்வார் எப்படிக்கண் திறந்து விடுகிறார், பார்த்தீரா! சரி போய்க் கொஞ்சம் ஓய்வெடுத்து வாரும். நம் பாஷ்யத்தைத் தொடர்வோம்' என்று எழுந்தார்.

—(தொடரும்)

2. ரத்னமானது எவ்வளவு விலையுயர்ந்ததாயினும் தலைப்பில் முடிந்து ஆளலாம்படி அடங்கியிருக்கும். எம்பெருமானும் எவ்வளவோ பரத்வம்பொலிய நிற்பவனாயினும் *பத்துடையடியவர்க்கு எளியவன்* என்கிற நம்மாழ்வார் திருவாக்கின்படியே ஆச்ரிதர்களுக்கு எளியனாய்ப் பரம விதேயனாயிருப்பன். *ஆயர்புத்திரனல்லன் அருந்தெய்வம் பாயசிருடைப் பண்புடைப்பாலகன் மாயனென்று மகிழ்ந்தனர் * (பெரியாழ்வார் திருமொழி) என்னும்படியான பரத்வம் விளங்காநிற்கச் செய்தேயும் உரலிலே கட்டியடிக்கலாம்படி அடங்கியிருந்தமை முதலான ஸௌலப்ய காரியங்கள் பலவும் நினைக்கத்தக்கன.

3. ரத்னமானது கடல் மலை முதலிய இடங்களில் உள்ளது. கடல் ரத்நாகரமென்றே பெயர் பெற்றதாதலால் கடலில் ரத்னமிருப்பது ஸித்தம். *ஊரும்வரியரவமொண் குறவர்மால்யானை பேரவெறிந்த பெருமணியை* (முதல் திருவந்தாதி) என்பது முதலான பாசுரங்களினால் மலையில் ரத்னமிருப்பதும் ஸித்தம், எம்பெருமானும் திருப்பாற்கடலிலும் திருவேங்கடம் திருமாலிருஞ்சோலை முதலான மலைகளிலும் விளங்குவன். *மலைமேல்நிற்பாய் கடல் சேர்ப்பாய்* என்ற திருவாய்மொழியும் இங்கே நினைக்கத்தக்கது.

4. ரத்னமானது தன்னையுடையவனை மார்பு நெறிக்கப் பண்ணும். ரத்னமுடையவர்கள் மஹா தனிகர்களாதலால் செருக்குற்றிருப் பர்களன்றோ. எம்பெருமானும் தன்னையுடையவர்களை *எனக்காரும் நிகரில்லையே * மாறுளதோ விம்மண்ணின் மிசையே* எனக்கென்னினி வேண்டுவதே* *இனி யாவர்நிகரகல் வானத்தே* என்று மார்பு நெறித்துப் பேசப்பண்ணுவன். நாலுநாளில் அழிந்து போகக்கூடிய ரத்னத்தைப் பெற்றவர்கள் மார்பு நெறிக்கக் கண்டால் என்றும் அழியாத சாச்வத ரத்னத்தைப் பெற்றவர்கள் மார்பு நெறிக்கச் சொல்லவேணுமோ!

5. ரத்னமானது தன்னைக் கைக்கொண்டவனைப் பலரும் அநுவர்த்திக்கும்படி பண்ணும். மஹா தனிகர்களைப் பலரும் அநுவர்த்தித்துக் கிடப்பர்களன்றோ. எம்பெருமானும் தன்னையுடையவர்களை உலகமெல்லாம் அநுவர்த்திக்கும்படி பண்ணுவன். *மைத்ரேய பரிபப்ரச்ச ப்ரணிபத்யாபிவாத்யச "தத்வித்திப்ரணிபாதேந பரி ப்ரச்நேந ஸேவயா, உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம்ஜ் ஞாநிநஸ் தத்வதர்சிந: *இத்யாதிகள் காண்க. பகவானைக் கைக்கொண்ட மஹான்களை உலகமெல்லாம் அநுவர்த்திக்கக் காணநின்றோமே.

6. ரத்னமானது இடையில் ஒரு புருஷனைக்கொண்டே வாங்கப்படும். ['தரகர்கள் என்று சிலருண்டே; அவர்கள் மூலமாகவே பெரும்பாலும் ரத்ன வியாபாரம் நடைபெறும்.] எம்பெருமானும் புருஷகார முகமாகவே பெறப்படுவன். *வேதம்வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து* என்றார் நம்மாழ்வார். ஸ்ரீராம ரத்னத்தைப் பெறவந்த விபீஷணாழ்வான் *நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணமுபஸ்திதம்* என்று புருஷகாரபுரஸ்காரங்கொண்டமை அறியத்தக்கது.

7. ரத்னமானது சிலசில ஆச்ரயங்களில் அதிகமான மதிப்புப்பெறும். எம்பெருமானும் ஆழ்வார்களின் திருவாக்கில் புகுந்து புறப்பட்ட திருப்பதிகளிலே அதிகமான மதிப்புப்பெறுவன். *வேடார் திருவேங்கடம் மேய விளக்கே.*

8. ரத்னமானது ஒளியைவிட்டிராது; எப்போதும் ஒளியோடுகூடியே யிருக்கும், எம்பெருமானும் பிராட்டியைவிட்டு இரான். "தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வேச மாநுஷீ *அநுஜநுரநுருபருப சேஷ்டா.. இந்திரா *இத்யாதி ப்ரமாணங்களின் படியே பிராட்டியோடு கூடியேயிருப்பனெம்பெருமான். *அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா *என்கிற ஸீதாபிராட்டியின் வசனத்தாலும் *அநந்யா ஹி மயாஸீதா

பாஸ்கரேண ப்ரபா யதா* என்கிற ஸ்ரீ ராகவன் வசனத்தாலும் பிராட்டியை ஒளியின் ஸ்தானத்திலே உணரலாம். ரத்னத்திலே ஒளியானது சிலஸமயங்களிலே உத்பூதமாயிருக்கும், சில ஸமயங்களிலே அநுத்பூதமாயிருக்கும். அப்படியே பிராட்டி எம்பெருமானிடத்திலே சிலஸமயங்களில் ஸ்பஷ்டமாய்த் தோன்றியிருப்பள்; வாமநாவதாராதி ஸமய விசேஷங்களில் மறைந்திருப்பள். கிருஷ்ணஜிநேந ஸம்வ்ருண்வந் வாமநோ வக்ஷஸி ச்ரியம்* என்கிறார்கள் மஹர்ஷிகள். வேதாந்ததேசிகன் தேஹளீசஸ்துதியில் "பிக்ஷாசிதம் ப்ரகடயந் ப்ரதமாச்ரமத்வம் க்ருஷ்ணஜிநம் யவநிகாம் க்ருதவாந் ப்ரியாயா:, வயக்தாக்ருதேஸ்தவ ஸமீக்ஷ்ய புஜாந்தரே தாம் த்வாமேவ கோபநகரீச! ஜநாவிதுஸ் த்வாம்* என்றருளிச் செய்த ச்லோகரத்நமும் இங்கே அநுஸந்தேயம்.

9. ரத்னமானது ஒளியால் மேன்மை பெறும், ஒளிமிக்க ரத்தினத்திற்கேயன்றோ மதிப்பு அதிகம். எம்பெருமானும் பிராட்டியினாலேயே பெருமேன்மை பெறுகின்றான். *திருவில்லாத்தேவரைத் தேறேல்மின் தேவு* என்கிறார் திருமழிசைப்பிரான். *வேதாந்தாஸ் தத்வ சிந்தாம் முரபிதுரஸி யத்பாதசிஹ்நைஸ் தரந்தி* என்றும் அபாங்கா பூயாம்ஸோ யதுபரி பரம் ப்ரஹ்ம ததபூத்* என்றும் அருளிச்செய்கிறார் பட்டர் ஸ்ரீகுணரத்நகோசத்திலே. ***சரத்தயா அதேவ: தேவத்வம் அச்நுதே*** என்கிறான் வேதபுருஷன், இந்த வேதவாக்கியத்தில் **ச்ரத்தா** என்பது பிராட்டியின் திருநாமங்களில் ஒன்று, எம்பெருமான் பிராட்டியின் ஸம்பந்தம் பெறுவதற்கு முன்பு தேவத்வமில்லாதவனாயிருந்து பிராட்டியின் சேர்க்கையினாலேயே தேவத்வம் பெறுகிறானென்கிறது இந்த ச்ருதி. *அப்ரமேயம் ஹி தத் தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா* என்கிற மாரீச வசனமும் ஸ்ரீராமபிரானுக்குப் பிராட்டியினாலேயே பெருமேன்மை யென்று நன்கு விளக்குகின்றது. இராவணன் மாரீசனிடம் வந்து 'இராமனை அடர்க்க நீ துணைநிற்கவேணும்' என்று வேண்ட, அப்போது மாரீசன் சொன்ன அற்புதமானமொழி இது. இராமன் ஸீதாபிராட்டியைக் கைப்பிடிப்பதற்கு முன்னம் விச்வாமித்திரனது வேள்வியிலே என்னால் காணப்பட்டான்; அப்போதே அவனை அநபிபவநீயனாயிருந்தான்; பின்னை அவன் ஸீதாபிராட்டியைக் கைப்பிடித்தவனுமாயினன்; அதனால் அப்பெருமானுக்கு விளைந்த புகர் பேசத்தரமோ? என்றான். *ஸ்வயா தீப்த்யா ரத்நம் பவதபி மஹார்க்கம்* என்கிற ஸ்ரீகுணரத்ந கோச ஸ்ரீஸூக்தியும் இங்கே சேர்த்து அநுஸந்தேயம்.

10 ரத்னமானது தன்னையிழந்தவனைக் கதறிக்கதறி அழப்பண்ணும்; உயர்ந்த ரத்னத்தை இழந்தவன் கதறிக்கதறியழுவது தவிர வேறென்ன தான் செய்யமுடியும்? எம்பெருமான் படியுமப்படியே. ஸ்ரீராமரத்நத்தை யிழந்த பரதாழ்வான் ஸபையிற் புரண்டு கதறியழுதமை ***வில்லாப ஸபா மத்தியே*** இத்யாதிகளில் ப்ரஸித்தம். *ஏரார்ந்தகருநெடுமால் இராமனாய் வனம்புக்கவதனுக்காற்றாத் தாரார்ந்த தடவரைத்தோள் தயரதன்தான் புலம்பிய வப்புலம்பலும் ஸ்ரீராமாயணாதி ப்ரஸித்தம். *பழுதே பலபகலும் போயினவென்று அஞ்சியழுதே னென்கிறார்கள் அறிவிற்சிறந்தவர்கள் *எழில்கொள் நின் திருக்கண்ணிணை நோக்கந் தன்னையுமிழந்தேனிழந்தேனே* இன்பத்தையிழந்த பாவியேனெனதாவி நில்லாதே* என்று தெய்வத் தேவகி புலம்பிய புலம்பல் ப்ரஸித்தம். *உன்னைக் காண்பான் நானலப்பாய் ஆகாயத்தை நோக்கியழுவன்* என்று கதறுகிறார் நம்மாழ்வார். *ஏகஸ்மிந்நப்யதிக்ராந்தே முஹூர்த்தே த்யாநவர்ஜிதே, தஸ்யுபிர் முஷிதேநேவ யுக்தம் ஆக்ரந்திதும் ந்ருணாம்* என்று எம்பெருமானுடைய சிந்தனையை ஒரு நொடிப்பொழுது இழந்தாலும் கதறிக்கதறி யழவேணுமென்கிறார்கள் மஹர்ஷிகள். ஆகவே இழவில் கதறியழப்பண்ணுந் தன்மை ஒக்கும்.

11. ரத்னமானது அதமன் கையிலே கிடைத்தவளவில் அற்ப விலைக்கு மாறும்

மத்யமன் கையில் கிடைத்தவளவில் உள்ளபடியான விலைக்கு மாறும்; உத்தமன் கையில் கிடைத்தவளவில் விலைக்கு ஆட்படாமல் ஸ்வயம்போக்யமாகும். (இதன் விவரணம்;) மீன் பிடிக்கிற செம்படவன் கையிலும் விலையுயர்ந்த ரத்னம் கிடைப்பதுண்டு; அவன் அதன் மதிப்பையறியாதவனுகையாலே அற்ப விலைக்கு அதை விற்றுவிடுவான். *"மாமதியம் தினைக்குங் கொடி மாளிகைசூழ்தெருவில் செழுமுத்து வெண்ணெற்கெனச்சென்று முன்றில் வளைக்கை நுளைப்பாவையர்மாறு நாங்கூர்" என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தாலும் இது அறிய வெளிது. அதே ரத்னம் ஒரு வியாபாரியின் கையில் கிடைத்தால் அவன் அதன் மதிப்பையறிந்தவனுகையாலே உள்ளபடியான விலைக்கே விற்பன். அதே ரத்னம் ஒரு மஹாராஜன் கையில் கிடைத்தால் அவனுக்கு அதை விற்று ஆகவேண்டிய தொன்றுமில்லாமையாலே விலைகோராமல் அதை ஹாரத்திலேயழுத்தி ஸ்வயம் போக்யமாக அணிந்து கொள்ளுவன்.

எம்பெருமான்படியுமிப்படியே க்ஷுத்ரர்கள் எம்பெருமான் பக்கலிலே ஐச்வரியம் ஸந்தானம் என்றிங்ஙனே அற்ப பலன்களைப் பெற்றுப்போவார்கள். சிலர் மோக்ஷத்தை வேண்டிப் பெற்றுப் போவார்கள். அவன் பக்கலில் நாம் வேண்டுவதொன்றுண்டோவென்று அற்ப பலன்களையும் விரும்பாமல் உயர்ந்த பலனான மோக்ஷத்தையும் விரும்பாமல் *இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகமாளுமச்சுவை பெறினும் வேண்டேன்* என்றும் *எம்மாவீட்டுத் திறமும் செப்பம்* என்றும் *வைகுண்ட வாஸேபி ந மேபிலாஷ;* என்றும் பரம பதத்தையும் வெறுத்துத்தள்ளி *எனக்குத் தேனேபாலே கன்னலேயமுதே* என்று ஸ்வயம் போக்யமாக அநுபவித்து அத்தலைக்கு மங்களாசாஸனம் செய்வது தவிர வேறொரு பேறில்லை யென்று அதுவே போதுபோக்கா யிருப்பர்கள் உத்தமாதிகாரிகள். *"த்வய்யேகஸ்மிந் நபி விஜஹுதோ முக்தவத் ஸாதநத்வம்* என்று தேசிகன் பணித்த கணக்கிலே எம்பெருமானிடத்திலுங்கூட உபாயத்வ புத்தியைப் பண்ணுதே உபேயத்வ புத்தியையே பண்ணியருக்கும் ஸத்ஸம்ப்ரதாய ரஸிகர்கள் மஹா ராஜஸ்தாநே மதிக்கப்படுவர்கள். அநுபாயங்களானவற்றிலும்கூட உபாயத்வபுத்தியைப் பண்ணி நிற்குமவர்கள் வ்யாபாரிகளின் ஸ்தானத்திலே எண்ணப்படுவர்கள். க்ஷுத்ர பலார்த்திகள் செம்படவர் போல்வாரான நீசர்களின் ஸ்தானத்திலே நினைக்கப்படுவார்கள். மேலே விவரித்த மூன்று படிகளுக்கும் ரத்னம் இணங்கி யிருப்பது போல எம்பெருமானும் இணங்கி யிருத்தல் நன்கு உணரத்தக்கது.

12. ரத்னமானது சேற்றிலே கிடந்தால் மதிப்பறியாதவர்களாலே நிஹீநமாகக் கருதப்பட்டு, மதிப்பறியுமவர்களாலே உள்ளடியே கருதப்படும் எம்பெருமான் படியுமிப்படியே. *மாயவன்சேற்றள்ளல் பொய்ந்நிலத்தே* என்று நம்மாழ்வாரருளிச் செய்தபடியே சேற்றுநிலமாகிய இவ்விருள் தருமாஞாலத்திலே எம்பெருமான் வந்து சேர்ந்தால் மதிப்பறியாத பாவிகள் அவஜாநந்தி மாம் மூடா: மாநுஷீம் தநுமாச்ரிதம் என்று கீதையில் அவன்தானே அருளிச் செய்தபடியே குறைய நினைப்பார்கள். அந்த கீதையிலேயே தத்வதர்சிந: என்று போற்றப்பட்ட மாஞானிகள் எத்திறமுரலினொடு இணைந்திருந்தேங்கிய வெளிவே! என்றும் பிறந்தவாறும் வளர்ந்தவாறும்! என்றும் மோகித்துக் கிடந்து அசி மதிப்பறிவில் குறையாதேயிருப்பார்கள்.

13. க்ருத்ரிமமான கல்லும் ரத்னமென்று பேர்சுமந்து போலியாக நின்றாலும் வாசியறிய மாட்டாதவர்களே பிரமிக்கும்படியாய் விலக்ஷணர்கள் அதில் கால் தாழாதே யிருப்பார்கள். அது போலவே தேவதாந்தரங்களும் பகவானென்று பேர்சுமந்து போலியாக நின்றாலும் ராஜஸ தாமஸர்கள் அவற்றிலே பிரமித்திருப்பர்களே யன்றி சுத்த ஸாத்விகர்களான விலக்ஷணர்கள் அவற்றை அடுப்பிடுகல்லோ பாதியாக நினைத்துக் கண்ணெடுத்தும் பாரார்கள்.

இங்ஙனமே மற்றும் பலபல உவமைப் பொருத்தங்கள் கண்டுகொள்க. *

திருப்பாதிரிப் புலியூர்க் கல்வெட்டுக்கள்*

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனுர், M.A.M.O.L.Ph.D.

முன்னுரை

திருப்பாதிரிப்புலியூர் தென்னுர்க்காடு மாவட்டத்தில் உள்ள சிவத்தலங்களில் ஒன்று. பெரிய புராணத்தில் கூறப்பெற்றுள்ள பல்லவமன்னன் கட்டளைப்படி கல்லொடு பிணைத்துக் கடலில் எறியப்பட்ட திருநாவுக்கரசர் உயிர்பிழைத்துக் கரையேறி வந்து பதிகம் பாடிய முதல் இடம் இதுவேயாகும். நகரத்தார் திருப்பணியால் இங்குள்ள கோவில் முற்றும் புதுமையடைந்துள்ளது. திருநாவுக்கரசர் இக்கோவிலைப் பாடினுர் என்பதைக் கொண்டு, இக்கோவிலின் பழமை கி. பி. ஏழாம் நூற்ருண்டின் தொடக்கத்திற்குச் செல்லுகிறது என்பது அறியப்பெறும். இவ்வூரில் பெரிய சமணமடம் ஒன்று இருந்தது. அதனில் கி. பி. 5, 6ஆம் நூற்ருண்டுகளில் புகழ்பெற்ற சமணமுனிவர்கள் இருந்து பல நூல்களை வடமொழியில் எழுதி உள்ளனர். சமணர் செல்வாக்கால் இவ்வூர் பாடலிபுத்திரம் என்று பெயர் பெற்றது. திருநாவுக்கரசர் தம் இளமைப் பருவத்தில் சமணத்தைச் சார்ந்து அம்மடத்தில் பல ஆண்டுகள் தங்கியிருந்தார்; 'தருமசேனர்' என்ற பட்டத்தைப் பெற்ருர். அவர் சைவராக மாறின பின்பு நாடாண்ட பல்லவன் சைவத்தைத் தழுவினுன். அவனுல் அம்மடம் அழிக்கப்பட்டது. இது பெரிய புராணம் கூறும் செய்தியாகும்.

திருப்பாதிரிப்புலியூரில் உள்ள சிவன்கோவில் பாடலீசுவரர் கோவில் என்று கூறப்படுகிறது. அக்கோவிற் சுவர்களில் இருபத்தொரு கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் சில முற்றிலும் சிதைந்துவிட்டன. அக்கோவிலில் உள்ள மரம் பாதிரி. பாதிரி என்பது பொன்னிறமுள்ள பூவைக் கொண்ட மரவகை யாகும்.

கல்வெட்டுக்களின் தோற்றம்

அரசர்கள், அரசியல் அலுவலர், வணிகர், கோவில் பணி மக்கள், பொதுமக்கள் முதலியோர் கோவிலில் பலவகை விளக்குகள் எரிப்பதற்கு ஆடுகள், பசுக்கள், நிலங்கள், காசுகள் முதலியவற்றை ஊரவையாரிடம் அல்லது ஆட்சியாளரிடம் அல்லது கோவில் குருக்களான சிவப்பிராமணரிடம் ஒப்பிவித்தல் வழக்கம்; இவ்வாறே கோவில் வழிபாட்டிற்கும் விழாக்கள் முதலியவற்றிற்கும் நிலத்தையும் பணத்தையும் கொடுப்பது வழக்கம்; கடவுளர் திருவுருவங்களை எழுந்தருளச் செய்து அவற்றின் பூசை விழாக்களுக்காக நிலத்தையோ காசையோ கொடுப்பதும் உண்டு. இத்தகைய அறங்கள் என்றும் நடைபெறுவதற்காகவே கோவில் சுவர்களில் அவை பற்றிய விவரங்கள் வெட்டப்பட்டுள்ளன. அக்கல்வெட்டுக்களில் அவை வெட்டப்பட்ட காலத்தில் ஆட்சிபுரிந்த அரசர் பெயர்களும் அவர்தம் வீரச்செயல்களும் அக்கல்வெட்டுக்கள் எழக் காரணமான அறங்கள் பற்றிய விவரங்களும் பொறிக்கப்படுதல் அக்கால வழக்கம். இனிக் கல்வெட்டுக்களில் காணப்பெறும் விவரங்களை இங்குக் காண்போம்.

அரசர்

1.	பராந்தகன் I	கி. பி. 907— 955
2.	இராசராசன் I	கி. பி. 985—1014
3.	இராசேந்திரன் I	கி. பி. 1012—1044
4.	இராசேந்திரன் II	கி. பி. 1052—1064
5.	வீரராசேந்திரன்	கி. பி. 1063—1069
6.	குலோத்துங்கன் I	கி. பி. 1070—1120
7.	விக்கிரமசோழன்	கி. பி. 1118—1135
8.	மாறவர்மன் விக்கிரம பாண்டியன்	கி. பி. 1268—1281
9.	வீரவிருபண்ணவுடையார்	கி. பி. 1465—1485

---

*இக்கட்டுரை, கல்வெட்டு ஆண்டு அறிக்கை A.R.E. 115—135, 1902) யையும், தென் இந்தியக் கல்வெட்டு நூலையும் (Vol. 7, 739—759) உதவியாகக் கொண்டு எழுதப்பெற்றது.

விளக்கு அறம்

அக்காலத்தில் கோவில்களில் எரிக்கப்பட்ட விளக்குகள் பலவகைப்பட்டன; காலை மாலைச் சந்தி நேரங்களில் எரிக்கப்பட்ட விளக்குச் சந்தி விளக்கு எனப்பட்டது; எப்பொழுதுமே அணையாமல் எரிக்கப்பட்ட விளக்கு நந்தா விளக்கு எனப்பட்டது; இரவு நேரங்களில் குறிப்பிட்ட கால அளவில் எரிக்கப்பட்ட விளக்குகளும் வழக்கில் இருந்தன.

ஒரு விளக்கு, அரை விளக்கு, கால் விளக்கு, அரைக்கால் விளக்கு என்று பலவகை அளவுகளைக் கொண்டு விளக்குகள் பெயர்பெற்றன. கோவிலுக்குச் செய்யும் அறங்களுள் விளக்கெரிக்கும் அறமே மிகச்சிறந்தது என்பது நம்முன்னோர் கருத்து. தம் நலனுக்காகவும், தம் வீட்டவர் நலனுக்காகவும், அரசன் நலனுக்காகவும் செய்த குற்றத்திற்குத் தண்டனையாகவும் மக்கள் கோவில்களில் விளக்கெரித்துவந்தனர். இங்ஙனம் விளக்கறம் செய்பவர் ஆடுகள், பசுக்கள், எருமைகள், பணம் இவற்றுள் ஒன்றைக் கோவிலாரிடம் ஒப்புவித்தல் வழக்கம். அவர்கள் அவ்வறத்தைத் தொடர்ந்து செய்துவருதல் மரபு. உள்ளூராரும் வெளியூராரும் இத்தகைய அறங்களைச் செய்தனர்.

(1) முதலாம் இராசராசன் காலத்தில் வேசாலிப்பாடித் தென்கரைச் சிறு பாலையூரைச் சேர்ந்த மாறுபரணன் அரை நந்தா விளக்கு எரிக்க 48 ஆடுகளை வழங்கினான்.

(2) விக்கிரமசோழன் ஆட்சியில் உலகளந்த சோழ மூவேந்த வேளான் என்பவன் ஒரு நந்தா விளக்கு எரிக்க அன்றாடு நற்காசு 15 வழங்கினான்.

(3) இரண்டாம் இராசேந்திரன் ஆட்சியில் வாகூர் நாட்டுக் கூனையூர் நாகமாணிக்க இளவரையன் நந்தா விளக்கு இரண்டு எரிக்கப் பணம் உதவினான்.

(4) விக்கிரமசோழன் ஆட்சியில் இருந்த உள்ளூர் வெள்ளாளன் வேசாலிப்பாடி மூவேந்த வேளான் என்பவன் கோவில் சிவப்பிராமணரிடம் ஒரு நந்தா விளக்கு எரிக்க 18 காசுகள் வழங்கினான்.

(5) முதற் குலோத்துங்கன் ஆட்சியாண்டில் கிளிநல்லூர்க் கிழவன் ஒரு நந்தா விளக்கு எரிக்க அன்றாடு நற்காசு 20 வழங்கினான்.

(6) செற்குப்பை உடையான் புத்தன்கேசன் என்பவன் ஒரு சந்தி விளக்கு எரிக்கப் பொருளுதவினான்.

(7) சோழநாட்டுத் திருவீதிமங்கலத்துப் பஞ்சவன் பிரம்மாதிராசன் என்பவன் ஒரு நந்தா விளக்கு எரிக்க 96 ஆடுகளை வழங்கினான்.

(8) வீரராசேந்திரன் ஆட்சியில் மும்முடிச் சோழப் பெரியவன் ஒரு நந்தா விளக்கு எரிக்கப் பொருள் வழங்கினான்.

நில அறம்

(1) முதற்பராந்தகன் ஆட்சியில் பாதிரிப்புலியூர் தாமோதரன் ஒற்றியூரன் என்பவன் கோவிலுக்கு ஒரு தோட்டம் வழங்கினான்.

(2) பராந்தகன் ஆட்சியில் பாரகாயன் நீலன் குமரன் சோமாசியார் என்பவர் 700 கமுகும் தெங்குஞ்சேரி முந்நூறும் கொண்ட நிலத்தை ஐவர் பிராமணர்க்கு வழங்கினர்.

(3) வீர விருப்பண்ணவுடையார் ஆட்சியில் வழுதலம்பட்டுச்சாவடி என்னும் ஊரில் மடப்புறமாக நிலம் விடப்பட்டது.

பிற அறங்கள்

(1) முதற் பராந்தகன் ஆட்சியில் பெருமாக்களூர் நாராயணன் சேந்தன் என்பவன் ஒரு படையலுக்கு வேண்டும் முதலைத் திருவுண்ணாழிகைக் கணப் பெருமக்களிடம் வழங்கினான்.

(2) இரண்டாம் இராசேந்திரன் ஆட்சியில் உள்ளூர்ச் சபையினர் சேனாபதி இராசேந்திர சோழ வேசாலிப் பேரரையன் என்பவனுக்கு நிலத்தை விற்றனர்.

(3) முதற் குலோத்துங்கன் ஆட்சியில் பரசமய கோளரிமாமுனி என்பவருக்குக் கன்னிவன புராணம் செய்தமைக்கு இரண்டு மாநிலம் இறையிலியாகத் தரப்பட்டது.

(4) அதே அரசன் ஆட்சியில் கன்னிவன புராணம், பூம்புலியூர் நாடகம் ஆகியவற்றைச் செய்த புலவருக்குப் பாலையூரினில் நிலம் வழங்கப்பட்டது.

(5) வீர ராசேந்திரன் ஆட்சியில் இராசேந்திர சோழ வளநாட்டுக் கூடமங்கலத்துப் பட்டினவன் என்பவன் நாளும் இருநாழி அரிசி கொண்டு படையல் செய்ய 80 கலம் நெல் முதலாக வழங்கினன்.

(6) விக்கிரமபாண்டியன் ஆட்சியில் காளிங்க ராயர் என்பவன் இக்கோவிலில் சுப்பிரமணியப் பிள்ளையாரை எழுந்தருளுவித்து அவர் பூசைக்காக இரண்டு மாநிலம் வாங்கிக் கோவிலுக்கு விட்டான்.

பொதுச் செய்திகள்

1. திருப்பாதிரிப் புலியூர்ச் சிவன் கோவிலில் உள்ள இறைவர் பெயர் திருக்கடை ஞாழல் ஆழ்வார், திருக்கடை ஞாழல் பெருமான் அடிகள், திருக்கடை ஞாழலுடைய மகாதேவர், தோன்றுத் துணை ஆளுடையார், தோன்றுத்துணை ஆண்டார், திருப்பாதிரிப் புலியூர் ஆண்டார் என்று பலவகையாக அமைந்துள்ளது. ஞாழல் என்பது புலிநகக் கொன்றை மரம். சிவலிங்கம் முதலில் ஞாழல் மரத்தடியில் இருந்தமையால் ஞாழல் பெருமான், ஞாழல் ஆழ்வார் எனப் பெயர் பெற்றிருக்கலாம். கி. பி. ஏழாம் நூற்றுண்டினரான திருநாவுக்கரசர் இக்கோவிற் கடவுளைப் பாடுகையில்,

"தோன்றுத் துணையாய் இருந்தான் தன்னடியோங்களுக்கே" என்று பாடினர். அதனால் அப்பெருமான் "தோன்றுத்துணை ஆளுடையார்', என்றும் "தோன்றுத்துணை ஆண்டார்" என்றும் பெயர் பெற்றார்.

2. (1) திருப்பாதிரிப்புலியூர்ச் சிவன் கோவிலில் பொதுக் கோவில் ஆட்சியைத் திருநட்டக் கணப் பெருமக்கள் என்ற குழுவினர் கவனித்து வந்தனர்.

(2) கருவறைத் தொடர்பான செயல்களைக் கவனித்தவர் திருவுண்ணாழிகைக் கணப் பெருமக்கள் எனப்பட்டனர்.

(3) திருப்பாதிரிப் புலியூர் முதற் பராந்தகன் காலத்தில் கோவிலுக்கு விடப்பட்ட தேவதான ஊராக இருந்தது; பின்பு இரண்டாம் இராசேந்திரன் காலத்தில் பரகேசரிச் சதுர்வேதிமங்கலம் என்னும் பெயர் கொண்ட பிரமதேய ஊராக மாற்றப்பட்டது. அதனால் அச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் ஊராட்சியையும் கோவிலாட்சியையும் கவனித்தனர்.

3. தனிப்பட்டவர் விளக்கெரிக்கக் கொடுத்த பணத்தை அல்லது ஆடுகளை மேலே கூறப்பெற்ற கணப் பெருமக்கள் ஏற்றுக்கொண்டனர். சில அறங்களைச் செய்வதாகக் கோவில் குருக்களும் ஏற்றுக்கொண்டனர். இச்சிவன் கோவில் குருக்களுட் பெரும்பாலோர் பாரத்துவாச கோத்திரத்தினர்.

4. திருப்பாதிரிப்புலியூர் முதலில் இராசேந்திர சோழவள நாட்டுப் பவித்திர மாணிக்க வளநாட்டைச் சேர்ந்திருந்தது. பின்னர் வளநாட்டுப் பெயரும் நாட்டுப் பெயரும் மாற்றப்பட்டன. அதனால், இராசராச வளநாட்டுப் பட்டான் பாக்கை நாட்டுத் திருப்பாதிரிப் புலியூர் எனப் பெயர் பெற்றது. (பட்டான் பாக்கை - இன்றுள்ள பட்டாம்பாக்கம்).

5. (1) சடங்கவி—வேதத்தின் ஆறு அங்கங்களைக் கற்ற மறையவன் 'சடங்கவித்' எனப்பட்டான்.

(2) சோமாசி—இது சோமயாஜி என்பதன் மரூஉ. தேவர் பொருட்டுச் சோமரசம் அளிக்கும் வேள்வி வகை 'சோமயாகம்' எனப்பட்டது. அதனைச் செய்தவன் 'சோமயாஜி' எனப்பட்டான்.

(6) தனியூர்—பண்டைக்காலத்தில் பிடாகை, சிற்றூர், பேரூர், தனியூர் எனப் பலவாறு ஊர்கள் பெயர் பெற்றன. பிடாகை என்பது குக்கிராமம். சிற்றூர் என்பது கிராமம். அதனினும் பெரியது பேரூர். தனியூர் என்பது பெரிய நகரம். திரிபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலம் அக்காலத்தில் தனியூர் என்னும் தகுதியில் இருந்தது. இது புதுச்சேரிக்கு அண்மையில் இப்பொழுது 'திரிபுவனை' என்னும் பெயருடன் ஒரு சிற்றூராக இருக்கிறது.

7. அரையன், இளவரையன், பேரரையன் மும்முடிச் சோழன் என்பன சோழர் கால அரசாங்க அலுவலர் பெற்ற பட்டங்கள் ஆகும். மூவேந்த வேளான், பிரம்மாதிராசன் என்பன உயர் அலுவலரைக் குறிப்பன. அவற்றைப்

பெற்ற அரசாங்க அலுவலரும் கோவில் திருப் பணியில் பங்கு பெற்றனர் என்பதைக் கல் வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

(1) நாகமாணிக்க இளவரையன் இச்சிவன் கோவிலில் இரண்டு நந்தா விளக்குகளை எரித் தான். இராச சிங்கப் பேரரையன் மகன் மாணு பரணன் அரை நந்தா விளக்கு வைத்தான்.

(2) வேசாலிப்பாடி மூவேந்தவேளான் ஒரு அரசியல் உயர் அலுவலன். அவன் ஒரு நந்தா விளக்கு வைத்தான்.

(3) உலகளந்த சோழ மூவேந்தவேளான் ஒரு நந்தா விளக்கு வைத்தான். நாட்டு நிலங்களை அளந்தவன் 'உலகளந்தான்' எனப்பட்டான்.

(4) சேனுபதி இராசேந்திர சோழ வேசாலிப் பேரரையன் ஊரவையாரிடமிருந்து நிலம் வாங் கிக் கோவிலுக்கு அளித்தான்.

(5) மும்முடிச் சோழப் பெரியன் ஒரு நந்தா விளக்கு வைத்தான்.

(6) விக்கிரபாண்டிய காளிங்கராயன் ஓர் உயர் அலுவலன். அவன் இக்கோவிலில் முருகன் சிலையை எழுந்தருளச் செய்தான்.

8. தமிழகத்தில் இருந்த நெடும்பாதை 'பெரு வழி' எனப்பட்டது.

9. "எழுநூறு கமுகும் "தெங்கஞ் சேரி முந்நூறும்" என்னும் கல்வெட்டுத் தொடர் (742) பாக்கு மரங்கள் எழுநூற்றையும் தென்னை மரங்கள் முந்நூற்றையும் உணர்த்துகிறது. தென்னை மரங்கள் முந்நூறு சேர்ந்த இடம் இக் காலத்தில் தென்னந் தோட்டம் எனப்படும். பண்டைக்காலத்தில் தெங்கஞ்சேரி எனப் பட்டது. சேரி—சேர்ந்துள்ள இடம். தெங்கு—தென்னை. தெங்கு என்பதே பழைய வழக்கு. தெங்கு-காய் - தெங்காய், தேங்காய்.

10. சோழ வேந்தன் தன் ஆட்சிக்குட்பட்ட நாடு, வளநாடு, ஊர், ஆறு, ஏரி, வாய்க்கால், தெரு முதலிய அனைத்துக்கும் தங்கள் பெயர்களை யும் விருதுப்பெயர்களையும் தங்கள் குடும்ப மகளிர் பெயர்களையும் வைத்து அழைத்தனர் அந்த முறையில் ஓர் ஊர் 'சோழகுலவல்லி நல்லூர்' எனப்பட்டது. அதனில் இருந்த ஒரு தெரு முடி கொண்ட சோழப் பெருந் தெரு எனப்பட்டது. மற்றொரு தெரு திரிபுவன மாதேவிப் பெருந் தெரு எனப்பட்டது.

11. புகார், 'பூம்புகார்' எனப்பட்டது. இது காவிரிப்பூம் பட்டினத்தின் பல பெயர்களுள் ஒன்று. இதுபோலவே புலியூர் (திருப்பாதிரிப் புலியூர்) பூம்புலியூர் எனப்பட்டது. முதற் குலோத்துங்கன் ஆட்சியில் கி.பி. 12-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் திருப்பாதிரிப் புலியூர் பற்றி இரண்டு நூல்கள் எழுந்தன. அவை பூம்புலியூர் நாடகம், கன்னிவன புராணம் என்பன. இவை இன்று காணுமாறு இல்லை.

12. விக்கிரமபாண்டியன், பாண்டியப் பேர ரசின் சார்பாளனுக இருந்து நடு நாட்டை ஆண்ட பொழுது விக்கிரமபாண்டிய காலிங்கராயன் என்ற அதிகாரி கோவிலில் முருகன் சிலையை எழுந் தருளச் செய்து அதற்கு இரண்டுமா நிலத்தை ஏலத்தில் எடுத்து வழங்கினுன். ஏலம் அக்காலத் தில் 'சண்டே சுரப் பெருவிலை' எனப்பட்டது. அந்த நிலம் ஊர்ப் பிராமணர்க்கு உரியது. அதனுல் அவர்கள் எதிர்த்தனர். அந்த நிலம் யாருக்கு உரியது என்பது பற்றிச் சோழகுலவல்லி நல்லூர் அம்பலத்து, ஊர் அவையாரும் அரசாங்க உயர் அலுவலரும் கூடி ஆராய்ந்தனர் அவை யார் கேள்விகளும் அந்தணர் பதிலும் சுவை யுடையன. நிலம் தம்முடையதே என்பதற்கு அந்தணர் ஓலை காட்டினர்; கோப்பெருஞ் சிங்கர் நாளிலும் இருந்த உரிமையைக் காட்டினர்; விக்கிரம பாண்டியர் எழுதித் தந்த திருமுகத்தை யும் காட்டினர். இறுதியில் நிலம் அந்தணர்க்கே உரியது என முடிவு கூறப்பட்டது. இந்த முடிவைக் கல்லில் எழுதியவர் ஐவர். அவர்களுள் மூவர் பெயர்கள் அழிந்துபட்டன. ஏனை இருவர் பெயர்களும் திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்துச் சாத்தமங்கலத்துக் குலசேகரப் பிரம்மராயன், திட்டச்சேரி சுந்தர பாண்டிய பிரம்மராயன் என்பன.

13. இரண்டாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் சார்பாளனாகத் தென்னார்க்காடு முதலிய மாவட்டங்களை (கி. பி. 12668-1281) ஆண்டவன் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் என்பவன். அவன் ஆட்சியில் உயர் அலுவலனாய் இருந்தவனே விக்கிரம பாண்டிய காலிங்க ராயன் என்று முன்பு கூறப்பட்டவன். உயர் அலுவலர் தம் அரசனது பெயரைத் தம் பெயருடன் சேர்த்து வைத்துக்கொள்ளுதல் அக்கால மரபு. இந்த விக்கிரம பாண்டியன் பெயரால் அமைந்த ஊரே காலப் போக்கில் விக்கிரவாண்டி என மருவி வழங்கலாயிற்று என்பது இங்கு அறியத் தகும்.

14. சோழர் காலத்தில் புழக்கத்திலிருந்த காசு அன்றாடு நற்காசு எனப்பட்டது. அதற்கு முன்பு வழக்கிலிருந்த காசு பழங்காசு எனப் பட்டது.

நாட்டுப் பிரிவுகள்

1. வேசாலிப்பாடித் தென்கரை சிறு பாலையூர்.
2. வடகரைத் தேவதானம் பாதிரிப் புலியூர்.
3. இராசராச வளநாட்டுப் பட்டான்பாக்கை காட்டுத் திருப்பாதிரிப்புலியூர் ஆன பரகிருப பராக்கிரம சதுர்வேதிமங்கலம்.
4. வடகரை இராசேந்திர சோழ வளநாட்டு மேல்காருட்டுப் பிரம்மதேயத் திருப்பாதிரிப் புலியூர்.
5. இராசேந்திர சோழ வளநாட்டு மேல் காருட்டுத் தனியூர் திரிபுவன மாதேவிச் சதுர் வேதிமங்கலம்.
6. இராசேந்திர சோழ வளநாட்டுப் பவித்திர மாணிக்க வளநாட்டுத் திருப்பாதிரிப் புலியூர்.

ஊர்களும் தெருக்களும்

இக்கோவில் கல்வெட்டுக்களில் சில ஊர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. அவற்றுள் சோழ குலவல்லி நல்லூர், நெற்குப்பை, பாலையூர் என்பன குறிப்பிடத்தக்கவை. சோழ வேந்தர் ஊர்கள், ஏரிகள், ஆறுகள். தெருக்கள் முதலியவற்றிற்குத் தம் இயற் பெயர்களையும் விருதுப் பெயர்களையும் இடுவது வழக்கம் என்பது பல கல்வெட்டுக்களால் தெரிகிறது. சோழகுலவல்லி நல்லூர் என்பது சோழ அரச மாதேவியின் தொடர்புடைமையைக் காண்க. அவ்வூரில் இருந்த தெருக்களுள் முடி கொண்ட சோழன் பெருந்தெரு, திரிபுவன மாதேவிப் பெருந்தெரு என்பன இருந்தனவென்று கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

மக்கள் பெயர்கள்

இக்கோவில் கல்வெட்டுக்கள் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு முதல் 15-ஆம் நூற்றாண்டு முடிய —அறுநூறு ஆண்டுகள் கால எல்லையில் வெளியிடப் பட்டவையாகும். அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் பெயர்கள் சில இக்கோவில் கல்வெட்டுக்களில் இடம் பெற்றுள்ளன. அவற்றைக் கீழே காண்க.

(1) **சிவமறையோர் பெயர்கள்:** திருவகத்திக் காலகாலன், சங்கரன் திருக்காளத்தி உடையான், ஆனந்தன் பள்ளி கொண்டான், திருக்கடைஞாழல் தட்சிணாமூர்த்தி, கயிலூர் நாரணர்க்கடியான். யக்ஞபட்டன், சிங்கன் சீராளபட்டன், எழுநூற்றுவன் காலகாலபட்டன், சீராளன் காமக்கோன்பட்டன், சடங்கவி குமாரபட்டன், நாராயணன், சேந்தன், மாதேவன் நம்பிரான், நம்பி, சேந்தன் நாராயணன், சேந்தன் மாறன், பொன்னாழி தத்தபட்டன்: கிருஷ்ணன் மா அரி கேசன், நாராயணன், அனந்த நாராயணன், காலகாலன் ஆளும்பிரான், காலகாலன் உமாசகிதன், காலகாலன் காக்குநாயகன், திருச் சிற்றம் பலமுடையான், திருக்கடை ஞாழலுடையான்.

(2) பிறர் பெயர்கள்: இராச சிங்கன், மாணபரணன், நாகமாணிக்கம், நாராயணன் சேந்தன். ஆமூர் உடையான், கயிலூர்ச் சோறுடையான், சாத்தன் பிரத்தாலி, அம்மையப்பன் திருவிராமேசுவர முடையான், புத்தன் கேசன், அறப்பெருஞ் செல்வி, பாரதாயன் நக்கன், பெரியன், குடிப் பள்ளிப் பெருமான், காலிங்கராயன்.

தேசப் பாதுகாப்புப் பணியின் பொருட்டுத் தமிழகக் கோயில்கள் வாங்கியுதவிய தங்கப் பத்திரங்களின் விவரம்.

1.	ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாத சுவாமி கோயில்	7,010 கிராம்
2.	பெரியபாளையம் பவானியம்மன் கோயில்	5,383 ,,
3.	திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில்	4,983 ,,
4.	திருமயிலை கபாலீசுவரர் கோயில்	3,178 ,,
5.	சென்னை பைராகிமடம் வேங்கடேசப்பெருமாள் கோயில்	1,186 ,,
6.	சென்னை கந்தசாமி கோயில்	600 ,,
7.	சென்னை ஏகாம்பரேசுவரர் கோயில்	219 ,,
8.	சென்னை வடபழநி ஆண்டவர் கோயில்	839 ,,
9.	சென்னை அருணசலேசுவரர் கோயில்	61 ,,
10.	சென்னை முண்டகக்கண்ணி அம்மன் கோயில்	336 ,,
11.	சென்னை பார்த்தசாரதி கோயில்	850 ,,
12.	திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயில்	3,048 ,,
13.	காஞ்சி தேவராஜ சுவாமி கோயில்	518 ,,
14.	திருவெண்காடு சுவேதாரண்யேசுவரர் கோயில்	582 ,,
15.	இராமேசுவரம் இராமநாதசுவாமி கோயில்	1,905 ,,
16.	சென்னை சிந்தாதிரிப்பேட்டை ஆதிகேசவப் பெருமாள் கோயில்	61 ,,
17.	மணவாளநல்லூர் கொளஞ்சி அப்பர் கோயில்	204 ,,
18.	கோவை பேரூர் பட்டீசுவரர் கோயில்	181 ,,
19.	திருவள்ளூர் வீரராகவ சுவாமி கோயில்	125 ,,
20.	படவேடு ரேணுகாம்பாள் கோயில்	131 ,,
21.	திருஇந்தளூர் பரிமளரங்கநாதசுவாமி கோயில்	193 ,,
22.	சிக்கல் நவநீதேசுவரர் கோயில்	129 ,,
23.	விருதாசலம் விருத்தகிரீசுவரர் கோயில்	569 ,,
24.	சோளிங்கபுரம் லெட்சுமி நரசிம்மர் கோயில்	1,485 ,,
25.	தருமபுரஆதீனக் கோயில்கள்	1,677 ,,
26.	சுவாமிமலை சுவாமிநாத சுவாமி கோயில்	1,711 ,,
27.	பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயில்	1,500 ,,
28.	சங்கரன்கோயில் சங்கரநாராயணர் கோயில்	3,081 ,,
29.	திருவாஞ்சியம் வாஞ்சிநாத சுவாமி கோயில்	48 ,,
30.	ஐயன்பாளையம் வாழைத்தோட்டத்து ஐயன் கோயில்	49 ,,
31.	பென்னாரி மாரியம்மன் கோயில்	1,075 ,,
32.	காரமடை அரங்கநாதசுவாமி கோயில்	233 ,,
33.	திருநீர்மலை அரங்கநாதசுவாமி கோயில்	640 ,,
34.	கடலூர் பாடலீசுவரர் கோயில்	67 ,,
35.	சிதம்பரம் தில்லைக்கோவிந்தராஜ சுவாமி கோயில்	75 ,,
36.	திருவானைக்கா ஜம்புகேசுவரர் கோயில்	370 ,,

37.	ஸ்ரீவில்லிபுத்தூர் நாச்சியார் கோயில்	100	கிராம்
38.	சிவகங்கை சமஸ்தானக் கோயில்கள்	2,720	,,
39.	கும்பகோணம் ஆதிகும்பேசுவரர் கோயில்	1,032	,,
40.	சிதம்பரம் தில்லையம்மன் கோயில்	219	,,
41.	தஞ்சை அரண்மனைக் கோயில்கள்	2,617	,,
42.	திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில்	550	,,
43.	கல்லங்குறிச்சி கலியுகவரதராஜர் கோயில்	398	,,
44.	காரைக்குடி கொப்புடைநாயகி அம்மன் கோயில்	250	,,
45.	நாகப்பட்டினம் சௌந்தரராஜப்பெருமாள் கோயில்	455	,,
46.	கீழ்வேளூர் அட்சயலிங்கசுவாமி கோயில்	119	,,
47.	திருவாரூர் தியாகராஜ சுவாமி கோயில்	106	,,
48.	தென்காசி காசிவிசுவநாதர் கோயில்	64	,,
49.	லால்குடி சப்தரிஷீசுவரர் கோயில்	1,160	,,
50.	ஸ்ரீபெரும்புதூர் ஆதிகேசவப் பெருமாள், பாஷ்யகாரசுவாமி கோயில்	270	,,

செய்திச் சுருக்கம்

நூற்றாண்டு விழா :

சைவசித்தாந்தப் பெருஞ் சான்றோரும், ஆங்கிலத்தில் சிவஞானபோதம் சிவஞானசித்தியார் முதலிய அரும்பெரும் நூல்களை மொழிபெயர்த்தவரும், 'சித்தாந்த தீபிகை' என்னும் இதழைத் தொடங்கி நடத்தி வந்தவரும், டாக்டர் ஜி. யூ. போப் போன்ற மேலைநாட்டு அறிஞர்கள் பலரால் நன்கு மதிக்கப் பெற்று அவர்களோடு நட்புரிமை கொண்டு விளங்கி வந்தவரும் ஆகிய பேரறிஞர் திரு. ஜே. எம். நல்லசுவாமி பிள்ளை, பி.ஏ.,பி.எல். அவர்களின் நூறுவது பிறந்த நாள் விழா, சென்னைத் தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில், உயர்நீதி மன்ற நீதிபதி திரு. ஆர். சதாசிவம், எம்.ஏ.,எம்.எல். அவர்கள் தலைமையில் மிகவும் சிறப்புறக் கொண்டாடப் பெற்றது.

திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய திரு. நல்லசுவாமி பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய நூலை, நமது அன்பியற் பெருந்தகை ஆகிய அறநிலைய ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி.ஏ., பி.எல்., அவர்கள் அதுபோது வெளியிடு செய்தார்கள்.

ஸ்ரீமத் வித்வான் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், இராவ் சாகிப் திரு. நல். முருகேச முதலியார், பி.ஏ., திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை, ஐ.ஏ.எஸ். (ரிடயர்டு), செந்தமிழ் வித்தகர் திரு. அ. ச. ஞானசம்பந்தம், எம்.ஏ., திரு. அ. சோமசுந்தரம் செட்டியார், எம்.ஏ. திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்., திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி.ஏ., பி.எல்., திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ. பி.எல்., ஆகிய பெருமக்கள் பலர் கலந்துகொண்டு சொற்பொழி வாற்றிச் சிறப்பித்தார்கள். (24-11-65).

★

பரசிவமும் அருவுருவத் திருமேனிகளும்

(சிவத்திரு. மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள்
சிவராஜயோகமடம், மேலையூர், திருவெண்காடு.)

பரமசிவம் என்னும் கடவுட் பொருள் முக்குணங்களைக் கடந்தது. எண் குணங்களால் நிறைந்தது. தன்னியல்பில் மாற்றமோ அழிவோ இல்லாதது அளவைகட் கெட்டாததாய், வேதங்களின் முடிபாகிய மகாவாக்கியத்தால் புகழப் பெறுவதாய், கருவிகரணங்களைக் கடந்து நிற்கும் நிலையில் அப்பொருள் நின்மல சிவம் எனப்பெறும். அத்தகைய நின்மலசிவம் தனது சத்தியின் மூலம் அருவுருவத் திருமேனியையும் உருவத் திருமேனிகளையும் தோற்றுவித்து உலகத்தை நடத்தும். அருவ நிலைக்கும் உருவ நிலைக்கும் மத்திம நிலையே அருவுருவ நிலையாகும், மனித உடலை வரைவதற்கு முதலில் ஓர் புறக்கோடு வரைந்து கொள்வது போல் உருவம் தோன்றுவதற்கு முந்திய நிலை அருவுருவ நிலை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஐந்து சாதாக்யங்களின் திரட்சியாய் அமைந்து நிற்பது சதாசிவம் என்னும் அருவுருவத் திருமேனி. சதாசிவத்தில் தோன்றிய மகேசுரம் என்ற மூர்த்தி இருபத்தைந்து உருவத் திருமேனிகளை எடுத்துக் கொண்டது. இந்த திருமேனிகளின் விவரம் இக்கட்டுரையின் இறுதியில் தெரிவிக்கப்பெறும், இங்கே சொல்லிய இருபத்தைந்து உருவத் திருமேனிகளும் சதாசிவத்திற்குக் காரணமான ஐந்து சாதாக்கியங்களும் இவையனைத்துக்கும் மூலமுதற் பொருளான நின்மலசிவமும் என்ற இந்த தத்துவங்கள் முப்பத்தொன்றும் நேரே சிவபேதங்களாகும். பொன்னும் அதனுல் செய்யப்பெற்ற ஆபரணங்களும் போல சிவமும் சிவ மூர்த்தங்களும் அபேதமானவை. சிவத்தின் குணங்களும் இயல்பும் இந்த மூர்த்தங்களிடமும் மாருமல் இருக்கும்.

சிவமும் சக்தியும் :

சக்தி என்பது சிவத்தின் வல்லமையே பெண்ணல்ல. அக்னியல் அடங்கியிருக்கும் சூடுபோல ஊழிக்காலத்தில் சத்தி சிவத்தில் அடங்கியிருக்கும். அக்னியல் அடங்கியிருக்கும் சூடு காற்றுல் கிளர்ந்தெழுவது போலச் சிவத்தில் அடங்கியிருக்கும் சத்தி சிவசங்கற்பத்தால் தொழிற்பாட்டுக்குத் தயாராகும்போது சிவம் சத்தியைத் தோற்றுவித்தது என்று சொல்கிறேம். சத்தி தான் சிவத்தில் தோன்றுவதும் ஒடுங்குவதுமாகிய மாறுபாட்டை அடையும். சிவம் ஒன்றில் தோன்றுவதோ ஒன்றில் ஒடுங்குவதோ இல்லை.

"முன்னருட் சத்தி தன்பால் மூளைக்கும்தான் முளையான்" என்பது சித்தியார்.

சத்தியிலிருந்து சிவம் :

சிவத்திலிருந்து தோன்றிய சத்தி சிவத்தின் தன்மை அடங்கிநிற்க சத்தியின் தன்மை மேற்பட்டு நிற்கும் சத்தியிலிருந்து கிளைக்கும் உட்பிரிவுகள் அனைத்தும் சிவம்—சத்தி இரண்டன் தன்மைகளும் உடையதாயிருக்கும். ஆனல் சிவத்தின் தன்மை மேற்பட்ட கூறு சிவம் என்றும், சத்தியின் தன்மை மேற்பட்ட கூறு சத்தி என்றும் கூறப்படும். உதாரணமாக சிவத்திலிருந்து முதன் முதலில் பராசத்தி முகிழ்த்தது. பராசத்தியிலிருந்து சிவ சாதாக்யம் உண்டாயிற்று. சிவ சாதாக்யம் சிவத்தின் தன்மை மேற்பட்டது. பராசத்தி சத்தியின் தன்மை மேற்பட்டது. சிவத்தின் தன்மைக்கும் சத்தியின் தன்மைக்கும் வேறுபாடு என்ன என்ற ஐயம் இங்கே எழும். சத்தி தொழிற்படுவது. சிவம் தொழிற்படா

திருந்து தொழிலின் பயனுறச் செய்வது. எய்யப்பட்ட ஒரு அம்பு தாக்குவதற்கு இடமில்லையானால் சென்று கொண்டே இருக்கும். அதுபோல ஒரு தொழில் பயன்தர வேண்டுமானால் அந்த தொழிலைத் தாங்கிப் பயனுறச் செய்யும் ஆதாரம் ஒன்று வேண்டும். "ஏதாவது ஒரு பொருள் புறவிசைகளில் பாதிக்கப்படாத வரையில் நிலையாகவோ அல்லது சீரான வேகத்திலோ இயங்கிக் கொண்டே இருக்கும்"—நியூடன்.

பாயும் சத்தி சத்தி. தாங்கும் சத்தி சிவம், சிவலிங்கத் திருமேனியின் தத்துவமும் இதுவே. தாங்கி நின்று பயனுறச் செய்யும் காரணத்தால் சிவம் தலைமைப் பொருளாகவும், சத்தி அடக்கப் பொருளாகவும் கூறப்பட்டது. பராசத்தியில் அடங்கியிருந்து சிவத்தின் கூறு மேற்பட்ட நிலையில் அதனைச் சிவ சாதாக்கியம் என்று சொல்கிறோம். எப்போதும் சிவ பாவத்தையுடையது என்பது சாதாக்கியம் என்ற சொல்லின் பொருளாகும். இந்த மாற்றங்களெல்லாம் மிக நுண்ணிய அருவ நிலையிலேயே நிகழ்ந்தன. மேலே சொல்லிய சத்திகளைத் தோற்றுவித்தது சிவம் ஆதலின் இச்செயலைச் சிவன்படைப்பு என்று நூல்கள் கூறுகின்றன. சத்திகளிலிருந்து சாதாக்யங்களும் சதாசிவம் மகேசுரம் ஆகிய மூர்த்திகளும் தோன்றியதைச் சத்தியின் படைப்பு என நூல்கள் கூறுகின்றன.

உருவத் திருமேனி ஏன்?

ஆன்மாக்கள் செய்யும் தவத்தை அளந்தறிந்து அதற்கேற்ற பயன் வழங்கவும், பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து இயக்கி நிர்வகிக்கவும் பரமசிவம் உருவத் திருமேனி கொள்வதாகச் சிவாகமங்கள் கூறுகின்றன. இறைவனே உருவத் திருமேனி கொண்டு ஆன்மாக்களை நெருங்கவில்லையானால் ஆன்மாக்கள் ஒரு போதும் இறைவனை யறியவே முடியாது.

> "அருவாகி நின்றானை ஆரறிவார் தானே
> உருவாகித் தோன்றானேல் உற்று"

என மெய்கண்ட தேவர் வினவுகின்றார் தெய்வ நம்பிக்கையிருந்தும் சிலர் இறைவனுக்கு உருவமில்லை எனக் கருதுகின்றனர். அதனைச் சைவசமயம் ஒப்புக்கொள்ளவில்லை. பிரபஞ்சமெங்கும் இறைவன் வியாபித்திருக்கிறான் என்பதையும் அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதையும் தெய்வக் கொள்கையுடைய அனைவரும் ஒத்துக் கொள்கின்றனர். பிரபஞ்சத்தில் நிலம் நீர் தீ என்ற மூன்று பூதங்களும் உருவப் பொருள்கள். காற்று அருவுருவப் பொருள். ஆகாயம் அருவப் பொருள். உருவப் பொருளில் உருவமாகவும் அருவுருவப் பொருளில் அருவமாகவும் தானே இறைவன் கலந்திருக்க முடியும். இதனாலும் இறைவனுக்கு உருவ முண்டு என்பது புலனாகிறது. இறைவனைக் காணாதவர்கள் தான் இறைவனுக்கு உருவமில்லை எனச் சொல்வார்கள். இறைவனே தன்னை நமக்கு உணர்த்திய பிறகு தான் நாம் அவனை உணரமுடியும் என்பது பெரியோர்கள் அனுபவம்.

> என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான்
> தன்னை நானும்முன் ஏதும் அறிந்திலேன்
> என்னைத் தன்னடி யானென் றறிதலும்
> தன்னை யானும் பிரானென் றறிந்தேனே

என அப்பர் சுவாமிகளும்

> "இணையன் நான் என்று உன்னை அறிவித் தென்னை
> ஆட்கொண் டெம்பிரானானாய்"

என மாணிக்கவாசகப் பெருமானும் கூறுகின்றனர்.

இறைவன் உருவம் கொள்வது எப்படி?

அலையில்லாத நீர்ப்பரப்பில் ஒரு குமிழி தோன்றுகிறது. வானவெளியில் இந்திரவில் உண்டாகிறது. கண்ணாடியுள் நிழல் தோன்றுகிறது. அருவப் பொருள் உருவமாக வருவதற்கு இவையெல்லாம் உவமையாகச் சொல்லப்படுகிறது. நீர்ப் பரப்பில் குமிழி எழுவதற்குக் காரணம் அடியிலிருந்து மேலெழுந்து வரும் காற்று என்பதை அறிவோம். இந்திரவில் மேகங்களின் தாக்குதல் எனவும் அறிவோம். அதுபோல சிவத்தின் சங்கல்பத்தால் உருவத்திருமேனி தோன்றுகிறது.

—தொடரும்.